ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்:—ஈ. வெ. ராமசாமி.

| |
|---|
| வியாபாரிகள் விளம்பரம். அங். 1க்கு ரூ. 1 |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2 |
| நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 5 | சென்னை, சுக்கில வருஷம் ஆடி மீ 13உ (28—7—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 12


கொக்கோகம்! கொக்கோகம்!

என்று குதூகலத்துடன் கூவிக்கொண்டிருப்போர்க்கும்,
இன்பரச நூல் தேவை தேவையென்று
ஏக்கமுற்றெழுதிக்கொண்டிருப்போர்க்கும் ஆவலைத் தீர்த்து
ஆனந்தத்தை ஊட்டும் அதிஅற்புத நூல்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

அந்நூல் எது?

## இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

(மூன்றாம் பதிப்பு)




அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன் 400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 2.

இது, காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரே விதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல் கொண்டு, ஒருவரை யொருவர் மணந்து கூடிக் களிப்புற்று, நற்சந்ததிகளைப் பெற்று, இல்லற நீதிகளை வழுவாமற் செய்து வாழ்ந்து வருவதே இன்ப வாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்து கொள்வதற்கேதுவாக நம் முன்னோர்கள் கொக்கோகம் முதலிய மதன நூல்களையும், வேறு பல அகப்பொருள் நூல்களையும் தமிழிலும், வடமொழியிலும் செய்துவைத்திருக்கின்றனர். அன்னிய நாட்டார்களும், அராபி, இந்துஸ்தானி, கன்னடம், தெலுங்கு, நாகரம், மராட்டி, இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய பற்பல பாஷைகளிலும் இத்தகைய இன்பரச நூல்கள் பலவற்றை வெளியிட்டிருக்கின்றனர் எனினும் நம் தமிழ் நாட்டிலுள்ளவர்களிற் பெரும்பான்மையோர் அந்நூல்களைக் கிரமப்படி கற்றுக் கொள்ளாததால் இன்ப வாழ்க்கையின் இரகசியங்களைத் தெரிந்துகொள்ளாதவர்களாய்க் கலவியின்பத்தை இழந்து கவலைகொண்டு துன்புறுகின்றனர்; மணஞ்செய்தும் மகிழ்ச்சியின்றி வருந்துகின்றனர்; மனைவியிருந்தும் மைந்தரைப் பெறாமல் வாடுகின்றனர்; புருஷனிருந்தும் புத்திரரைப் பெறாமல் புலம்புகின்றனர்; பணமிருந்தும் குணமில்லாமல் பரிதபிக்கின்றனர்.

ஆகலின், இப்போர்ப்பட்டவர்கள் இக்குறைகளினின்றும் நீங்கி காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் போகானந்தக் கடலில் மூழ்கி, நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற்கேதுவாயிருக்கும்படி பற்பல இன்ப மார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ் நடையில் வெளியிடப்பெற்றிருக்கிறது இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின்கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், பயன் விளக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அநுசரித்தால்தான் அளவற்ற ஆரோக்கியமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடையவேண்டிய இன்பத்தையும், மறுமை யின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம். விலை ரு. 2.

(5) விலாசம்:— கருணாநிதி டிப்போ, 1/6 வெங்கடேசமேஸ்திரி தெரு, சென்னை.

சுகிலஹு 15-ம் வருட ஆரம்பம் ஆடிமீ 1உ

# ஆனந்தபோதினி

64 பக்கங்களுடனும், முசப்பு ஆட்டோன் படங்களுடனும், லயன் பிளாக்குகளுடனும் வெளிவரும்

## ஓர் முதல்தர மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது.

இதில் நமது தேசாசார இலௌகீக வைதீக விஷயங்களும், மாதர், சிறுவர், சிறுமியர்களுக்குத் தக்க நற்போதனைகளும் தேசாபிவிருத்திக்கு அவசியமான பல விஷயங்களும் பிரசுரிக்கப்படுகின்றன. தமிழ் நாட்டாரின் பூரண அன்பைப் பெற்றிருக்கும் இச்சஞ்சிகை ஒவ்வொருவரும் அவசியம் வாசித்தற்குரியது.

மாதிரிகாபி இனாம். வருட சந்தா தபாற்கூலி யுட்பட உள்நாட்டிற்கு ரூ. 1 0 0 வெளிநாட்டிற்கு ரூ. 1 4 0


ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்

(5)



எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை.

இனாம்! இனாம்!!



மூளையில் இரிடியம் உள்ள 14 கராட் தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம். எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்கு கிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம்விலை ரூ. 3-15-0. உத்தரவாதமானது.

உடனே எழுதுங்கள்.

ஜீனன் வாட்சு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு,

(3) மதராஸ்.



# முன்னேற்றம்

இஃது

சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரில் இருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி

இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,

"முன்னேற்றம்"

(எப்) 155, ஜீல்ரோட், சிங்கப்பூர்



## பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடி அரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.


இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளிவரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம்:— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை



ரூ. 2—14—0. ரூ. 2—14—0

நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் வெரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். டஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச் செயலாம். விலை 1-க்கு ரூ. 2—14—0.

கனடியன் வாட்சு பீபிள்,

ஸோல் ஏஜண்ட்ஸ்,

(3) ஜார்ஜ் டவுன், மதராஸ்



தங்க மெடல்கள் பெற்ற

மலையாள நாட்டுத் துணிகள்

இரணியல் நேரியல் முதலிய வஸ்திரங்கள், தோர்த்து, துண்டுகள், ஜரிகை துப்பட்டாக்கள் நெசவு செய்து ஆர்டருக்கு அனுப்பப்படும்.

இ. எஸ். மாதவன் பிள்ளை,

சுதேசி ஜவுளி ஸ்டோர்,

இரணியல் Neyyoor P. O,

(1) Travancore.



## குமரன்

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை,

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும், கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—

வாரப்பதிப்பு ரூ. 5—0—0

(எப்) மாதப்பதிப்பு ரூ. 1—8—0



ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு

மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும்.

டப்பி 1 ரூபாய் 2—0—0

ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,

(3) தபால்பெட்டி 119. மதராஸ்.



## "ரஸ்மக்"

முகப்பருக்களுக்கு

ஆச்சரியமான மருந்து

டப்பி விலை 12 அணா.

விலாசம்:—

கேஷலன் கம்பெனி,

(33) வேலூர், (வட ஆர்காடு.)

# இராமாயணத்திலுள்ள தேசியமென்ன?

(கைவல்யம்)

திரு கலியாணசுந்தர முதலியார் அவர்கள் காங்கிரஸ் மேடையிலிருந்துகொண்டு சனசமூகங்களுக்குகாவியங்களைப் படியுங்களென்று உபதேசம் செய்கிறார். அதைப்பற்றிய ஒரு பாகம்முன் வியாசத்திலெழுதினேன். இந்த வியாசத்தில் இராமயணத்திலுள்ள தேசியத்தைக் கவனிப்போம்.

இராமாயணத்திற்கு நமது தேசியத்தைப்பற்றி ஏதாவது தெரியுமா? நமக்கு வேண்டிய தேசியம் இராமாயணத்திலிருக்கிறதா? அப்படி இருப்பதானுல் எந்தவிதமாக விருக்கிறது? கதை நடந்து முப்பத்தெட்டரை லட்சவருடத்திற்கு மேலாகிறதென்று சொல்லப்படும் ராமாயணத்திற்கும் இந்த இருபதாம் நூற்றாண்டில் நடக்கவேண்டிய நம்முடைய தேசியத்திற்கும் எந்தவிதத்தால் பொருத்தம் கற்பிக்கப்படுகிறது? இராமாயணமோ தேவாம்ச முடையது; தேவர்களுடைய கஷ்டத்தைப் போக்க வந்தது. நமது காங்கிரஸ் வெள்ளைக்காரச் சம்மந்தமுடையது. மனிதர்களாகிய நம்முடைய கஷ்டத்தைப் போக்கவந்தது. கடவுள் எல்லாக் கஷ்டத்தையும் தீர்க்கும் சக்தியுடையவர் என்று சொல்லப்படுவது பொது வார்த்தை. அந்த வார்த்தை இதுவரையிலும் நமக்கு அர்த்தமாகவில்லை. அந்த வார்த்தையைப் பின்பற்றி நம் அநேககாலமாக நாம் நடந்துவந்திருக்கிறோம். தன் வருத்தம் முயற்சியினுல் அடையலாம் பரமபதம் என்று வசிஷ்டர் ராமருக்கு ஞானவாசிஷ்டத்தில் உபதேசம் செய்திருப்பதாகச் சொல்லுவதை நினைக்கையில் கடவுள் காப்பாற்றுவார் என்னும் வார்த்தையைக்காப்பாற்றுவது முயற்சி யென்பதுவிளங்கும். இங்கு இதல்ல விவகாரம். இதுவரையிலும் இராமாயணம் நமக்கு எவ்விதத்தில் உபயோகப்பட்டிருக்கிறது? அதனுல் நமது நாட்டில் எந்த தேசியம் காப்பாற்றப்பட்டிருக்கிறது? அதனுல் சன சமூகம் எந்த வித நன்மையை அடைந்திருக்கிறது? என்பதே இங்கு கவனிக்கப்படவேண்டும்.

இந்தஇருபதாம்நூற்றாண்டிலுள்ள தேசியங்களெல்லாம் சன சமூகங்களின் அபிப்பிராயப்படியே ராஜ்ஜியபாரம் நடத்தவேண்டுமென்று தீர்மானம் செய்கின்றன. ராமருடைய சூரிய வம்சமும் வாலியினுடைய குரங்கு வம்சமும், ராவணனுடைய ராட்சதவம்சமும் சேர்ந்தது ராமாயணம். இவர்களுடைய கொடிவழிப்பட்டிகையைப் பார்த்தால் அது மனத்திற்கெட்டாத அசிங்கமான கற்பனை என்பது உங்களுக்குத்தெரியும். இவர்களுடைய ராஜ்ஜியபாரங்களில் அவரவர்கள் இஷ்டம்போல் நடந்தார்களேயல்லாமல் சனங்களுடைய அபிப்பிராயமோ வேண்டுகோளோ கேட்டதாகப்பண்டிதர்கள் திருத்திச் சொல்லலாமே ஒழியக் கதையில் இல்லை. அயோத்தியிலுள்ள ஜனங்களும் மந்திரிகளும் புரோகிதர்களும் ராமனைக்காட்டுக்குப்போகாமலிருக்கத்தடுத்தும் ராமர் சிறிய தாயாரின் வார்த்தையால் மறத்ததும் தசரதன் அறுபதினாயிரம் பெண்களை விவாகம் செய்துராஜ்ஜியமெல்லாம் அந்தப்புரமாக்கி அதிலிருந்த பெண்களெல்லாம் நுழைப்புண்டு அவதிப்பட்டு அலங்கோலத்தாழிந்ததும், இளைய தாரத்தின் மோகத்தால் மூத்ததாரத்தின் மூத்த பிள்ளையின் உரிமையைக் கெடுத்ததும், பரதன் பாதரட்சையைச் சிம்மாசனமேற்றினதும், அது ராஜ்யபாரம்செய்ததும்ராஜாக்களுடையதேச்சாதிகாரமல்லவோ. அவை இப்பொழுது நமது தேசியத்திற்குப் பொருந்துமா?

இராமாயணத்திற்கும்தேசியத்திற்கும் சம்பந்தமில்லையென்றும், ராமாயணமும் மற்ற புராணங்களும் பரவின இடங்களில்தான் கொடுமையும் அக்கிரமங்களும் அதிகம் நடக்கின்றனவென்றும், புராணங்களே நம்முடைய மதங்களாய் விட்டபடியால் நமது நன்னிலைமையும், நாடும் வீழ்ச்சியடைந்துவிட்டதென்றும், இன்னும் அதையே படித்துக்கொண்டிருந்தால் தேசிய மென்பது நம்மிடம் தங்காதென்றும், தர்க்கத்திற்கும் புத்திக்கும் உலக அனுபோகத்திற்கும் ஒத்த நியாயங்களை எடுத்துச் சொல்லுகிறோம். நீங்களும் ஆலோசித்துப் பாருங்கள்.

தசரதர் அறுபதினாயிர வருடம் அரசாண்டார். அவருக்குப் பெண்ஜாதிகள் அறுபதினாயிரம் பேர்; இவர்களும், இவரும்,இவர் மந்திரி புரோகிதர்களும், ராமர் பட்டாபிஷேக காலத்தில் "எப்படா வந்தாய் ராமா!" என்று ராமரைக் கட்டித்தழுவின தசரதனுடைய நண்பனான கிழவனும், அயோத்தியிலுள்ள குடிகளும் அறுபதினாயிர வருடமே இருந்ததாக இருக்கட்டும். தசரதன் அறுபதினாயிரம் பெண்சாதியைக் கட்டிக் கொண்டார் என்னும் ராமாயண உபதேசத்தைக் கேட்ட ராஜபுத்திர ராஜாக்களெல்லாம் நூற்றுக்கணக்கான பெண்களைக்கட்டி, அதனுல் அநேக விரோத சண்டைகளை ஏற்று, அவற்றுல் மாண்டு, அவர்களுடன் நூற்றுக்கணக்கான அழகும் வாலிபமுமுடைய பெண்களைக் கொளுத்திய கொடுமையின் துக்கமே நாடெல்லாம் நிறைந்து கிடந்தது. பல ராஜாக்கள் பல பெண்சாதிகளினுல் நீதியாக ராஜ்ஜியபாரத்தைச் செய்ய முடியாத நிலைமையோடு பாழானுர்கள். நீதியோடு ராஜ்ஜியபாரம் செய்யப்பட்ட சில ராஜாக்களை இளையவள் மூத்தவள் என்னும் துவேஷத்தால் மருந்திட்டால் கொல்ல முயற்சித்தார்கள்; கொன்றுர்கள். சிவாஜி மகாராஜாவும் பெண்ஜாதியின் மருந்திட்டால் வியாதியை அடைந்தாரென்று சொல்லப்படுகிறது. இதுவே நமது ராஜாக்களின் ராஜ்ஜிய விவகாரமாயிருந்ததனுலல்லவா அந்நியர் மிக லேசாக நமது நாட்டை வசப்படுத்தினுர்கள். இத்தனைக்கும் காரணம் ராமாயணம்.

தசரத சக்கரவர்த்தியின் பெண்ஜாதிகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அரண்மனை வேண்டும்; குறைந்தது பத்து வேலைக்காரிகளாவது வேண்டும். அதிலும் குறைந்தால் அவசியம் ஆறுபேர் வேண்டும். அப்பொழுது 360000 வேலைக்காரியும், பெண்ஜாதி 60000 மும் சேர்த்து 420000 பேர்களாயிற்று வேலைக்காரிகளுக்குக் குடும்பம் வேண்டும். இல்லையேல் பெண்களைக்கொடுமைப்படுத்தும் ராமராஜ்ஜிய மென்கிற பெயர் வந்துவிடும். ஆனதால் ஒரு வேலைக்காரிக்கு ஒரு புருடன், ஒரு பெண், ஒருஆண் என குழந்தைகள் இரண்டு ஆகக்கூடி மூன்று பேராயிற்று. இவர்கள்குடும்பங்களும் இதற்குமேல் காவற்காரர்களையும் சாமான் சேகரிப்பவர்களையும், கொடுப்பவர்களையும், வண்ணான் முதற்கொண்ட சிப்பந்திகளையும், கணக்குப்பிள்ளை காரியஸ்தர்களையும் கூட்டினுல் பலலட்சங்களாகி சென்னை கார்ப்பொரேஷனைப்போன்றநான்கு கார்ப்பொரேஷன்களாகிவிடும். ஏராளமான பணம் வரும் சென்னைமுனிசிபல் எல்லையைச் சுகாதாரத்துடன் வைத்திருக்க உலகமெல்லாம் கட்டியாளும் ஆங்கிலேய கவர்ன்மெண்டு பணமில்லையென்கிறது. யாதொரு வரும்படியுமில்லாத தசரதனின் பெண்ஜாதிகளுடைய முனிசிபாலிட்டியை வைத்துக்காப்பாற்றுவதற்கு அயோத்தியின் வரும்படி என்ன? ராம ராஜ்யத்தில் கள்ளில்லை, கஞ்சாவில்லை, டிராமாயில்லை, சினிமா இல்லை, மோட்டாரில்லை, மின்சாரவண்டியில்லை, குழாய்த் தண்ணீருமில்லை, காப்பிக் கடையுமில்லை, குதிரைப் பந்தயமுமில்லை. வேறு வரும்படி எல்லாம் இதற்கே செலவு செய்துவிட்டாம் மற்ற ராஜ்ஜிபச் செலவுக்கு என்ன செய்வது? அந்த ராஜ்யத்தின் நீளமும் அகலமும் எவ்வளவு? தங்கமும் பொன்னும் தானே வந்தாலும் ஆகாரப் பொருள் அகப்பட வேண்டுமே. தசரதனுல்முன் உதவிபெற்ற தேவேந்திரன் அமிர்தம் கொடுத்திருக்கலாம். பெண்ஜாதிகளெல்லாம் அறைச்சாப்பாட்டிலிருந்தாலும் அவர்கள் ஆசைக்கு ராஜா அந்தப்புரம் போக வேண்டுமே? காலொரு தரம் ஒரு பெண்ஜாதியைப் பார்த்தாலும் மறுதரம் வந்து பார்ப்பதற்கு 167 வருடத்திற்கு மேல் வேண்டுமே. இந்தக் கணக்கு முறையிலும் இத்தனை பேரையும் விட்டு கைகேசியிடம் தன்னை ஒப்பித்ததும் மற்றவர்களின் வாழ்க்கை நிலையும் சக்கிரவர்த்தித் திருமகனின் கருணைக்கும் தேவாம்சத்திற்கும் தான் அர்த்தமாகும் அந்த தேசியமல்லவே நாம் விரும்புவது? அதை நாம் விரும்பினுலும் அது நமக்கு எப்படி வரும்? இன்னொருதரம் திரு. கலியாணசுந்தர முதலியார் அதை விவரமாகத் தெரியப்படுத்தட்டும்.

ஆஸ்டிரியா சக்கரவர்த்தி மகளைத் தான் இரண்டாவது விவாகம்செய்து கொண்டது குற்றமென உணர்ந்து சொன்ன நெப்போலியனும், ராஜ்ய விவகாரத்தில் குறுக்கிட்ட பெண்ஜாதியை நீக்கிவிட்ட வீரன் கமால் பாட்சாவும், தன்னுடைய ஒரேபெண்ஜாதியிடம் பேசுவதற்கு நேரமில்லாத முசோலினியும் ஆகிய இவர்களுடைய தேசியமல்லவோ இப்பொழுது உலகத்தில் மேன்மையடைந்திருக்கிறது.

ராட்சதர்களின் பிறப்பும், அவர்கள் கதைகளும், வாலி, சுக்ரீவன், அநுமான் இவர்கள் பிறப்பும், வாலி அமிர்தம் கடைந்ததும், அநுமான் சூரியனை சாப்பிட்டதும், அவனிடம் வித்தை பயின்றதும் கேட்டப்பள்ளிப் பிள்ளைகள்கூட நம்மைப் பரிகாசம் செய்கிறார்கள். இவர்கள் தேசியமோ தேவாம்சத்திற்குமேல் தங்கள் அம்சத்தையுடையது. திரு. கலியாணசுந்தரமுதலியார் "ஒரு இளங்கன்று பிறக்கத்தலைகெட்டுக்கள்" என்று சைவமகாநாட்டில் சொல்லுகிறார். நமது பக்கத்து வீட்டானை துருக்கி சீனா, ஜப்பான் முதலிய நாடுகள் தவம் கிடந்ததைப் பார்த்தோமில்லை. அந்நாட்டு மக்கள் சமயத்தின் பேராலுள்ள கொடுமைகளை நீக்கினுர்கள், தேசியம்வந்துவிட்டது. திரு. முதலியார் அவர்கள் சொல்லுவதுபோல தவந்தான் கிடக்க எப்படி நம்மால் முடியும்? பத்துத் தலையும் இருபது கையுமாயிருக்கிறது ஒரு தலையும் இரண்டு கைகளையும் கிள்ளி எறிவதற்கு? நமக்குள்ளதெல்லாம் ஒருதலை இரண்டு கைதான். அதுவுமல்லாமல் அவர்கள் பிறந்த உடனே பிர்மா வந்து சாகாத வரம் கொடுத்துப்போகிறுர். தலையைக் கிள்ளினுலும கையை வெட்டினுலும் அவர்களுக்கு உயிர்போவதில்லை. நமக்கு அந்த வரமுண்டா? நாம்தான் பிர்மாவின் காலிருந்து பிறந்தோம். ஆனுல் அவருடைய முகத்திலிருந்து பிறந்த பிள்ளைகளுக்கும் அந்த வரமில்லை. ராவண ராட்சதர்கள் பிர்மாவின் பேரப்பிள்ளையான விஸ்ரவசுவின் பிள்ளைகள். குரங்குகளோ பிர்மாவின் பிள்ளைகள்; சிவனுடைய சுக்கிலங்கள்; தேவர்களின் அம்சங்கள். ராமரோ பிர்மாவின் தகப்பனுன விஷ்ணு. லட்சுமணரோ ஆதி

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்.

## ராமாயணம் – ஆரணியகாண்டம்

—————0—————

(கட்டுரை—9)

(திரு. சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கம் 67 முதல் 68 முடிய)

இராமன் இலக்குவன் சொன்னதை ஒப்புக்கொண்டு அவன் விரும்பியபடி அக்காடுகளில் தேடத் தொடங்குகையில் அப்போர்க்களத்திற்குச் சற்று தெற்கே மலைபோல இரத்தம் பெருகிக் கிடந்த சடாயுவைக் கண்டனன். உடனே இராமன், "கழுகுருக் கொண்டு காடெங்கும் திரியும் இவ்வரக்கனே சீதையைத் தின்றவன். இவன் சீதையைத் தின்றுவிட்டு இளைப்பாறுகிறான்" என்றுகூறி சடாயுவின்மேல் பாய்ந்தான். சடாயு இரத்தத்தைக் கக்கிக்கொண்டு, 'சீதையையும் என் உயிரையும் இராவணன் கொண்டு போய்விட்டான். சீதையை எடுத்துப் போவதைக் கண்டு நான் அவனோடு போரிட நான் எய்த்த சமயம் பார்த்து அவன் என்னை வெட்டித் தள்ளிச் சீதையோடு விண் வழியே போனான். இராவணனால் நான் கொல்லப்பட்டிருக்கிறேன். நீயும் என்னைக் கொல்ல வேண்டாம்" என்று வேண்டிற்று. இராமன் அது கேட்டு அதைக் கட்டிக் கொண்டு அழுதான். அவன், "நாடிழந்தேன், உறவினரைப் பிரிந்தேன், நட்டில் பிச்சையெடுத்தாவது பிழைக்கக் கூடாதா? அதுவும் இல்லாமல் காட்டுக்குத் துரத்தப்பட்டேன். இப்பறவையையும் கொன்றேன். நான் எங்கே போனாலும் என் தீவினையும் கூடவருகிறது" என்று புலம்பி அதைத் தடவிக் கொடுத்தான். அவன், "சடாயுவே! சீதை எங்கே!" என்று கூறி மூச்சற்று வீழ்ந்தான். பின் தெளிந்து இராமன், "என் பொருட்டு உயிரிழந்த சடாயுவே! விவரமாக நடந்ததைக் கூறும். இராவணன் என் சீதையைத் தூக்கிப் போனான்; நான் அவனுக்கு என்ன குற்றம் செய்தேன்? அவன் பலம் என்ன? அவன் செயல் யாது? அவன் வாழ்வது எவ்விடத்தில்?" என வினவினன்.

சடாயு, "மாயையால் பெருங் காற்றும் பெருமழையும் உண்டு பண்ணி அரக்கர் தலைவனாகிய இராவணன் சீதையைத் தூக்கிப்போனான். அவன் என்னை வெட்டிவிட்டுத் தெற்கே போனான். என் கண்கள் சுழல்கின்றன. நான் இதோ இறக்கப் போகின்றேன். நீ சீதையை அடைவாய்!!" என்றுகூறிற்று. அப்போது சடாயுவின் வாயிலிருந்து இரத்தத்துடன் மாமிசம் விழுந்தது. சடாயு "விச்ரவசின் மகன், குபேரனுடைய தம்பி" எனச் சொல்லிக்கொண்டே உயிரை விட்டது. இராமன் "சொல்லும் சொல்லும்," என்று வேண்டினான். அது கால்களைப் பரப்பிக்கொண்டு தலையைக் கீழேபோட்டு உயிரை விட்டது. இராமன் "ஐயோ! பல தலைமுறையாகப் பறவைகளுக்கெல்லாம் அரசனாகக் கிடைத்த அரசாட்சியை விட்டு எனக்காக இது உயிரை விட்டது. இதனை நம் தந்தையாகக் கொண்டதால் பிரேதக்கிரியைகளைச் செய்வோம்" என்றனன். இலக்குவன் விறகடுக்கினான். இராமன் அதில் சடாயுவைத் தூக்கிவைத்து எரித்தனன். பிறகு அவர்கள் காட்டிற்குட்போய் கொழுத்த பெரிய மான்களை அடித்துக்கொண்டுவந்து தண்ணீர் இறைத்தார்கள். பின், அவர்கள் தருப்பைகளைப் பரப்பி மாமிசத்தைப் பிண்டங்களாகப் பிடித்துவைத்தார்கள். ஆனால் சடாயு மேலான பதவியை அடைந்தது. இராமனும் இலக்குவனும்சீதையைத் தேடிப் போனார்கள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

சடாயு இராவணனால் அடிக்கப்பட்டு இரத்தத்தைக் கக்கிக்கொண்டு கிடப்பதைக் கண்டு இராமன் அதை கழுகுருக்கொண்டு இதுவரை தன்னையேமாற்றி இப்போது சீதையைக் கொன்ற அரக்கனாகவே எண்ணி அதன்மேல் கொல்லப் பாய்கிறான். இவனுக்காகத் தன் உயிரையும்கொடுத்த சடாயுவை இந்நன்றி கெட்ட இராமன் இவ்வாறு கொல்லத் துணிகின்றனனே! இவனுடைய இழிசெயல் இருந்தவாறு மிக அழகிது! இந்நன்றி கெட்ட நரனையும் தெய்வம்போல் வணங்குகின்றனரே சிலர்! அவர்கள் இதனை நன்கு படித்துணர்ந்து தங்கள் குற்றத்தைத் தெரிந்து நல்வழிப்படுவார்களாக.

இராமன் தூரத்துப் பார்வைக்குச் சடாயுவை அடையாளம் கண்டு உணராமல் இவ்வாறு ஐயுற்றுப் பாய்ந்தான் என்றால் இவன் கண் அவ்வளவு குறுகிய நோக்க முடையதா? நெடுநாளாகப் பழகிய சடாயுவையே அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் அரக்கனோ என ஐயுற்றான் எனின் இவனோடு புதுப்பழக்கம் செய்பவர்கள் பாடு இன்னும் ஆபத்தாக அன்றோ முடியும்போலிருக்கின்றது! இராமன் அற்பபுத்தியுள்ளவனாக இருக்க வேண்டும், இல்லையேல்கண் சரியாகத்தெரியாதவனாக இருக்க வேண்டும். எவ்வாற்றானும் இவனைத் தெய்வநிலையினன் என்பது அறியாமையன்றோ?

இராமன் சடாயுவின் கிட்டப் போய் நின்றும் அதைத் தனக்கு வேண்டியது என்று உணராமல் கொல்ல முயல்கிறான். ஏனெனில் இராமன் சடாயுவை இதுவரை தன்னோடு பழகி ஏமாற்றி வந்ததோடு சீதையைக் கொன்று தின்னச் சமய பார்த்திருந்த ஓர் அரக்கனாகவே துணிகிறான். அதனால் அவன் அதன் கிட்டப்போய், "கழுகுருக்கொண்டு இக்காடெங்கும் திரிந்து வந்த இவ்வரக்கனே சீதையைத் தின்று இளைப்பாறுகிறான்." என்று கொல்ல யத்தனிக்கிறான். என்னே பரிதாபம்! சடாயுவே இவனுக்காக உயிரைக் கொடுத்திருக்கிறது! அது மிகவும் பயந்து, "அப்பா! நான் இராவணனால் கொல்லப்பட்டுச் சாகும் நிலையில் கிடக்கிறேன், என்னை நீயும் கொல்லவேண்டாம்" என்று பரிதாபமாகக் கத்திற்று. இப்படியும் இராமனைப்போல அற்பபுத்தியுடைய கொலை பாதகரும் உண்டோ? இக்கொலை பாதகனையும் நம்பி உயிரிழந்ததே சடாயு! இராமன் மாடுபறிகொடுத்தவர்களுக்குச் செடியெல்லாம் கண் என்பது போல தனக்காக உயிரையும் கொடுத்த சடாயுவைத்தன்பகைவனாகவே கொண்டனன். ஆனால், கொஞ்சமாவது பகுத்தறிவுடையவர் இவனைப்போல நடப்பார்களா? ஆதலின் சாதாரண மனிதரோடேனும் இணையிட முடியாத இழிமதியாளனாகிய இராமனைச் சிலர் தெய்வத்தோடு ஒப்பிட்டு வணங்குவது அறியாமையேயாம்.

சடாயு தன்னைக் கொன்று இராவணன் சீதையைக்கொண்டு போய்விட்டான் என்று கூறிய பிறகு இராமன் தன்னுடைய தவறான எண்ணத்தை உணர்கிறான். அவன், "ஐயோ! சடாயுவும் என் பொருட்டு உயிர்விட்டதே! என வருந்தி, 'சடாயுவே! சீதை எங்கே?' என அலறி வீழ்கிறான். இதனால் சடாயு செத்தது அவனுக்கு அதிக வருத்தத்தைத் தரவில்லை, சீதை பிரிந்ததற்காகவே அவன் அதிகமாக வருந்தியவனாவன் என அறியலாம் தன் பொருட்டுச் சண்டையிட்டுக் குற்றுயிராகக் கிடக்கும் சடாயுவுக்கு உயிர்தர அவன் ஒருசிறிதும் முயன்றானில்லை. அது இரத்தத்தைக் கக்கிக்கொண்டு சாகும் நிலையில் இருக்கிறது. இத்தீயவனாகிய கல்நெஞ்சன் இராமன், "சடாயுவே! ஐயோ என் மனைவியை இராவணன் தூக்கிப் போய்விட்டானே! நான் அவனுக்கு என்ன குற்றம் செய்தேன்? இராவணன் எத்தகையவன் கூறும்." என்று தன் காரியம் பார்ப்பதிலேயே கண்ணாக இருக்கிறான். இத்தன்காரியக் குட்டி உபசாரத்திற்காவது சடாயுவுக்கும் புண்ணில் மருந்து கட்டிப் பிழைப்பிக்க முயற்சி செய்தானா? இவனோ தெய்வம்? இவனை நம்பியிருப்போர் சடாயுவின் கதியைச் சிந்திப்பார்களாக! தன் பொருட்டு உயிரையும் கொடுத்த சடாயுவையே அரக்கனென்று தன் அற்ப மதியால் கருதிக் கொல்ல யத்தனித்ததோடு உண்மை தெரிந்த பின்னரும் அப்பறவையின் நிலையைக் கண்டு கொஞ்சமும் மனம் இரங்காமலும் அதன் நோயைத் தணிக்கக் கொஞ்சமும் முயலாமலும் தன் மனைவியாகியசீதையைப்பற்றிய செய்தியையே அதனிடம் கேட்டு நின்றவனாகிய இராமனா சாயுகதியில் மானம் பொறுக்கமாட்டாமல் அவன் விழுந்து செத்த இத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கப்பால் இவர்களைவந்து காப்பாற்றப் போகிறான்! ஆற்றில் விழுந்து செத்து மீன்களுக்கிரையாகிய இராமனுடைய உடலா இவர்களை இப்போது வந்து காத்து முத்திக்கு அழைத்துப் போகப் போகிறது? ஆதலின் இவனைத் தெய்வமென நம்பி வழிபடுவோர் இதனை நன்கு சிந்தித்து தாங்கள் அறியாமையால் நடந்த வழியைவிட்டு நல்வழியை அடைவார்களாக! இராமன் தெய்வ நிலை பெற்றுளனெனக் கொண்டாலும் அவனுக்காக உயிரையும் கொடுத்த சடாயுவினிடமே இரங்காமல் அதைக் கொல்லவும் துணிந்தவன் இவர்களுக்கு அருள் செய்யும் இரக்கமுள்ள மனத்தினனாவது எங்ஙனம்? அறிஞர்காள்! சிந்தித்து உண்மை காணுங்கள்.

இராமன் தன் காரியக்குட்டி என்பதை முன்னரும் கண்டோம். தன் தந்தையாகிய தசரதன் எவ்வளவு தூரம் தன் பக்கத்திலேயே காடேகாமல் இருக்கும்படி வேண்டியும் பின்னாலேயே ஓடி வந்தும் இராமன் அவனுக்காக மனம் இரங்காமல் அவன் தன்னைப் பிரிந்தால் செத்துப்போவானெனத் தெரிந்துகொண்டே அவன் செத்தாலும் கவலையில்லை, தனக்கு நாடு கிடைக்க வழியாவது அப்போது காடேகி பரதனை ஏமாற்றுவதே எனத் துணிந்து காடேகினன். இத்தன் காரியக் குட்டியாகிய இராமனை நோக்கி சடாயு, "மாயையால் பெருங் காற்றும் பெரு மழையும் உண்டுபண்ணி அரக்கர் தலைவனாகிய இராவணன் தூக்கிப் போனான்." என்று கூறுகிறது. இது உண்மையாயின் வால்மீகி இராவணன் தூக்கிப் போகும் போது இதைப்பற்றி ஒன்றும் கூறாததென்னை? ஆதலின் இது வால்மீகியின் பொருந்தா உரையே யாகின்றது. முன்னுக்குப் பின் முரணாக வால்மீகி கூறினார். இதையே மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 187ல், "இதை அந்த இடத்தில் ஏன் சொல்லவில்லை யென்பதைக் கவனிக்கவும்." எனக்குறிப்பெழுதியிருக்கிறார்.

சடாயுக்கு உயிர் போய்க்கொண்டிருக்கிறதை நேரில் கண்டும் இரா

(தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

# திருநெல்வேலி ஜில்லா 2-வது சுயமரியாதை மகாநாடு

வரவேற்புக்கழகத் தலைவர் பேருரையும், தலைவர் பேருரையும்.

20 21 தேதிகளில் நடைபெற்ற திருநெல்வேலி ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவர் வக்கீல் திருவாளர் ஆர். சுப்பையா பி. ஏ. அவர்கள் நிகழ்த்திய வரவேற்புச் சொற்பொழிவு வருமாறு:—

*சகோதர சகோதரிகளே,*

மலை, நிலம், நதி, கடல் இவற்றின் வளம் ஒருங்கே யமையப்பெற்றதாய், உலகத்திலேயே விலை மிகுந்து நிலப்பாகுபாட்டில் மருத நிலத்தின் பாற்பட்ட நன்செய் நிலமும், மனிதர்க்கு உணவைப்போன்ற இன்றியமையாத உடுக்கைக்கு வேண்டிய பருத்தியையும், இன்னும் நவதானியங்களையும் உற்பத்திசெய்யும் செழித்த கரிசல் நிலமும், முடிமன்னர் மார்பை யலங்கரிக்கும் முத்துக்களின் பிறப்பிடம் தன்னைபடுத்துள்ளதாயழகிய மாளிகைகளாற் பொலிவுற்ற பட்டினங்களையும், ஏழைமக்கட்கு வேண்டிய யாவற்றையு மளித்துப் பல கரும்பு ஆலைகள் ஏற்படுத்துவதற்குப் போதுமான தால விருட்சங்களையுமுடைய நெய்தல் நிலமும், உலகினர் மெச்சும் குற்றால நீர் வீழ்ச்சியும், எத்தனையோ மில்களை இயக்கவல்ல பாபநாச நீர்வீழ்ச்சியும், உலகிற்கே நடுநாயகமாய் விளங்கும் கொழும்பு கருக்கணித்தான சென்னை இராஜதானியின் இரண்டாவது துறைமுகப்பட்டினமும் தன்னிடத்தே யுடையதாய், மகா கவிகளும், இலக்கிய இலக்கண வித்துவான்களும் வியாக்கியான கர்த்தர்களும், தமிழ் மொழி வல்லார்களுமாய நம்மாழ்வார் சிவஞான முனிவர், குமரகுருபரர், சுவாமிநாத தேசிகர், நமச்சிவாயப் புலவர் திரிகூடப்பக் கவிராயர்- அமிர்த கவிராயர், முருகதாச சுவாமி முருகதாசர் உமருப்புலவர் கிருஷ்ணபிள்ளை முதலியோர் ஜனித்தமையல் மாண்புற்ற தாய், உடலுழைப்பால் மற்றவர்க்கு ஊணளித்துப் பாவந்தோன்றிய நாளையில் தோன்றிய உரிமைகளையே இன்றுவரை கடைப்பிடிக்கும்படி ஒடுக்கப்பட்டு மேனாட்டுக்கிறிஸ்தவ நன்மக்களின் பெருமுயற்சியால் ஒரு சிறிது மனிதராய ஆதிதிராவிடரும், ஆடவரும், பெண்டிரும் ஒருங்கே யுழைத்துச் செல்வத்திலும் சிறப்பிலும் படிப்பிலும் அதிதீவிரமாய் மேம்பாடுற்றுவரும் நாடார் நலமக்களும், குறுநில மன்னரின் பட்டத்தவராய் வீரரென்ற பொருளமைந்த தம் பெயருக்கேற்ற இலக்கியமான மறவரும், அஞ்சா நெஞ்சன் உண்மைவீரன், கட்டபொம்மன் கால்வழிவந்த தொட்டியரும், பிறவிச்சைவர்க்கே உதவிபுரிவோமென்று வீண் செருக்குற்றுத் தினசரி சைவராகும் மக்களைத் தன்னகத்தே உட்கொண்டு புலால் மறுத்தலும், சிவசின்னமுமே மோட்ச நிலையத்தின் திறவுகோல்களென்று இறுமாந்து உடல் வலிகுன்றித் தேய்ந்து கரையும் சைவப் பெரியார்களும், தாமல்லாதாரை எத்துறையிலு மடக்கலாற்றுப் பார்ப்பனரும், சமூகக் கொடுமையின் தீட்சண்யத்தால் இந்து மதத்தை விட்டு விலகிய இந்தியாவிலேயே அத்துணை எங்குங் காணமுடியாத ஏராளமான கிறிஸ்தவர்களும், முக்கியமாய்த் தன்னகத்தே வதிவதாயுமுள்ள எங்கள் திருநெல்வேலி ஜில்லாவின் சமரச சன்மார்க்கப் பற்றுடையார் சார்பாய் இவ்விரண்டாவது சுயமரியாதை மகாநாட்டிற்கு விஜயஞ்செய்திருக்கும் உங்களுக்கு நல்வரவு கூறுகின்றேன்.

இந்து சமய சமூகக் கொடுமைகளைச் சகிக்காது இற்றைக்குச் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்கட்கு முன்பிருந்தே வர்த்தமான மஹாவீரர், புத்தர், திருவள்ளுவர், நானக்,கபீர். துகாராம், ஏகநாத், ராமாநுஜர், சைதன்னியர், ராஜா ராம்மோகன்ராய், சுவாமி தயாநந்த சரஸ்வதி, ராமலிங்கசுவாமி, சுவாமி விவேகாநந்தர் இவர்கள் எடுத்துவந்த நன் முயற்சியின் குறை நீக்கிக் குணங்கொண்டு அதனைப் பண்டை நற்றமிழரின் பழக்க வழக்கங்களோடு ஒற்றுமைப்படுத்தி அதற்குப் புதுப் பெயர் புனைந்து புத்துயிரளித்துத் தமிழ்நாட்டிற் பண்டிதரும் பாமரரும் ஒருங்கே ஒப்பி அனுஷ்டிக்கும்படி வெகு தீவிரமாய்ப் பரப்பிவரும் நம் இராமசாமிப் பெரியாரின் சுயமரியாதை இயக்கமின்னதென்பதனை யறியாத தமிழ் மகன் ஒருவனுமிலன் அதன் உண்மை இன்னதென்றறிந்தும், அது எவ்வாறு நாட்டிற்கும் மக்கட்கும் நன்மை பயப்பதென்பதனை நன்குணர்ந்துங்கூட அதனைத் தூற்றுவார் அழுக்காற்றானும், தம் பிறப்புரிமையை இழக்க நேரிடுமே யென்ற பயத்தாலும் அன்றிச் சிறிது ஊதியம் கருதியும் அவ்வாறு செய்கின்றனரேயன்றி வேறன்று என்று துணிந்து கூற இயலும். சுருங்கக்கூறுமிடத்து, சுயமரியாதை என்பது அடிமைத் தன்மை யொழிந்து மனிதத்தன்மையோடு கூடி அறிவின் வழி வாழ்தலேயாம். அடிமைத் தன்மை சரீர அடிமைத்தன்மையையும் அறிவினடிமைத் தன்மையையும் தன்னுள்ளடக்கும். உண்மை இவ்வாறிருக்க சுயமரியாதை இயக்கம் பார்ப்பனரை அழிக்கத் தோற்றுவிக்கப்பட்டது அன்றி, நாத்திகத்தைப் பரப்ப ஏற்பட்டது என்று சுயநன்மையுன்னிப் பிதற்றுவோரின் இழிதகைமையை என்னென்று கூறுவது! சின்னாட்கட்கு முன் நம் ஆதிதிராவிட சகோதரி சீதா தேவியம்மையைக் காதலித்துப் பல்லோரறியக் கடிமணம் புரிந்த ஸ்ரீகண்ட சாஸ்திரியின் புதல்வர் திரு. நடேசய்யரைப் போற்றாதார் யாரும் உளரோ? நாட்டிற்கு நூதனமாய் வந்த ஆங்கிலேயராலேற்படுத்தப்பட்ட சட்டத்தின் வாயிலானன்றி நம்மைப்பல்லாயிரம் ஆண்டுகளாய் அடிமைப்படுத்தி வரும் தனி இந்துலாப்படி நடேசய்யர் அவ்விதம் சீதாதேவியைத் தன்உத்தம பத்தினியாய் ஏற்றிருக்க முடியாது. கணவன் மனைவியாய்க் கருதப்படுவதற்கு இருவரும் "பிரம்ம","க்ஷத்ரிய","வைசிய","சூத்திரர்" என்ற "நான்கு ஜாதிகளில்" ஒருஜாதியினராயிருத்தல் வேண்டும். பிராமணன் ஒருவன் தனக்குக் கீழான மூன்று ஜாதிகளிலுமுள்ள பெண் எவளையும் சேர்த்துக்கொள்ளலாம். அவ்வாறே க்ஷத்திரியனும், வைசியனும்; ஆனால் அவன் அவளை எவ்வளவு காதலித்து நேசிக்கினும் அவள் அவனது மனைவியாகாள். அவள் வயிற்றில் அவனுக்குப்பிறக்கும் குழந்தைகளும் அவனது புத்திரர், புத்திரிகளாகார். எந்த ஜாதி ஆடவனும் தனக்குமேற்பட்ட ஜாதிப்பெண்ணைக்காதலுடன் கண்ணுற பார்த்தலுங்கூடக்கூடாது. நடேசய்யர் சீதாதேவி திருமணத்திற்குத்தான் வருவதாய்ச்சொல்லி வாக்களித்துவிட்டு வேண்டுமென்றேவாராமலிருந்த திரு. சத்தியமூர்த்தி அய்யரா நமக்கு சுயராஜ்யம் கிடைத்துப் பார்ப்பனர் ஒருவர் யுனைட்டட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியாவிற்குப்பிரசிடெண்டாக இருக்குங்காலத்தில்ஜாதி வித்தியாசத்தை பொழிக்க தைரியமாய் முன் வந்து இந்துலாவைச் சீர்திருத்தம் செய்ய மசோதா கொண்டு வரப்போகின்றார்? இதிலிருந்தே சுயராஜ்யம் கிடைத்த பின் நாம் நம்மைச் சீர்திருத்திக் கொள்ளலாம் என்போர் தமது நினைப்பைச்சீர்திருத்திக்கொள்வார்களென்று நம்புகின்றேன். மூர்த்தி கல்யாணத்திற்கு வராமையைப்பற்றி டாக்டர் சி. நடேசமுதலியார் பேசியவை உங்கள் ஞாபகத்திலிருக்கும். வழக்கப்படி மன்னிப்புக் கேட்காததிலிருந்தே மூர்த்தி வேண்டுமென்றே வராமலிருந்தாரென்பது நன்கு விளங்கும். இஃதும் இதுபோன்றே ஒரு குலத்திற்கொரு நீதிபகரும் சட்டங்கள் மிகப்பல இந்துக்களை இப்பொழுதும் வாட்டி வருகின்றன. இவைகளை உங்களில் நமது "திராவிடன்", "குடிஅரசு"ப் பத்திரிகைகளை விடாது படித்து வருபவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். பார்ப்பனரால் ஏற்படுத்தப்பட்ட அறிவிற்குப் பொருத்தமற்ற சட்டங்களையும், பழக்க வழக்கங்களையும் அவைகள் இன்னும் அமுலிலிருந்தே தீர வேண்டு' மென்னும் பார்ப்பனரையும் எதிர்ப்பதே சுயமரியாதை இயக்கம். மேல்ஜாதி கீழ்ஜாதி என்னும் ஆரியரது கொள்கையை அறவே ஒழித்து "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும், சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்னும் பண்டையத் தமிழரின் கொள்கையை நிலைநாட்டுவதே சுயமரியாதை இயக்கம் அறிவுச்சுடராய் நீதியின் நிலையாயிருந்த ராஜாராம் மோகன்ராய், தயாநந்த சரஸ்வதி, ஈஸ்வரச்சந்திர வித்தியாசாகரர்,வீரேசலிங்கம் பந்துலு, ரங்காரவ் என்ற சுவாமி ஈஸ்வரானந்தா,ஜஸ்டிஸ் சதாசிவஐயர் போன்ற பார்ப்பனரை ஆதரித்துப் போற்றுவதே சுயமரியாதை இயக்கம்.பார்ப்பனர் உமிழ்ந்தகொள்கைகளை உட்கொண்டு காரணமின்றி ஜாதிப்பித்தேறித் தமக்குக் கீழென்று கருதப்பட்டோரை அவரினும் மிகக் கேவலமாய் நடாத்தும் வேளாளரையும்,பார்ப்பனரையும் ஒருங்கே தாக்ஷித்து ஆதிதிராவிடர்களைக் கொடுமையாய் நடாத்தும் நாடார்களையுமெதிர்ப்பதே சுயமரியாதைஇயக்கம். ஆகவே எக்குடியிற்பிறப்பினும் யாவரேயாயினும் ஒருவர் சமூகக்கொடுமைகளையும், அறிவிற்குப் பொருந்தாத பழக்க வழக்கச் சட்டங்களையும் ஆதரிப்பாராயின் அவரை எதிர்த்து அவரது கொள்கையின் ஆதிக்கத்தை அழிக்க முன் வருவதே சுயமரியாதை இயக்கம்.

தவிர சுயமரியாதை இயக்கம் கடவுள் உண்டாஇன்றா? என்ற கேள்விகளிலேயே தலையிடவில்லை. கடவுள் ஒருவர் இல்லை யென்று நிரூபிக்க ஒருவரும் முன் வரவில்லை. அத்தன்மைத்தே கடவுள் ஒருவர் உண்டு என்று வாதாடவும் முன் வரவில்லை. அத்தகைய தர்க்கங்களே சுயமரியாதை இயக்கத்திற்கு அவசியமல்ல. ஆயினும் கடவுள் ஒருவர் உளரேல் அவர் பெயராலனுஷ்டிக்கப்பட்டு வரும்பழக்க வழக்கங்களில் அநேகம் நம்மைப் பன்னூராண்டுகளாய் அடிமைத்தனத்திலும், தரித்திரத்திலும் பிறர் எள்ளிநகையாடும்படியான மிருகத்தனத்திலும் ஆழ்த்தியிருப்பதோடுகூட இப்பொழுதும் கணக்கிலடங்காத பொருள் அவர் பெயர் சொல்லி வீணே இழிதுறைகளில் விரையமாக்கப்பட்டு ஒரு மனிதனாவது நன்னெறியடையக் கூடிய நிலைமையில் உபயோகப்படுத்தப்படாமலிருந்து வருவதால் அவைகளைச் சீர்திருத்தவேண்டுவதே தனது முக்கிய கடமைகளிலொன்றாகக் கொண்டதே சுயமரியாதை இயக்கம். முதலாவது இந்த ஜில்லாவை எடுத்துக் கொள்வோம். இங்கு வருஷத்திற்கு ரூ. 18000 தஸ்தி கவர்ன்மெண்டால் கொடுக்கப்பட்டு வரும் கோயில்கள் நான்கு இருக்கின்றன. அவைகளின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் உண்டியல் முதலிவைகளிலிருந்தும் வருஷத்திற்கு அநேக இலட்சம் வருவாய் வருகின்றது. இன்னும் ஆயிரக்கணக்கான ரூபாய் தஸ்தி பெறும் கோயில்கள்

மிகப் பல. அவைகளின் வரும்படியும் பல இலட்சம். திருவாவடுதுறை மடத்திற்கு இந்த ஜில்லாவிலிருந்துமட்டும் வருஷத்திற்குக்கட்டுக் குத்தகையாக 2 இலட்சம்ரூபாய்அனுப்பப்பட்டு வருகிறது. தர்மபுரம் மடத்திற்கும் ஏராளமான சொத்துக்களிருக்கின்றன. தவிர வானமாமலை, திருக்குறுங்குடி, உமையொருபாகக் குருக்கள் இந்த மடத்தாரது பிரதான மடங்களும் இங்கே இருக்கின்றன. இவைகளின் சொத்தும் வரும்படிகளும் கணக்கிலடங்கா. இன்னும் செங்கோல் மடம்போன்ற சிறு ஸ்தாபனங்களும் மிகப் பல. ஏராளமான வருவாயுள்ள சத்திரங்கள் எண்ணில. இவ்வாறிருந்தும் இவற்றின் வருஷவரும்படி சுமார் ஒரு கோடி ரூபாயும்செலவுசெய்யப்பட்டும் ஒரு ஆன்மாவாவது மோட்ச சாதனமடையும்படியாயிருக்கின்றதா என்ற கேள்விக்கு ஆம் என்று நெஞ்சின்மேற் கைவைத்து ஒருவராவது சொல்ல முன்வரமுடியுமா? முடியவே முடியாது. இவ்விதம் வீணே விரயமாக்கப்படும் பொருளிலிருந்து வருஷத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நமது இந்துக்கல்லூரிக்குக்கொடுக்கப்பட்டு வருமாயின், அது இப்பொழுதிருப்பதுபோல் கலை மங்கி, மாணவரால் புறக்கணிக்கப்பட்டு, பாமரர் கூற்றுக்கொப்ப, லாட்டரிபோட வேண்டிய நிலைமைக்கு வருமா? அண்ணாமலை சர்வகலாசாலையைப் போல் ஒரு தனி கலாசாலையாகிச் சீரும் சிறப்பு முற்று விளங்குமல்லவா? அவ்வாறு செய்ய வேண்டுமென்று சொன்னால் ஆதியிலேற்பட்டபடியே தர்மம் நடந்துவரல்வேண்டும்; சட்டசபை அதில் தலையிடுதல் கூடாது என்பவரை அவர் பார்ப்பனராயினும், வேளாளராயினும், அன்றி வேறு யாராயினும், புறங்கொடுத்தோடும்படி செய்வதே சுயமரியாதை இயக்கம். தம்மில் இரு முக்கிய பகுதியுள்ள கிறிஸ்தவர்கள் தத்தமது மத ஸ்தாபன ஐவேஜிலிருந்து இந்த ஜில்லா ஒன்றிலேயே இரண்டுமுதல் கிரேட் காலேஜ்களும், பெண்களுக்கென்றே ஒரு இரண்டாவது கிரேட் காலேஜும், இன்னும் பல உயர்தர செக்கண்டரி, எலிமெண்டரி ஸ்கூல்களும் நடத்தி வருவதைப் பார்த்தாவது நாணமுற்று ஊக்கங்கொண்டு தன் மதஸ்தாபனங்களைச் சீர்திருத்தமுன்வராத இந்து ஒருவன் மனிதனேயாகான். அவன் கிறிஸ்தவாது உலக ஆதிக்கத்தைப்பற்றிப் பேசிவாயிற்சிறிச்சல் பட அருகனேயல்லன். வியர்வை சிந்தப் பெருமுயற்சியெடுத்து ஈட்டப்பட்ட பொருளை அவ்வாறு செய்யலாற்றாத ஒரு பகுதியினர்மட்டும் சோம்பேறித்தனமாய் ஏகபோகமாய்அனுபவித்துநாட்டையும்மக்களையும் பாழ்படுத்துவதைத் தடுக்கமுயற்சிப்பதே சுயமரியாதை இயக்கம்; இது நாஸ்திகமாகுமா? சுயமரியாதை இயக்கம் நாஸ்திகத்தைப் பரப்பிவருகின்றதென்று பறையடிக்கும் இந்துக்கள் தங்களது மதத்தையே தெரியாது கதறுகின்றனர்.

மூன்றாவது பாரத்தில் இந்திய தேச சரித்திரத்தின் இந்துப் பீரியடைப் படிக்கும் ஒவ்வொரு மாணவனும் "இந்துமத தத்துவத்தின் ஆறு பிரிவுகளாகிய சாங்கியம் கபிலராலும், மீமாம்சம் ஜைமினியாலும், யோகம் பதஞ்சலியாலும், வைசேஷிகம் கணாதராலும், வேதாந்தம் வியாசராலும், நியாயம்கௌதமராலும் இயற்றப்பட்டது" என்று படித்திருப்பான். இவற்றுள்கபிலரது சாங்கியமும், ஜைமினியின்னது மீமாம்சமும் நிரீசுரவாதக் கொள்கையை உடையவை. ஆயினும் தொன்று தொட்டே கபிலர், ஜைமினி இவர்களது கொள்கைகளைப் பின்பற்றுவோரும் இந்துக்களாகவே கருதப்பட்டு வந்தனர். இப்பொழுதும் அவ்வாறே கருதப்பட்டு வருகின்றனர். இதிலிருந்து இந்துமதம் நாஸ்திகமும் ஆஸ்திகமும் கலந்தது என்று தெரியலாம். இந்துவாயிருப்பதற்கு அத்தியாவசியமாய்க் கருதப்பட்டது வேதத்தில் நம்பிக்கையும், அதில் சொல்லப்பட்ட கிரியைகளைச் செய்தலுமே. மீமாம் தரிசனத்தை இயற்றியஜைமினியையும், சாங்கிய தரிசனத்தை இயற்றிய கபிலரும் நாஸ்திகக்கொள்கைகளையே பிரசாரம் செய்தனர். இவர்களைப் பின்பற்றுவோரும் ஆதிகாலந்தொட்டு இந்து சமூகத்தைச் சேர்ந்தவராகவே கருதப்பட்டு இற்றைக்கும் இந்துக்களாகவே மதிக்கப்படுகின்றனர். இது இந்து மதத்தில் நாஸ்திகமும் ஒரு பகுதி என்பதைக் காட்டுகிறது. "ஒருவன் கடவுள் நம்பிக்கை உள்ளவனாகவோ இல்லாதவனாகவோ இருக்கலாம். ஆனால் அவன் இந்து என்பதற்கு அடையாளமாக வேதத்தை ஒப்புக்கொண்டு அதில் சொல்லப்பட்ட கிரியைகளைச் செய்யவேண்டும்." — மகா மகோபாத்தியாய பிரமாதநாத தர்க்க பூஷணர்.

முதலில் கபிலரையும், ஜைமினியையும் வாதில் வெல்ல முடியாமல் அவர்கள் கட்சியையும் ஒப்புக்கொண்டு, நீங்கள் எங்கள் வேதத்திலுள்ள கிரியைகளை மட்டும் செய்து விட்டால் மட்டும் போதுமானது. நீங்களும் எங்களைப்போன்ற இந்துக்கள் தானென்று சொல்லிவிட்டு, பிறகு காலஞ் செல்லச் செல்ல அவர்களது கொள்கைகளை ஒருவிதமாக இந்துக்கள் சமாதானப் படுத்திக்கொண்டார்கள். மகா பண்டிதரான விஞ்ஞான பிக்ஷு என்ற வியாகியானகர்த்தர் கபிலர் கடவுள் இல்லவேயில்லை யென்று சொல்லவில்லை, கடவுளிருக்கின்றாரென்று நிரூபிப்பது மனித அறிவிற்கு எட்டாத தாகையால் பிரத்தியட்ச ருஜுவால் கடவுளிருக்கின்றாரென்று நிரூபிக்க முடியாதென்பதே அவர் கருத்து என்கின்றனர். அவ்விதமே ஜைமினி கொள்கையை வியாக்கியானஞ்செய்பவர்களும் கடவுளிருக்கின்றாரென்று அநுமானிக்க அவசியமிருக்கிறது. ஆயினும் அப்படி நம்புவதால் அவரது தயைக்குத்தம்மைப்பாத்தியப்படுத்திக் கொள்ளலாமென்ற எண்ணத்தால் முனிதர் வேதத்தில் விதித்துள்ள கிரியைகளைச்சரியாய்ச் செய்யமாட்டார்கள். அதனாற்றான் மீமாம்சம் கடவுளிருக்கின்றாரென்று தீர்மானிப்பது அவசியமில்லையென்று விட்டுவிட்டதென்கின்றனர். ஆகவே இந்துக்கள் சுயமரியாதைக்காரர்களைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை. சுயமரியாதைக்காரர்களும் கடவுள் இல்லையென்று சொல்லவில்லை. கடவுளைப்பற்றிய விசாரணை தேச, சமூக முன்னேற்றத்திற்கு அவசியமில்லையென்றே கூறுகின்றனர். சுயமரியாதைக்காரரது மோட்சம் மக்கள் மனிதத்தன்மையோடு கூடி வாழ்ந்து தேசம் விடுதலையடைதலேயாம். அவர்களுக்கு முத்தியளிக்கும் புண்ணிய நகரங்கள் லண்டன், பாரிஸ், பெர்லின், மாஸ்கோ, அங்கோரா, டோக்கியோ, நியூயார்க். அவர்களது ரிஷிகள் மில், பர்க், பிளாரட், கார்லைல், கிப்பன், ரஸ்கின், கிளாட்ஸ்டன், மார்லி, கெயிட்டி, மாஜினி, கரிபால்டி, கார்ன் மார்க்ஸ், டால்ஸ்டாய், லெனின், வாஷிங்டன், ஆபிரகாம் லிங்கன் முதலியோர். அன்னாரது சொல்லும் எழுத்துமே அவர்களது சுருதியும், ஸ்மிருதியும். ராம்மோகன் ராய், தயாநந்த சரஸ்வதி, ஈஸ்வரச் சந்திர வித்தியாசாகரர், சிவபாதகபானர்ஜி, ராமகிருஷ்ண பந்தர்க்கர், கோகலே, வீரேசலிங்கம் பந்துலு, ஸ்வாமி சிரத்தானந்தர், லஜபதிராய் முதலியாரே அவரது அறுபத்து மூவர். தேசாபிமானமே அவர்களை உன்னின்றுடற்றும் நோய். தேசவிடுதலையே அவர்களது பிராணவம். சமூக சமத்துவமே அவர்களது தாரகமந்திரம். சுய அறிவே அவர்களுக்கு உற்ற துணைவனும் வழிகாட்டியும்.

இவ்வளவும் பிரமாதமாய்ப் பேசுகின்றாரே 1929ம் வருடம் டிசம்பர் 31ந்தேதி இரவு 1 மணிக்கு ஆங்கிலேயரோடு போர் தொடுக்க எங்களுடன் அவர்கள் ஒன்று சேர்ந்து வருவார்களா என்று தேசிய வாதிகளென்னப்படுவோர் வினவின், சமூகக் கொடுமையை அன்றிரவு 12 மணிக்குள் அன்னார் ஒழித்துவிடின் சேனையின் முன்னணியில் நின்று சமர்புரியத் தயாரென்பதே அவர்களது விடையாம். சுயமரியாதைக்காரருக்கு சமூகக் கொடுமை செய்வோரும், நாட்டை அடக்கி ஆள்வோரும் சமத்துவமான இரு விரோதிகள். முன்னவராலேயே பின்னவராதிக்கம் பெற்றனரென்பது அவர்களது அபிப்பிராயம். ஆனால் நாட்டை அடிமைத்தனத்தினின்று நீக்கிக்கொண்டு பின்னர் சமூகக் கொடுமையை நிவர்த்தி செய்துகொள்ளலாமே யென்போர்க்கு அது முடியாத காரியம், அமானுல்லாவும், ஆப்கானிஸ்தானமுமே அதற்குத் தக்க சான்றுகள் என்பதே அவர்களது பதில். எவ்வளவோ படித்து எத்தனை பட்டங்களோ வாங்கியிருக்கும மதன்மோகன் மாளவியாக்கள் சுயராஜ்யம் வந்தபிறகு சூரிய சந்திரர்களைக் கிரஹண காலங்களில் ராகு கேதுக்களின் வாய்களினின்றும் விடுவிப்பதற்காக இப்பொழுதைப் பார்க்கிலும் பன்மடங்கு ஸ்நானம் செய்து அதிகமந்திரங்களை ஜெபிப்பதோடுகூட ஒடுக்கப்பட்டோர்களுக்குத்தனியமாகவே முன்னின்று வேண்டிய உலை வைப்பார்களென்பதே அவர்களது எண்ணம். சீதாதேவியின் கல்யாணத்தை நிறுத்தும்படி சத்தியமூர்த்தி 144தடை உத்தரவு போடுவாரென்பதே அவர்களது தீர்மானம். சமூகக்கொடுமை நீங்கி சகோதரத்துவமடைந்த அன்றைக்கே அன்னியர் மூட்டைகட்டி விடுவர், சுயராஜ்யம் தானாகவே வந்துவிடுமென்பதே அவர்களது உண்மையான நம்பிக்கை.

இந்தியமக்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் அந்நியர்களுக்கு அடிமைப்படுத்தியிருப்பதற்குக் காரணம் இந்துக்களது ஜாதிக்கட்டுப்பாடும், மூடப்பழக்க வழக்கங்களும், அநீதியான சட்டங்களும் என்பதனை இயற்கை அறிவுள்ள ஒவ்வொருவரும் எளிதிலறியலாம். இந்நாட்டிலுள்ள சீக்கியர்களையும் மகம்மதியர்களையும் எடுத்துக் கொள்வோமானால் இவ்வுண்மை நன்கு விளங்கும். சீக்கியர் ஒருவம்சத்தவரன்று. அநேகமாய் இந்துக்களின்றும் சேர்த்துக் கொள்ளப்பட்டவரே. அதேமாதிரி இந்திய மகமதியர்களிற் பெரும்பாலரும் இந்துக்களாகியிருந்தவரும் அவர் தம் சந்ததியாருமே. அப்படியிருந்தும் சீக்கியரும் மகமதியரும் பெரும்பாலும் வீரர்களாகவும், இந்துக்கள் பெரும்பாலும் கோழைகளாகவுமிருத்தற்குக் காரணமென்ன? மகாத்மாகாந்தியே "இந்து கோழை" என்று சொல்லியிருக்கின்றார். காரணத்தை ஆழ்ந்து யோசிப்போமாயின் அதனை இரண்டு விதத்திற்குள்ளடக்கி விடலாம். முதலாவதும் முக்கிய மானதுமானது ஜாதிக்கொடுமையின்றி சகோதரத்துவமுடைமை இரண்டாவது அக்கூட்டத்தினர்கட்குரிய பழக்க வழக்க சட்டங்கள். ஜாதிப் பிரிவினையால் சகோதரத்துவ உணர்ச்சியின்றி இந்துக்கள் சிதறுண்டு போயினர் என்பதை ஒருவாறு ஒத்துக்கொள்ளலாம். பழக்கவழக்கச் சட்டங்கள் அவர்களை எவ்வாறு கோழைகளாக்கின என்று நீங்கள் கேட்கலாம். உதாரணமாக, விதவா விவாகமின்மையும், மனைவிக்கும் பெண் மக்களுக்கும் தம் குடும்பச் சொத்திற் பங்கின்மையும் இந்துக்களைக் கோழைகளாக்கிய முக்கிய காரணங்களிற் சில என்பதனை நீங்கள் உணரலாம். எவ்வாறெனில், சமரில் உயிர் துறப்பின் நம் பால்ய மனைவி என் செய்வாள்? மானத்தை விற்றோ அன்றிப்பிறர் மதம்புக்கோ அன்றோ பிழைத்தல்வேண்டும். குழந்தைகள் என் செய்யும் என்ற பயத்தினாலேயே ஒரு இந்து புறங்கொடுத்தோடும்படி நேரிடுகின்றது. இப்பொழுதும் இந்துக்களில் விதவா விவாகத்தை யனுஷ்டிக்கும் மறவர், தொட்டியர், ஆதிதிராவிடர் வீரர்களாயிருப்பது இதனை வலியுறுத்

தும். அவிபக்த இந்து குடும்பத்தில் ஒருவன் ஆண் குழந்தை யன்றி மனைவியையும், பெண் குழந்தைகளையும் விட்டுவிட்டு இறப்பானாயின் அவர்கள் கதி அதோகதிதான். அவனுடைய பாகத்தில் அவர்களுக்குப் பங்கு கிடையாது. குழந்தைகளுக்குக் கல்யாணமாகும் வரை அன்ன வஸ்திரமும், கல்யாணச்செலவும், மனைவிக்குச்சாகும்வரை அன்ன வஸ்திரம் மட்டுமே கிடைக்கும். அதுவும் குடும்பமானேஜர் நல்லவராயிருந்தால் மட்டுமேதான். இன்றேல் கஞ்சிக்கு வழியற்ற விதவை, வக்கீல்கள், வக்கீல் குமாஸ்தாக்கள் காலில் வீழ்ந்து கோர்ட்டு மூலமாய்த்தான் அதனையும் பெற முடியும். மனைவிக்கும் பெண் குழந்தைகட்கும் சொத்தில் பங்கிருப்பதோடுகூட மறுமணமும் விதவை செய்துகொள்ளலாமென்ற வழக்க மிருக்குமாயின் அவர்களெவ்வாறு அஞ்சவேண்டிய அவசியமே யில்லை. எதிரியின் கத்தி நெஞ்சிற் பாயவேண்டிய தன்றி முதுகிற் பாயவேண்டியதில்லை. அவிபக்த குடும்ப வாழ்க்கையும் இந்துக்களுக்கு எவ்வாறு கெடுதல் செய்கின்றதென் பதனைக் கண்டோம். இவைபோன்ற பழக்க வழக்க சட்டங்கள் இன்னும் மிகப்பல. இவற்றை யெல்லாம் நன் காராயின் நாட்டிற்கு எவ்வாறு கேடு விளைந்திருக்கின்றதென்பது நன்கு விளங்கும்.

அதாவது தேசாபிமானம் என்பதற்கு ஆரியர்களது சம்பூர்ண பாஷையில் பிரதிபதம் கிடையாது. நாட்டை ராமனுண்டாலும் ராவணனுண்டாலும் அவர்களுக்குக் கவலையில்லை. நல்ல நீர்வளமுள்ள செழித்த இடங்களில் அவர்கள் நடத்தும் யாகாதி கிருத்தியங்களுக்கு யாதொரு இடைஞ்சல் செய்யாமலும், அவர்கள் குடும்பத்தாரிடம் அந்நியர் நெருங்காமலும், சோற்றுக்கு வழியும் செய்துவிட்டால் நாட்டையார் ஆண்டாலும் அவர்களுக்கு சம்மதம். படிப்பில் மிகச்சிறந்திருந்தவர்களானபடியால் அந்த நாட்களிலுள்ள அரசர்களைத் தம்மையே கடவுளென்று நம்பும்படிசெய்து தமக்கு மேம்பாடுகொடுக்கக்கூடிய சட்டதிட்டங்களை யெல்லாம் உண்டுபண்ணி அவ்வரசர்களைக் கொண்டு அவைகளை அமுலில்வரும்படி செய்துவிட்டனர். அந்தசட்டதிட்டங்களின் பலனாகவே இந்தியர் அறிவிழந்து, பல மிழந்து, நாடிழந்து, மானமிழந்து வாழும்படி நேரிட்டுவிட்டது. ஆங்கிலேய கவர்ன்மெண்டாரும் அந்த சூட்சுமத்தை நன்குணர்ந்து உங்கள் மதத்திலும் பழக்க வழக்கங்களிலும் தலையிடோமென்று உறுதிமொழி கூறிவிட்டுத்தங்கள் காரியத்தை மட்டும் பார்த்து வருகின்றனர். ஆரியரது மதக் கோட்பாடுகளும் சட்டதிட்டங்களும் முற்றிலும் மாறிவிடின் தங்களது ஜெபம் சாயாதென்று ஆங்கிலேயருக்குநன்கு தெரியும். ஆகையால் மதத்தின் பேராலுள்ள மேற் சொல்லிய சட்டதிட்டங்களை மாற்றமுழுமனதுடன் அன்ஞர் முன்வரவேமாட்டார்கள். இடைஞ்சலும் செய்வார்கள். கோகலேயின் கட்டாயஇலவச ஆரம்பப்படிப்பு மசோதாவையும், பூர்பிரகாத் பாசுவின் சிவில் கலியாண மசோதாவையும் இன்னு மிவைபோன்றஎத்தனையோமுயற்சிகளையும், இறுதியாக சமீபத்தில் எம். கே. ஆச்சாரியார் கூட்டத்தாரைக் கைசேர்த்துக்கொண்டு ஹரிபிலாஸ்சாரதாமசோதாவையும் அவர்கள்முற்றுப்பெறவொட்டாமல் செய்தது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

மனிதத்தன்மை யிழந்து அடிமை வாழ்க்கையில் நாமின்னும் எத்தனை நாளிருப்பது? இதை நிவர்த்திக்கக் கவர்ன்மெண்டாரை நம்புவதிற் பயனில்லை யென்று கண்டோம். அதுபோன்றே மத, சமூகக்கொடுமைகளை நிவர்த்திக்க வேண்டிச் செய்த உத்தம புருஷர்களான மஹாவீரர் புத்தர் இவர்களது பெரு முயற்சிகளை யெல்லாம் அறவே யழித்துவிட்ட பார்ப்பனரை நம்புவதிலும் ஒரு சிறிதும் பலனில்லை. பசைக் கப் பசுங்க இளம் விதவைகளை அவர்களது கணவர்களின் பிரேதங்களோடு மூங்கிற்கழிகளால் இறுக்கிப்பிடித்துக்கொண்டு சுட்டெரித்த கொலை பாதகத்தை மதத்தின் பெயரால் தீவிரமாய் ஆதரித்ததோடு மட்டுமில்லாமல், லார்டு வில்லியம்பெண்டிங்க் அதனை நிறுத்த சட்டமியற்றிய பின்னும் பார்லிமெண்டிற்குத்தங்கள் மதம் போச்சு, தர்மம்போச்சுதென்று மனுச்செய்து கண்ணீர் விட்டுக் கதறியவர்களும், ஒரு வயதிற்குட்பட்ட விதவைகள் இத்தனை இலட்சமென்று சென்சஸ் மூலம் கணக்குத் தெரிந்தபிறகும் ஈஸ்வர சந்திர வித்தியாசாகரின் முயற்சியால் கொண்டுவரப்பட்ட இந்து விதவா விவாகமசோதாவை மதம் போச்சு, தர்மம்போச்சுதென்று ஈரமில்லா நெஞ்சத்தோடெதிர்த்தவர்களும், ருதுசாந்தியைப் பத்தாவது வயதிலிருந்து பதினோராவது வயதிற்குத் தள்ளிவைக்க வேண்டுமென்று மலபாரி கொண்டுவந்த மசோதாவையும்அவ்விதமே எதிர்த்தவர்களா நாட்டை முன்னுக்குக் கொண்டு வரப்போகின்றார்கள்? ஆகையால்நாமே நம்மைச்சீர்திருத்திக் கொள்ள வேண்டுமேயன்றி வேறொருவரையும் எதிர்பார்த்தல் கூடாதென்ற கொள்கையோடு பிறந்ததே சுயமரியாதை இயக்கம்.

ஒரு சங்கரர் அரசர்களைக் கைவசப்படுத்தி பௌத்த மதத்தை இந்தியாவை விட்டுத் துரத்தாதிருந்திருப்பாராயின் நாமின்று ஜப்பானியர்களைப்போல் வல்லரசு நாட்டவர்களிலொருவரா யிருந்திருப்போம். பௌத்த மதம் அனுஷ்டானத்திலிருந்த காலத்தில் மட்டுமே சந்திரகுப்தா, அசோகர் கனிஷ்காமுதலிய நம்மவர் கிரீக்கர் பெர்ஷியர் முதலிய அந்நிய நாட்டினரை யெல்லாம் முதுகிட்டோடும்படிசெய்து ஆப்கானிஸ்தான் உட்பட நம்நாட்டை ஒரு குடைக்கீழாண்டு வந்திருக்கின்றனர். பௌத்த மதம் போய் இந்துமதம் மீண்டும் தலையெடுத்து நமது சமயக் குரவர்கள் மந்திரமாவது நீறு என்றுபாடிய பின்னரே நாடு அந்நியர்க்கடிமையாயது. கடந்தது கடக்க இனியாவது நாம் காலந்தாழ்த்தாது ஊக்கத்துடன் வேலைசெய்ய முன்வரல் வேண்டும். ஜப்பானியரைப்போல், துருக்கியரைப்போல் மேனாட்டு மற்றையவரைப்போல் நாம் எப்பொழுது நமது காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை கப்பற்படை, ஆகாயப்படை இவைகளைக் கையாண்டு மாற்றாரது நன்மதிப்பைப் பெறுவது? ஒவ்வொரு நிமிஷமும் புதுபுது விஷயங்கள், கருவிகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. பயாலஜி சாஸ்திரத்திலொரு உண்மையை விளக்கும் சொற்றொடரிருக்கின்றது. அதாவது தகுதியுள்ளவைகளே தங்கும். அல்லாதவை இறந்துபடுமென்பதே. மனிதர்களும் தேசங்களுமத்தன்மையனவே. ஆசியாக்காரரை வெள்ளையர் அடக்கியாள்வது அவர்களின் அறிவின் திறத்தாலன்றித் தேக வன்மையாலல்ல. அவ்வழியை ஜப்பானியர் கைக்கொண்டவுடன் உடல்வலி மிகுந்தருஷியரைமுதுகிட்டோடச்செய்துவிட்டனர். சங்கரர்சொன்னகோவிந்த பஜிப்பும்நம்மை அவ்விதம்ரக்ஷிக்கமுடியாது. துளசிதளமும் தீர்த்தமும்நவாபைக் கோட்டை வாசலுக்குட் புகவொட்டாமற் செய்யா?

“நீங்களே உங்களுக்கு விளக்காயிருங்கள். உங்களுக்கு நீங்களே அடைக்கலமாயிருங்கள். அந்நியர் பொருளொன்றினையும் நீங்கள் அடைக்கலமாய்க் கொள்ளாதீர்கள். உண்மையையே அடைக்கலமாய்க் கடைப்பிடியுங்கள். உங்களைத்தவிர வேறு ஒருவரையும் அடைக்கலமாய் யெதிர் பாராதீர்கள். உங்களுடைய விடுதலையை அறிவோடு உழைத்து நீங்களே பெற்றுக்கொள்ளுங்கள்” இந்தப்பொன் மொழிகளே நம்மை ரக்ஷிப்பன. இவைகளே நாட்டை அந்நியரிடமிருந்து மீட்டி சுயராஜ்ய மளிக்கத்தக்கவை. இவற்றைப் பின்பற்றுவதால் மட்டுமே நம்நாடு இனியும் விடுதலையடைய முடியும். நாமும் தலை நிமிர்ந்து நடக்கலாம். இதுவே சுயமரியாதை இயக்கம்.

இவ்வியக்கம் பெரிய பெரிய மேதாவிகளெல்லாம் எவ்வளவோ முயன்றும் செய்யாத முடியாத காரியங்களைக் கொஞ்ச நாட்களுக்குள்ளேயே செய்து தான் ஓர் உயிருள்ள இயக்கம் என்று நிரூபித்து விட்டது. இவ்வியக்கத்தின் அரும்பெரும் ஆற்றலைக்கண்டு ஆனந்தியாத இந்துவும் அன்றி இந்தியனும் உளனேல், சங்கீத ஞானமில்லாத ஒருவனை என்ன செய்தால் தகுமென்று ஷேக்ஸ்பியர் கூறியிருக்கின்றனரோ அவ்விதமே செய்யப்படுவதற்கு அவன் உரியவனாவான். இவ்வியக்கத்தின் உற்றதுணைவரான தமிழ்மணங் கமழும் கல்விழங் “குமரனி”ன் ஆசிரியர் முருகப்பருக்கும் மரகதவல்லியம்மைக்கும் சமீபத்தில் நடந்த காதல், கலப்பு, விதவை, சுயமரியாதைத் திருமணம் ஒன்றே இவ்வியக்கத்திற்குப் பல்லாண்டு வாழ்த்துக்கூறப் போதுமானது. நாற்பத்து மூன்று வருஷங்களாய் தேச விடுதலைக்கு சமூக சீர்திருத்தங்களை மட்டும் புறக்கணித்துவிட்டு வேறு பற்பல உபாயங்களைத் தேடிப்பிடித்தும் சித்திபெறாத நமது இந்தியன் நேஷனல் காங்கிரசும் சென்றவருஷத்தில் சாதிக் கொடுமையை அறவே ஒழித்தலே நாட்டின் விடுதலைக்கு இன்றியமையாததென்ற தீர்மானத்திற்கு வந்திருக்கின்றது. இதர மகாநாடுகளும் வட நாட்டில் அத்தீர்மானத்தைப் பின்பற்றுகின்றன. சமீபத்தில் பம்பாயில் கூடிய ஒற்றுமை மகாநாடு போன்ற கூட்டங்களில் இந்து மகதிய உண்மைத் தேசிய வாதிகளும் கலப்பு மணமொன்றே நாட்டை உய்விக்குமென்னும் தீர்மானத்திற்கு வந்திருக்கின்றனர். உத்தம வீரரும் உண்மைத் தேசாபிமானியும் சமூக சமத்துவத்தால் எவ்வாறு வெற்றிபெற முடியுமென்று நிரூபித்தவருமான டாக்டர் மூஞ்சேயும் அவ்விதமே திருச்சியில் கூறியுள்ளார். இவ்வாறு தீவிர தேசிய வாதிகள் வாயளவில் மட்டும் சொல்லிக்கொண்டிருப்பனவற்றைச் செய்கையிற் செய்து காட்டியவர் நம் சுயமரியாதைக்காரர்களே. காதலோடு கூடிய கலப்பு மணம் சமீபத்திற்குள் சுயமரியாதையினுதரவில் எத்தனையோ நிகழ்ந்து விட்டன. ராமராஜ்யத்தில் புலிப்போத்தும் புல்வாயும் ஒரு துறையில் நீருண்டனவென்று கேட்டாவது இருக்கின்றோம். ஆனால் தமிழ் நாட்டில் சைவ வேளாளரும், ஆதிதிராவிடரும், மகம்மதியரும் பகிரங்கமாய் ஒருபந்தியிலிருந்து உண்ணுவார்களென்று சுமார் இரண்டு மூன்று வருடங்கட்கு முன் வரை கனவிலும் நினைக்கவாவது முடியுமா? இப்பொழுதோ அத்தகைய சமபந்தி போஜனங்கள் சர்வ சாதாரணமாய் விட்டன. இதை யெல்லாம் கவனிக்கும்பொழுது சுயமரியாதை இயக்கம் கூடிய சீக்கிரம் செய்து முடிக்கலாற்றாதது ஏதேனுமுளதோ என்ற ஆசங்கையே நிகழ்கின்றது. உடனுண்ணல், கலப்பு மணம் இவற்றின் முன் ஜாதி எங்கே? சமூகக்கொடுமை எங்கே? ஜாதி சமூகக்கொடுமை ஒழியின் அடிமைத்தன்மை எங்கே? தமிழ் நாட்டிலுதித்த இத்தூய இயக்கம் தீவிரமாய் மற்ற மாகாணங்களிலும் பரவி வேரூன்றி வருகின்றது. இவ்வியக்கத்திற்கு முக்கிய ஆதரவு மாதர்களால் தான் அளிக்கப்படல் வேண்டுமென்பது வெள்ளிடைமலை. ஆகையால் சகோதர சகோதரிகளே நீங்கள் “குடியரசு” “திராவிடன்” “குமரன்” இவைகளுடன் ஒத்துழைத்து உற்றார், உறவினர், மற்றையோரையும் ஊக்கப்படுத்தி நாட்டின்விடுதலையைக்கூடிய சீக்கிரம் நாம் கண்ணுற் பார்த்து ஆனந்திக்கும்படி செய்துவைக்க உங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

(தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

# திருநெல்வேலி ஜில்லா
# 2-வது சுயமரியாதை மகாநாடு

## உற்சாகமான வரவேற்பு

### திரு. ஈ. வெ. ராமசாமியாரின் உருவப்படத் திறப்பு வைபவம்

திருநெல்வேலி ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு நாளது மாதம் 20, 21ந் தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் திருநெல்வேலி டவுன் ஷண்முகவிலாச கொட்டகையில் மிக விமரிசையாக நடந்தேறிய விவரமாவது:—

மகாநாட்டிற்கு முதல்நாளே நாட்டுக்கோட்டை நகரம், மதுரை, ராமநாதபுரம், விருதுநகர், தஞ்சை, திருச்சி, திருவாங்கூர் முதலிய இடங்களில் இருந்து ஏராளமான ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். சனிக்கிழமை காலை 9-மணிக்கு இராமேஸ்வரம் எக்ஸ்பிரசுக்குத் தொடர்ச்சியான பாசஞ்சர் வண்டியில் திருவாளர்கள் மகாநாட்டுத் தலைவர் சிவகங்கை, எஸ். ராமச்சந்திரன், ஈ. வெ. ராமசாமி, பட்டுக்கோட்டை ப. சு. தண்டபாணி, எஸ். குருசாமி, பொன்னம்பலனார், அழகர்சாமி, எஸ். வி. லிங்கம், மாயவரம் நடராஜன், மூவலூர் ராமாமிர்தம் அம்மாள் மதுரை ஏ. எஸ். அருணாசலம், ஆனந்தம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஞானதேசிகர், அருப்புக்கோட்டை கருப்பையா, சொக்கலிங்க பாண்டியர், சின்னமணி பாகவதர் முதலியவர்கள் திருநெல்வேலி பாலம் ஸ்டேஷனுக்கு வந்ததும் ஸ்டேஷன் மேடையில் சுமார் 600, 700 பேர்களுக்குமேலாகவே காத்திருந்து எதிர்கொண்டு வரவேற்று மாலையிட்டு பாண்டு, மேளம் முதலிய வாத்தியங்களுடனும், பஜனை, 'ஜே' சப்தம் முதலிய கோஷங்களுடனும் திருவாளர் ஈ. வெ. ராமசாமி, எஸ். ராமச்சந்திரன், திருவாங்கூர் மாஜி ஜில்லா ஜட்ஜு, கோவிந்தன் ஆகியவர்களை மோட்டாரில் வைத்து வரவேற்புக்கழகத் தலைவர் திருவாளர் பாளையங்கோட்டை வக்கீல் ஆர். சுப்பையா அவர்களுடன் யானை முதலிய கோயில் சின்னங்களுடன் சுமார் 1000 பேர்கள் பின்தொடர திருநெல்வேலி பாலம் கடைத்தெரு வீரராகவபுரம் அக்கிரகாரம் முதலிய தெருக்கள் வழியாக சுமார் 2 மணிநேரம் ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டார்கள். ஊர்வலத்தில் திருவாளர்கள் திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் திவான்பகதூர் எஸ். குமாரசாமிரெட்டியார் எம். எல். சி. அவர்களும், டி. கே. சிதம்பரநாத முதலியார் எம். எல். சி. அவர்களும் சிவஞான தேசிகர் அவர்களும் மற்றும் அநேக கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள். ஊர்வலம் ஷண்முகவிலாசக் கொட்டகைக்கு வந்ததும் மகாநாட்டுக்கொடியை திருமதி மரகதவல்லி அம்மையால் ஒரு அருமையான சொற்பொழிவுடன் உயர்த்தப்பட்டது. பின் எல்லோரும் மகாநாட்டுக்கொட்டகைக்குள் சென்றார்கள்.

வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள்

திருவாளர்கள் எஸ். குமாரசாமி பி.ஏ.பி.எல். (ஜில்லா போர்டு தலைவர்) டி. கே. சிதம்பரநாதன் பி.ஏ.பி.எல். எம். எல். சி, பொ. திருகூட சுந்தரம் பிள்ளை எம். ஏ. பி. எல், சொ. முருகப்பர், "குமரன்" ஆசிரியர், பிச்சப்பா சுப்பிரமணியம், அருணகிரியார், டி. வி நீலகண்டன் பி. ஏ. எல். டி, மதுரை ஆர். எஸ். நாயுடு, எஸ். குருசாமி, அழகர்சாமி, ப. சு. தண்டபாணி, எம் கோவிந்தன், பி. ஏ. பி. எல். நாகர்கோயில் பி. சிதம்பரம் பி. ஏ. பி. எல். மதுரை, ஏ. எஸ். அருணாசலம் முதலியவர்கள் ஆவார்கள். செட்டி நாட்டிலிருந்து சுமார் 10 ஸ்திரீகள்வரை வந்திருந்தனர். நாகர்கோயில், காயாமொழி, அருப்புக்கோட்டை, தென்காசி, விருதுநகர், தூத்துக்குடி முதலிய இடங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகளும் விசிட்டர்களும் வந்திருந்தனர். விருதுநகர் திரு. சின்னமணி பாகவதராலும், மதுரை திரு. சின்னமணி பாகவதராலும் பாட்டுகள் பாடப்பட்டதும் மகாநாட்டைத் திறந்துவைக்கும்படி திருவாளர் திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்களை வரவேற்புக் கழகத்தலைவர் திரு. ஆர். சுப்பையா அவர்கள் வேண்டிக் கொண்டதும் திரு. ரெட்டியார் அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து சுருக்கமாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தி மகாநாட்டைத் திறந்து வைப்பதாகச் சொன்னார்.

### திரு. ரெட்டியாரவர்களின் சொற்பொழிவின் சுருக்கம்

அன்பர்களே! இச்சுயமரியாதை மகாநாட்டைத் திறந்து வைக்கும் பதவியை எனக்கு அளித்ததற்காக எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். புனிதமும் பெருமையும் தங்கியதும் அவதார புருஷராகிய திரு. ஈ. வெ. இராமசாமிப் பெரியாரால் தோற்றுவிக்கப் பெற்றதுமான சுயமரியாதை இயக்க இவ்விரண்டாவது மகாநாட்டை ஒருவர் திறந்து வைக்கவேண்டிய அவசியமே இல்லை என்று கருதுகிறேன். ஏனெனில், அவ்வியக்கத் தலைவராகிய நமது பெரியார் இங்கேயே உங்கள் முன் காணப்பெறும் போது, அவ்வியக்கத்தின் பெருமையைப் பற்றி பேசுவதென்பது அவசியமில்லாததென்பதே எனது அபிப்பிராயமாகும். என்றாலும், நான் ஏதாவது இரண்டொரு வார்த்தைகள் கூறுவேன் என்று சிலர் எதிர்பார்ப்பார்களாகையால், சில வார்த்தைகள் சொல்லுகின்றேன். இந்த இயக்கமானது மக்களின்பேதத்தையும், அறியாமையையும், உயர்வு தாழ்வையும் ஒழிப்பதற்கு ஏற்பட்டதாகும். இவைகள் ஒழிந்தால் தானாகவே சுயமரியாதை உதயமாகிவிடும். இவ்வியக்கம் தேசத்தில் எவ்வளவு பரவியிருக்கின்றது என்பதற்கு பம்பாய் முதலிய வெளி மாகாணங்களில் சுயமரியாதை மகாநாடுகள் கூடுவதும் அவைகளில் செய்யப்படும் தீர்மானங்களும் போதிய சான்றாகும்.

நம்மியக்கத்தைக் கண்டு பார்ப்பனர்கள் எவ்வளவு பயப்படுகின்றார்கள் என்பதற்கு சைமன் கமிஷன் விசாரணையில் பார்ப்பனர்கள் கொடுத்த சாட்சியமே போதுமானது. அதாவது ஒரு தேசிய பார்ப்பனரும் வர்ணாசிரம பார்ப்பனருமாகிய ஒரு பிரபல பார்ப்பனர் சைமன் கமிஷனில் சாட்சியம் கொடுக்கும்போது ஸ்தல ஸ்தாபனங்களில் தலைமைப் பதவிகளாகிய ஜில்லா போர்டு தலைவர் முதலிய பதவிகளை வகிக்கத் தகுந்த இந்தியர்கள் நமது நாட்டில் இல்லை என்றும், இந்தியர்கள் சுயராஜ்யத்திற்கு தகுதியுடையவர்களல்லர் என்றும் என் முன்னேயே எடுத்துச் சொன்னார், நான் அவரை இது உம்முடைய அபிப்பிராயமா? அல்லது எல்லா பார்ப்பனர்களுடைய அபிப்பிராயமா? என்று கேட்டேன். அவர் சற்றும் வெட்கமின்றி இதுவே தான் இந்நாட்டு எல்லா பார்ப்பனர்களுடைய அபிப்பிராயமென்று சொன்னார். நான் திரும்பவும் அவரை நீங்கள் ஜில்லா போர்டு தலைமை வகித்திருந்தீர்களே, அப்போது நீங்கள் தகுதியுடையவர்களாக இருந்தீர்களா? தகுதி இல்லாதவர்களாக இருந்தீர்களா? என்று கேட்டேன். அதற்கு அந்த நண்பர் பதில் சொல்ல முடியாமல் விழித்ததால் திரு சைமன் அவர்கள் நண்பர் மீது பரிதாபப்பட்டு, இடையில் பிரவேசித்து "போதும் விட்டு விடுங்கள் என்றும், அவரது அபிப்பிராயம் விளங்கிவிட்டது" என்றும் சிரித்துக்கொண்டே சொன்னார். உடனே நமது பார்ப்பன நண்பர் புலி வாயிலிருந்து தப்பியதுபோல் வெகு ஆனந்தத்துடன் சென்றுவிட்டார். பிறகு விசாரணை முடிந்து நான் வெளியில் வந்தவுடன் என்னை மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். சுயராஜ்யக் கூச்சல் பார்ப்பனர்களுடையவும், தேசீயக் கூச்சல் பார்ப்பனர்களுடையவும் மனமானது இவ்வளவு தூரம் மாறி சுயராஜ்யமே வேண்டாமென்று சொல்லவேண்டிய அவசியத்திற்கு அவர்களைக் கொண்டுவந்து விட்டதற்குக் காரணம் நமது சுயமரியாதை இயக்கமேயாகும். நமது மக்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சி இல்லாமலிருக்கும்வரையில் தான் பார்ப்பனர்கள் வெள்ளைக்காரர்களை சுயராஜ்யம் கேட்பார்கள். நமக்கு அவ்வுணர்ச்சி வந்து விட்டதென்று அவர்கள் தெரிந்துகொண்டார்களானால், சுயராஜ்யமே வேண்டாம் என்றும் நாம் அதற்கு தகுதியல்லவென்றும் சொல்வதோடு வெள்ளைக்காரர்களுடன் சேர்ந்தும்கொள்ளுவார்கள்.

இச்சுயமரியாதை இயக்கம் இன்று புதிதல்ல. இது நமது நாட்டில் வெகு காலத்திற்கு முன்பாகவே தோன்றி இருக்கின்றதாயினும் நமது பெரியாரால் புத்துயிரளிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வியக்கம் 'ஒரு குலத்திற்கொரு நீதி' என்பதை அடியோடு ஒழித்துவிடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இவ்வளவு வேலை செய்துவரும் இவ்வியக்கத்தை ஒழிப்பதற்குச் சில சுயநல வாதிகள் இதை நாத்திகம் என்னும் பேரால் அழிக்கப்பார்க்கின்றார்கள். நாம் அதைச் சிறிதும் பொருட்படுத்த வேண்டியதில்லை. இதுபோது நாட்டில் நியாயமும் சத்தியமும் கொண்ட இயக்கம் இதுவேயாகும், எனவே இம்மகாநாடு சீரும் சிறப்புடன் நடக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டு இம்மகாநாட்டைத் திறந்துவைக்கின்றேன் என்று கூறி முடித்தார்.

உடனே வரவேற்புத்தலைவர் திரு. ஆர். சுப்பையா அவர்கள் தமது உபன்யாசத்தைப்படித்து விட்டு தலைவராக திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களை பிரேரேபித்தார். பிறகு திருவாளர்கள் டி. கே. சிதம்பரநாதன் எம். எல். சி, கே. அழகர்சாமி, எஸ். குருசாமி எஸ். முருகப்பர் ஏ. எஸ். அருணாசலம், திருவாங்கூர் மாஜி ஜட்ஜ் எம். கோவிந்தன், பி. ஏ. பி. எல். ஈ. வெ ராமசாமி ஆகியவர்கள் ஆமோதித்து ஆதரிக்க நீண்ட கரகோஷத்தினிடையே அக்கிராசனம் வகித்து தன்னை தெரிந்தெடுத்ததற்கு நன்றி செலுத்திவிட்டு வேலை அதிகமானதால் அக்கிராசனப் பிரசங்கம் பகல் சாப்பாட்டிற்கு மேல் செய்வதாகச் சொல்லி மகாநாட்டை ஒத்திவைத்தார்

### முதல் நாள்பகல்

சாப்பாட்டிற்கு மேல் சுமார் மூன்று மணிக்கு மகாநாடு கூடிற்று. முன்னிலும் அதிகமான ஜனங்கள்கூடி இருந்தார்கள். திரு. சின்னமணி பாகவதர் பாடியவுடன் தலைவர் திரு. ராமச்சந்திரன் உபன்யாசம் படிக்கப்பட்டதும் திரு. ஈ. வெ. ராமசாமியாரின் படத் திறப்புவிழா நடந்தது. மாஜி ஜில்லா ஜட்ஜ் திரு. எம். கோவிந்தன் பி. ஏ. பி. எல். அவர்கள் அக்கிராசனம் வகித்து சில வார்த்தைகள் சொல்லி திரு. டி. கே சிதம்பரநாதன் அவர்களைத் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொண்டார். (அக்கிராசனப் பிரசங்கம், தனியாகவரும்)

பிறகு திரு. டி. கே. சிதம்பரநாதன் அவர்கள் படத்தை திறந்து வைக்கு முன் நிகழ்த்திய சொற்பொழிவாவது:

அன்பர்களே!

நமது பெரியார் படத்தைத் திறந்து வைப்பதில் இங்கு எனக்கும் தலைவருக்கும் சிறு "தாவா" ஒன்று ஏற்பட்டது. அதாவது, இப்படத்தை

நான் தான் திறந்துவைப்பேன் என்று நான் சொல்லவும் தலைவர் திரு. எம். கோவிந்தன் "நான் தான் திறந்துவைப்பேன்" என்று சொல்லி அந்தப் பதவி தமக்கே வேண்டுமென்றார். நான் அதற்கு ஒப்பாமல் "நான் தான் திறந்து வைப்பேன்" என்று வாதாடினேன். பிறகு தலைவர் தயவுசெய்து அப்பணியை ஆற்றும் பெருமையை எனக்களித்தார். அதற்காக அவருக்கும் மற்றும் எனது நண்பர்களுக்கும் நான் நன்றிசெலுத்துகின்றேன்.

நமது ராமசாமிப் பெரியார் உண்மையிலேயே ஒரு பெரியார் என்பதற்கும், ஒரு பெரிய சக்திவாய்ந்தவர் என்பதற்கும் வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன. அதாவது ஒரு உண்மையான பெரியாருக்கு வேண்டியகுணங்கள்மூன்று. அவையாவன:-

1. அவரைப்பற்றி உலகத்தார் தப்பபிப்பிராயம் கொள்ளவேண்டும். 2. அவரது கொள்கைகள் எங்கும் கண்டிக்கப்பட வேண்டும். 3. அவர் கடுமையாக வையவும், சபிக்கவும் படவேண்டும்.

எனவேஇத்தகைய மூன்றுதன்மைகளையும்பெற்றவர்நமதுபெரியாராவர். தேசியஇயக்கத்தில்பெரிதும்ஈடுபட்டு மனப்பூர்வமாய் உழைத்தவர் என்பதையும் அதற்காக பல கஷ்ட நஷ்டங்கள் அடைந்தவர்கள் என்பதையும் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. கொஞ்சநாளைக்கு முன் நமது நாட்டில் கதர் அணியாதவர்கள் தேசபக்தர்கள் அல்ல என்று சொல்லப்பட்டு வந்த கொடுமையை ஒழித்தவர் நமது பெரியாரே ஆகும். சமுதாயத்துறையில் இறங்கி வைக்கம் முதலிய இடங்களில் தாழ்ந்த மக்களுக்காக சத்தியாக்கிரகம் முதலியவை செய்து அதற்காகச்சிறையும்சென்று தெருவில் நடக்கும் உரிமை முதலியவைகளை ஸ்தாபித்தவர் நமது பெரியாராகும். நமதுபெரியார் கொள்கைகள் பல வைதீகர்களுக்கும்சமயப்பித்தர்களுக்கும் சத்ருவிரோதமாகத்தோன்றலாம். ஆனால் அது நமது திருமூலர் கூறியதுபோல் "குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார் "குருட்டுக் குருவை குருவெனக் கொள்வர், குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி குழியில் வீழ்வர்" என்பது போன்றதேயாகும். சமயமென்பது என்ன? என்பதை உணர்ந்தவர்கள் சமய ஆசாரிகள் அல்ல என்பதே அவரது உபதேசம். அதுபோலவே கடவுள் என்பது என்ன என்பதை உணராதவர்கள் கடவுள் பக்தர்கள் அல்லது என்பதே அவரது உபதேசமாகும். சமீபத்தில் பாலக்காட்டில் அவர் பேசியபோது சொன்னதென்ன வென்றால், "இப்போது சிலர் வெகு பிரயாசையுடன் தங்கள் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்கும், கூலிப்பிழைப்புக்குமாகக் காப்பாற்ற முற்பட்டிருக்கும் போலிச் சமயங்களையும், போலிக்கடவுள்களையும், போலித் தேசியங்களையும், போலி சுயராஜயங்களையுமேதான் அடியோடு அழிக்கவேண்டுமென்கின்றேன்" என்றுதான் சொல்லியிருக்கின்றார். இத்தகைய உயரிய அரியதொண்டுகளை நமக்காக ஆற்றிவரும் ஒரு பெரியாரின் படத்தைத் திறந்துவைக்கும் பெருமை எனக்குக் கிடைத்தது எனக்கு பெரும்பாக்கியமேஆகும். என்றுசொல்லிப் படத்தைத் திறந்துவைத்தார். எல்லோரும் எழுந்துநின்றுகரகோஷத்துடன் 'ஜே'கோஷம்செய்தார்கள். நீண்டபெரியமாலை போடப்பட்டது. பிறகு தலைவர் எம். கோவிந்தன் அவர்கள் முடிவுரை கூறுகையில் திரு. ராமசாமிப் பெரியாரை சிலர் நாஸ்திகர் என்று சொல்வதாகத் தெரிகின்றதென்றும், அப்படிச் சொல்லுகின்றவர்கள் ஆஸ்திகம்நாஸ்திகம் என்பது என்ன என்று அறியாதவர்கள் என்றும், எவனொருவன் கஷ்டப்படாமல் சாப்பிடுகின்றானோ, எவனொருவன் கஷ்டப்படுகின்றவனுக்குஉதவாமல்சுகமனுபவிக்கின்றானோ அவனே நாஸ்திகனாவான்என்றும் சமஸ்கிருதத்தில் பல சுலோகங்கள் சொல்லி சுயமரியாதை இயக்கந்தான் ஆஸ்திக இயக்கமென்றும், அதற் கெதிரிடையானதெல்லாம் நாத்திகமென்றும்சொல்லிமுடித்தார்.

பிறகு திருவாளர்கள் அழகர்சாமி, எஸ். குருசாமி, பொன்னம்பலனார், அருணாசலம், மரகதவல்லி, முருகப்பர், பிச்சப்பா சுப்பிரமணியம், ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் பேசி செங்கற்பட்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## மறுநாள் சைவமெய்யன்பர்கள் மகாநாடு

மறுநாள் காலை 9 மணிக்கு சைவமெய்யன்பர்கள் மகாநாடு கூடியதும் நாகர்கோவில் வக்கீல் சிதம்பரம்பிள் அவர்கள் வரவேற்பு சொற்பொழிவு நிகழ்த்தியபின் சாத்தூர் வக்கீல்திரு. கந்தசாமிமுதலியார் பி. ஏ. அவர்கள் தலைமை வகிக்கும்படி திருவாளர்கள் வக்கீல் சிதம்பரம்பிள்ளை, சிவஞான தேசிகர் ஆகியவர்கள் பிரேரேபிக்க திருவாளர் டி. கே. சிதம்பரநாதன் அவர்கள் ஆதரிக்க திரு. கந்தசாமி முதலியார் தலைமை வகித்து நீண்டதோர் தலைமைப் பிரசங்கம் செய்தார்கள். பிறகு பட்டுக்கோட்டை சைவ மெய்யன்பர்கள் மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களைப் படித்துக் காட்டி திரு. முருகப்பா அவர்கள் விளக்கமாகப் பேசி தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

## இரண்டாம் நாள் பகல்

பிறகு சாப்பாட்டிற்கு ஒத்திவைத்து பகல் மூன்று மணிக்கு மகாநாடு கூடியதும், சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாடு கூடிற்று. வரவேற்புத் தலைவர் சாத்தன்குளம் திரு. ராகவன் அவர்கள் வரவேற்புக்கழக உபந்நியாசம் செய்தவுடன், பட்டுக்கோட்டை திரு. ப. சு. தண்டபாணி அவர்கள் தலைமை வகித்து நீண்ட அருமையான தலைமைப்பேருரைநிகழ்த்தினார். பிறகு பட்டுக்கோட்டை தொண்டர் மகாநாட்டுத் தீர்மானம்படித்துக் காட்டி நிறைவேற்றியதும் திருவாளர்கள் திருக்குறள் சுப்பிரமணியதாஸ், அருப்புக்கோட்டை கருப்பையா, சொக்கலிங்க பாண்டியர், மூவலூர் ராமாமிர்தத்தம்மாள், பொன்னம்பலனார், அழகர்சாமி, எஸ். வி. லிங்கம், மரகதவல்லி-முருகப்பா, பிச்சப்பா சுப்ரமணியம், எஸ். குருசாமி, ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் பல விஷயங்களைப்பற்றி பேசினார்கள். பிறகு தலைவர் முடிவுரை கூறியதும் வரவேற்புக் கழகத்தாரால் எல்லோருக்கும் வந்தனம், மாலையிடல், நன்றி கூறல் முதலியவைகள் நடந்து திரு. பிச்சப்பா சுப்பிரமணியம் அவர்களால் வரவேற்புக் கழகத்தாருக்கு நன்றிசெலுத்தப்பட்டு மகாநாடு இரவு 10-மணிக்கு இனிது நிறைவேறியது. மகாநாட்டின் சிறப்புக்கும், மற்றும் சௌகரியங்களுக்கும் திருவாளர்கள் ஏ. ராமநாதன், டாக்டர் நெட்டோ ஆகியவர்களே முக்கிய பொறுப்பாளிகளாவார்கள். இரண்டு நாளும் சுமார் 3000 பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் இடைவிடாமல் கூடியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

---

"சாதிப்பிரிவினில் :: :: தீமூட்டுவோம்"




# தாதுபுஷ்டிக்குக் கைகண்டது
# சி. எம். சாமி மன்மத கோலாகல குளிகை.

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழப்பட்டது. தாதுபுஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திரும்பவரும். நல்ல ஜீரணம், ரத்த விர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே இதனருங் குணம் விளங்கும்.

120-குளிகைக்கு ரூ. 10. 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. வி. பி. சார்ஜ் வேறு.

**குருநாக பஸ்பம்** மூலத்திற்கு ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ் மூலம், ரத்த மூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும்.

உத்தரவாதமுள்ள சிறந்த ஔஷதம். 20 நாள் புட்டி 1-க்கு ரூபா 16. மாதிரி புட்டி 1-க்கு ரூபா 4-0-0.

சகல வியாதிகளுக்கும் நம்மிடம் முதல்தரமான தேவ ஔஷதங்களிருக்கின்றன.

மலாய் நாட்டிலுள்ளவர் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்

நற்சாக்ஷிகளையும், வேறு ஔஷதங்களையும் கியாட் லாக்கில் பார்க்கவும்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர் **சி. மலையப்பசாமி** நித்தியானந்த வைத்தியசாலை, பழநி, (தென் இந்தியா),

## புகார் கூறும் சந்தாநேயர்கள் கவனிக்க

"குடி அரசு" பத்திரிகை கிரமமாகக் கிடைக்கவேண்டிய காலத்தில் கிடைக்காமல் 3, 4 நாட்கள் கழிந்த பின்னரே கிடைக்கின்றது என்று அடிக்கடி ஏராளமான புகார்கள் சென்னைக்கு வந்தபிறகு சந்தாநேயர்களிடமிருந்து எங்களுக்கு வருகின்றன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நமது காரியாலயத்திலிருந்து தவறாமல் பத்திரிகைகளும் பார்சல்களும் தபாலிற் சேர்க்கப்படுகின்றன. காரியாலயத்தில் தாமதம் ஒன்றுமில்லை. சந்தாநேயர்களின் ஆவலாதிகளைத் தபால் அதிகாரிகட்குத் தெரியப்படுத்தியதில், அவர்கள், தாமதமாகக் கிடைத்த பத்திரிகைகளின் விலாசம் எழுதப்பட்ட மேல்ரேப்பரை அனுப்பி வைத்தால் தாமதத்தின் காரணங் கண்டுபிடித்து உரிய காலத்தில் பத்திரிகை கிடைக்கும்படியான ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்தார்கள். ஆதலால் புகார் கூறும் சந்தாநேயர்கள் தபால் முத்திரை இடப்பட்ட மேற் சுற்று ரேப்பரை எங்கட்கு அனுப்பிவைத்தால் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளச்செய்து உரியகாலத்தில் பத்திரிகைகள் வந்துசேரும்படி செய்கிறோம் என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

# குடி அரசு

சென்னை 1929 ஜூலை 28வ

## கடவுளும் மதமும்

(1)

இவ்வாரத்திய தலையங்கம் கடவுளும் மதமும் என்று தலைப்பெயர் கொடுத்து எழுதப் புகுந்ததன் முக்கிய நோக்கம் என்னவெனில், சுயமரியாதை இயக்கம் நாட்டில் பரவ ஆரம்பித்தபிறகு அதிலும் அவ்வியக்கம் நாட்டில் சற்று செல்வாக்குப் பெறத் தொடங்கிய பின்பு மக்களுக்குள் தானாகவே ஒருவித குழப்ப உணர்ச்சி தோன்றியிருப்பதை உணர்கின்றோமாதலினாலேயாம். அதோடுகூட பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதார்களில் அரசியல், தேசியம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும், சமயம், புராணம், பிரசங்கம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும் இவ்வியக்கத்தை எதிர்க்கக் கடவுளையும்மதத்தையும் பற்றிய பொதுமக்களின் குழப்பத்தைத் தங்களுக்கு ஆதாரமாய் வைத்துக்கொண்டும், மற்றும் திரித்துக் கூறிக்கொண்டும் விஷமப் பிரசாரம் செய்து வருவதனாலும், நமது இயக்கத்தில் உண்மையான பற்றுக்கொண்ட உண்மை நண்பர்களிற் சிலர் இவ்விஷமப் பிரசாரத்தைக் கண்டு பயப்படுவதாகத் தெரிவதாலும், மற்றும் சில பெரியோர்களும், சமய சம்பந்தமாக மனத்துடிப்புக் கொள்வதாலும் நமது நிலையையும், கடவுள் மதம் என்பதுபற்றி நாம்கொண்டுள்ள கருத்தின் நிலையையும் சற்று விளக்கிவிட வேண்டுமென்பதாகக் கருதி இத்தலைப்புக் கொடுத்து எழுதப்புகுந்தோம். இவைகளைப்பற்றி இதற்குமுன்னும் பல தடவை எழுதியுள்ளோம். ஆயினும் அவைகளையும்விட இது சற்று தெளிவாக இருக்கலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே இதை எழுதுகின்றோம். வாசகர்கள் தயவுசெய்து இதைச் சற்று நிதானமாகவும், கவனமாகவும் படித்துப்பார்க்கும்படி வேண்டுகின்றோம், இக்கட்டுரையானது இதே தலைப்பின் கீழ் திருநெல்வேலி ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் முடிவுரையின்போது நம்மால் எடுத்துச் சொல்லப்பட்டதை அனுசரித்தும், சிலநண்பர்கள் அதை விளக்கித்தலையங்கமாக எழுதும்படி சொன்னதை அனுசரித்தும் எழுதப்பட்டதாகும்.

முதலாவதாக, நமக்குக் கடவுளைப் பற்றியாவது, மதத்தைப் பற்றியாவது சிறிதும் கவலை இல்லை என்பதாகவும், கஷ்டப்படும் மக்களின் துன்பம் நீங்கி அவர்களுக்கு அறிவு, ஆற்றல், இன்பம் ஆகியவைகளில் உள்ள கட்டுப்பாட்டை உடைத்து விடுதலையை உண்டாக்க வேண்டும் என்பதே முக்கியகவலைஎன்பதாகவும் அநேகதடவைகளில்வெளியிட்டிருக்கின்றோம். அதுவும் பலர் நமமுடைய இம்முயற்சியில் கடவுளையும் மதத்தையும் கொண்டுவந்துகுறுக்கேபோட்டுவிட்டதால் தான் நாம் அதைப் பற்றி கவலையில்லைஎன்று சொல்லவேண்டியதாயிற்றே பொழிய உண்மையில் கடவுளையும் மதத்தையும் பற்றி பேசவேண்டும் என்கின்ற அவசியத்தையோ, ஆசையையோ கொண்டு நாம் அதில் பிரவேசிக்கவில்லை. அதுபோலவே தான் சைவ சமயத்தைப்பற்றியும் நாம் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டதும் என்போம். எப்படி எனில், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் நமக்கு எதிராகத் தம்மால்கூடிய சூழ்ச்சிகள் எல்லாம்செய்து பார்த்தும் ஒன்றிலும் பயன் பெறாததால்கடைசியாகச் சமயமென்றும், சமயப்பெரியாரென்றும் கூறிக்கொண்டுஅவ்வார்த்தைகளையே தமது ஆயுதமாகவும், சமய சம்பந்தமான சில பைத்தியக்காரர்களைத் தமக்குப் படையாகவும் வைத்துக்கொண்டு அவர்களைத்தெருவில் இழுத்து நம்மீது உசுப்படுத்திவிட்டுச் சூழ்ச்சிப் போர் தொடுக்க ஆரம்பித்ததின் பலனாய் சைவசமயம் என்பதும் சமயாச்சாரியர்கள் என்பவர்களும் சந்திக்க வரவேண்டியவர்களானதோடு சைவப் பெரியார்கள் என்பவர்களின் சாயமும் வெளுக்க வேண்டியதாய்விட்டது. எனவே இன்றையதினம் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், ராமாயணம், பாரதம் ஆகியவைகளிலுள்ள கதைகளை நம்பி முக்கிய கதாநாயகர்களைக் கடவுள்களாக மதித்து வணக்கம், பூஜை, உற்சவம் செய்ய எவனெவன் சம்மதிக்கின்றானோ அவன் மாத்திரமே கடவுள் நம்பிக்கையும் சமயப் பற்றும் கொண்டவன் என்றும், மற்றவர்கள் நாத்திகர்கள், சமயத் துரோகிகளெனவும் தீர்மானிக்கப்பட்டு அதுவேமுடிந்த முடிவாகவும் சொல்லப்பட்டுவிட்டது. இது எப்படி இருந்தபோதிலும், கடவுள், மதம் என்பது என்னவென்பது பற்றியும், இவை எப்படி உண்டாயிற்று என்பது பற்றியும், இவற்றை உண்டாக்கியவர்கள் கெட்ட எண்ணத்தோடு உண்டாக்கினார்களா? அல்லது நல்ல எண்ணத்தோடு உண்டாக்கினார்களா? அல்லது அறியாமையினாலுண்டாக்கினார்களா? என்பவைகளைப்பற்றியும், இவற்றில் நமது அதாவது மக்கள்கடமை என்ன என்பதுபற்றியும் சற்று ஆலோசித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

முதலாவதாக, இங்கு குணம், உருவம், பெயரற்ற தன்மையுடைய கடவுள் என்பதைப் பற்றியும், மக்களின் வாழ்க்கை நலத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள்தான் மதம் என்று சொல்லப்படும் மதத்தைப் பற்றியுமே இங்கு விவரிக்கக் கருதியுள்ளோமே தவிர மற்றபடி பல கடவுள்களின் தன்மையையும், மதப் பிரிவுகளான கிறிஸ்து, மகமதியம், ஜைனம், பௌத்த, சீக்கிய, சைவ, வைணவ, நிரீச்சுவாத, உலகாயுத, சாக்கிய, வாம முதலிய பல உள் மதங்களைப்பற்றியும் நாம் இங்கு தனித்தனியாகப் பிரஸ்தாபிக்க உத்தேசமில்லை. ஏனெனில், அவற்றிற்கு ஏற்கனவே மறுப்புகள் தாராளமாய் வெளிப்பட்டு ஒருவருக்கொருவர் பதில் சொல்ல முடியாமல் தத்துவார்த்தம் என்கின்றதற்குள் அடைக்கலம் புகுந்தும், நம்பித்தான் ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்திற்குள் புகுந்துமே தான் ஒவ்வொருவர்களும் அவரவர்கள் கடவுளையோ, கடவுள் தூதர்களையோ, அவதாரங்களையோ, சமயங்களையோ, சமயாச்சாரியர்களையோ காப்பாற்றிக்கொள்ள முடிந்ததே ஒழிய அறிவின்மீதோ, ஆராய்ச்சியின் மீதோ, நியாயத்தின்மீதோ நிலைநிறுத்த முடியாமல்போய்விட்ட விஷயம்உலகமறிந்ததாகும். ஆதலால் இத்தலையங்கத்தில் நாம் அவற்றில் பிரவேசிக்கவில்லை.

முதலாவது மக்களுக்குக் கடவுள் எப்பொழுது எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றி ஆராய்வோம். மனிதன் பிறந்து வளர்ந்து நினைக்கப்பட்ட பிறகுதான் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து நிச்சயம் ஏற்பட்டு இருக்கவேண்டும். அதை யாரும் மறுக்கமுடியாது. ஏனெனில்இப்போதுகூட மக்களுக்குப் பிறர் சொல்லிக்கொடுத்த பிறகுதான் கடவுள் என்கின்ற பேச்சும் நினைப்பும் ஏற்படுகின்றதேதவிர தானாக ஏற்படுவதில்லை. எப்படி எனில், சிறு குழந்தைகளை நாம் கட்கத்தில் இறுக்கிக்கொண்டு ஒரு உருவத்தையோ, வஸ்துவையோ காட்டி சாமி என்றும், அதைக் கைகூப்பி கும்பிடு என்றும் சொல்லிக்கொடுத்த பிறகே குழந்தை சாமியையும் கும்பிடவும் அறிகின்றது. அதுபோல ஆதியிலும் மனிதன் பிறந்த பிறகுதான் அவன் மனதிற்குக் கடவுள் நினைப்பு தோன்றியிருக்கவேண்டும். அது எப்படி என்றும், எப்போதென்றும் பார்ப்போமானால் சாதாரணமாக மனிதனுக்கு அறிவுவளர்ச்சியும், ஆராய்ச்சி வளர்ச்சியும் இல்லாத காலத்தில் தான் கடவுள் நினைப்பு தோன்றி இருக்கவேண்டும். கடவுள் என்பது—கடவுள், தெய்வம், அல்லா, காட் என்ற

தமிழ், சமஸ்கிருதம், துலுக்கு, ஆங்கிலம் முதலிய பலபாஷைகளில் பல சொற்களாக இருந்தாலும்குறியில் அர்த்தத்தில்உலகத் தோற்றத்திற்கும், நடப்பிற்கும் அழிவிற்கும் காரணமாகிய ஒரு சக்தியையே குறிப்பிடுவதாகவும், அதாவது சிலரால் இயற்கை என்று சொல்லப்படுமானால் அவ்வியற்கையின் இயங்குதலுக்கும், பஞ்சபூத கூட்டு என்று சொல்லப்படுமானால் அக்கூட்டின் சேர்க்கைக்கும் ஏதாவது ஒரு சக்தி இருந்துதானே ஆகவேண்டும் என்பதுவும், அந்த சக்திதான் கடவுள், எல்லாம் வல்ல ஆண்டவன்— அல்லா, காட் என்று சொல்லப்படுகின்றதென்று சொல்வதானாலும், அந்த சக்தி என்னும் கடவுளே எப்படி மக்கள் மனதிற்கு வந்தார் என்பதுதான் இங்கு விசாரிக்கத்தக்கதாயிருக்கின்றது. ஆகவே அந்த சக்தி மனிதனுக்குத் தோன்றிய காலம் எது என்பதாகவும், அது நம் நாட்டைப் பொறுத்தவரை எப்படியிருந்தது என்பதாகவும் பார்க்க வேண்டுமானால், நம் நாட்டிலுள்ள கடவுள்களைக் கொண்டுதான் அதைத் தாராளமாய் உணரமுடியும். அதாவது இப்போது நமது நாட்டிலுள்ள கடவுள்கள் எவையென்றால் பூமி, மலை, காற்று, நெருப்பு, நதி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மழை, இடி, மின்னல், மேகம், நோய்கள் அவை தீர்க்க வேண்டியவைகள் முதலிய அநேக விஷயங்கள் கடவுளாகக் கருதப்படுகின்றது. இவைகளெல்லாம் இவற்றின் உண்மையை அறிய ஆற்றல் இல்லாத காலத்தில் கடவுளென்று ஒப்புக்கொள்ளப்பட்டவைகள் அதிலும் இமயமலையே கைலயங்கிரியாகவும், அதுவும் வெள்ளி மலையாகவும், அங்கு கடவுள் இருப்பதாகவும், அங்கிருந்து வரும் நீரும் மலையிலுள்ள கடவுளின் தலையிலிருந்து வருவதாகவும், கருதப்பட்டு இமய மலைக்கு அப்பால் ஒரு நாடும் கண்டுபிடிக்க முடியாதிருந்ததும், மேல்நாட்டை மேல் லோகமென்றும், கீழ்நாட்டை பாதாள லோகம், நாகலோகம் என்றும் இப்படிப்பலவாறாக கடவுள் தன்மையைச் சொன்னதற்குக் காரணமென்னவென்று பார்க்கும்போது அவற்றின் உண்மையை அறிய முடியாததாலேயே அவை கடவுளென்றும், அவற்றின் இயங்குதல் கடவுள் சக்தி என்றும் சொல்ல வேண்டிய அவசியம் தானாக ஏற்பட்டது. இப்போதும் மனிதன் தன்னால் முடிந்தவைகள் போக முடியாதவைகளுக்கே கடவுள்சக்தி என்றுசொல்லிவிடுகின்றான். உதாரணமாக, சிறு குழந்தைகள் ஒரு ஜால வேடிக்கைக்காரனுடைய செய்கையை மந்திர சக்தி என்றும், தெய்வ சக்தி என்றும், உபாசனைச் சக்தி என்றும், குட்டிச் சாத்தான் சக்தி என்றும் கருதுகிறார்கள். அப்பையனாயிருந்து அப்படியே கருதியிருந்த நாம் இப்போது அறிவு வளர்ச்சி பெற்றபின் அந்த ஜால வேடிக்கைகளை மந்திர சக்தி என்று எண்ணாமல் தந்திரம், கைத்திறம் என்று சொல்லுகின்றோம். மற்றும் அந்த ஜால வேடிக்கைக்காரன் செய்யும் ஜாலத்தின் வழி இன்னதென்று நமக்குத்தெரியாவிட்டாலும் கூட நாம் அவற்றை ஒரு காலமும் மந்திர சக்தி என்றோ, தெய்வ சகதி என்றோ சொல்லாமல் "இது ஏதோ தந்திரம் தானே ஒழிய வேறில்லை. ஆனால் அது இன்னது என்று கண்டுபிடிக்க முடியவில்லை" என்று சொல்லி விடுகின்றோம். எனவே, ஒரே காரியம் நமக்கே ஒரு காலத்தில் மந்திரமாகவும், தெய்வ சக்தியாகவும் தோன்றியது. பிறகு அது தந்திரம் என்று தோன்றக் காரணம் என்னவென்றால், அது அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சிப் பலனுமேயாகும். அதுபோலவே நமக்கு இப்போதுதெய்வ சக்தி, கடவுள் சக்தி என்று தோன்றுகின்ற காரியமெல்லாம் மேல்நாட்டாருக்குகடவுள்சக்தியாகத் தோன்றுவதில்லை. உதாரணமாக சூரிய சந்திர கிரகணம்இன்னது என்று கண்டுபிடிக்க முடியாத காலத்தில் நாம் அவைகளுக்கு ஒரு தெய்வ சக்தியைக் கண்டுபிடித்து சூரியன் என்கின்ற தெய்வத்தை ராகு என்கின்ற பாம்பு பிடிப்பதாகவும், அது சூரியன் என்கின்ற கடவுளுக்கு ஏற்பட்ட சாபம் என்றும் சொல்லி அச்சாபம் தீர நாம் மந்திரங்கள் ஜெபித்து அத்தோஷம் தீர ஸ்நானமும் செய்து வருகின்றோம். இது வானசாஸ்திரம் தெரியாத காலத்தில் ஏற்படுத்திக்கொண்ட கருத்தாகும். இப்போது வானசாஸ்திரம் தெரிந்தவர்கள் பூமி, சூரியன், இவற்றின் இயங்குதல் அதன் கால அளவு ஆகியவைகளைக் கண்டு பிடித்தபின் சூரியனைப் பாம்பு கடிப்பதில்லை என்பதையும் ஒருவாறு நன்றாய் உணருகின்றோம்; அதுபோலவே எங்கிருந்து எப்படி தண்ணீர் வருகின்றதென்பது தெரிந்தவுடன் நதிக் கடவுளும், மேகக் கடவுளும், வர்ண பகவானும் சிறிது சிறிதாக நம்மனதில் மறையத் தொடங்கிவிட்டன. அதுபோலவே வியாதிகள் எப்படி வருகின்றன என்கின்றதான சுகாதார ஆராய்ச்சியும், உடற்கூறு ஆராய்ச்சியும் நமக்குத் தெரியப் புறப்பட்ட பின்பு பேதி, மாரி அம்மை முதலிய தெய்வங்களின் உணர்ச்சியும் மதிப்பும் சிறிது சிறிதாக மறையத் தலைப்பட்டன. இதுபோலவே காற்று, கருப்பு, பேய் முதலியவைகளும் மறைந்து வருகின்றன. இந்த முறையில் இனியும் நமக்குள் மீதி இருக்கும் கடவுள்உணர்ச்சிகள் எவை என்று பார்ப்போமானால் காரண காரியம் முதலிய விவரங்கள் கண்டுபிடிக்க முடியாதவைகளையே கடவுள் செயல் என்றும், கடவுள் சக்தி என்றும் சொல்லி வருகின்றோம். இவைகளும் நாளுக்குநாள் மனிதன் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சியும முதிர முதிர மறைந்துகொண்டேதான் வரும். மேலும் இப்போது ஒருவருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றப்படும் காரியங்கள் மற்றொருவருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றப்படாமலிருப்பதையும் பார்க்கின்றோம். அது அவ்விருவருடைய அறிவு ஆராய்ச்சி ஆகியவற்றின் வித்தியாசமேயாகும்.

இப்போதும் நம் மனதிற்கு எட்டாத காரியங்களை மேனாட்டார் செய்யும்போது நாம் அதிசயப்பட்டாலும் அதை மந்திர சக்தி என்று நாம் சொல்லத் துணிவதில்லை. இந்த அளவுக்கு நாம் தைரியமாக வந்துவிட்டோமென்றாலும் நமக்குப் பூரண அறிவும் ஆராய்ச்சி முடிவும் ஏற்படும் வரை கடவுள் உணர்ச்சி நம்மை விட்டு விலக முடியாது. அன்றியும், வாழ்க்கையின் பக்குவமடையாதவர்களுக்குக் கடவுள்உணர்ச்சி இருந்தேதீரவேண்டியதாயுமிருக்கின்றது. அதாவதுகஷ்டப்பட்டுஏமாற்றமடைந்தவனுக்கும் ஈடு செய்யமுடியாத நஷ்டமடைந்தவனுக்கும் கடவுள் செயல் என்பதைச் சொல்லித்தான் ஆறுதலையும் திருப்தியையும் அடையச்செய்ய வேண்டியிருக்கின்றது. நல்ல அறிவும் ஆராய்ச்சியும் உடையவர்களும் தங்களுக்குக் காரணகாரியம்எட்டாத இடத்திலும், ஈடுசெய்ய முடியாத இடத்திலும் கடவுள் செயல் என்பதைக்கொண்டுதான் திருப்தி அடைகின்றார்கள். அப்போது தங்கள் அறிவுக்கு மேல் ஒன்று இருப்பதை எண்ணித் தீரவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் உறுதியான பக்குவமடைந்தவர்கள் எந்த விஷயத்திற்கும் தங்களுக்குத் தெரிந்த காரணத்தைக் கொண்டு சமாதானமடைவதும் தெரியாததாயிருந்தால் நமக்கு எட்டவில்லை என்றோ; அல்லது இதுதான் இயற்கை என்றோ கருதி திருப்தியடைவதுமாய் இருக்கின்றார்கள். எனவே சாதாரண மக்கள் கடவுளுக்கும், சற்று அறிவுடைய மக்கள் கடவுளுக்கும், ஆராய்ச்சிக்காரர்கள் கடவுகளுக்கும், பக்குவமடைந்தவர்கள் எண்ணத்திற்கும் அநேக வித்தியாசமுண்டு. ஒருவருக்கொருவர் கடவுள் வணக்கத்திலும், கடவுள்மீது சுமத்தும் பொறுப்பிலும் அநேக வித்தியாசமுண்டு.

(மற்ற விவரம் கடவுளும் மதமும் என்னும் இரண்டாவது வியாசத்தில் வரும்.)

---

## விபசாரத்திலிருந்து மீட்கப்பட்ட பெண்ணின் திருமணம்

விபசாரத்திலிருந்து மீட்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு 21—7—29உ கல்கத்தா விபசாரத்தடை சங்கத்தின் ஆதரவில் கோவிந்த குமாரர் வீதியில் திருமணம் நடைபெற்றது. விபசாரத்திலிருந்து மீட்கப்பட்ட பெண்ணுக்கு முறையாக விவாகம் நடப்பது இதுதான் முதல் தடவையாகும் இத்தத் திருமணத்திற்கு மாயூர்பஞ் மகாராணி (விதவை) சர். டேவிட் எஸ்ரா தம்பதிகள், ராய்பகதூர் சுனிலால் போஸ், திரு. ஜே. என். வாசு, டாக்டர் டி. எல். மித்திரா, திரு. எ. என் பானர்ஜி, திரு. கோபால்தாஸ் சௌத்திரி முதலியோர் வதிருந்தனர். திரு. கோபால்தாஸ் சௌத்திரிதான் இந்த விடுதியை ஏற்படுத்தியவர்.

---

## சென்னை சட்டசபை உப தேர்தல்

### ராவ்பகதூர் டாக்டர் சி. நடேச முதலியார் அறிக்கை

சென்னை சட்டசபையில் சென்னை நகரத் தொகுதியின் மெம்பராயிருந்து காலஞ்சென்ற திரு. பி. பக்தவத்சலு நாயுடு அவர்களின் காலியான ஸ்தானத்தின் உப தேர்தலுக்கு ராவ்பகதூர் டாக்டர் சி. நடேச முதலியார் அவர்கள் அபேட்சகராய் நிற்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

# தூத்துக்குடியில் காங்கிரசுக் கூட்டம்

—o—

## காங்கிரஸ் மேடை சுய மரியாதை மேடையாயிற்று

தூத்துக்குடி, ஜூலை, 23

ஞாயிற்றுக்கிழமையன்று இவ்வூரில் காங்கிரசுக் கூட்டம் ஒன்று முதினதாஸ் அவர்கள் தலைமையில் கூடிற்று. அப்பொழுது தலைவர் சுயமரியாதை இயக்கத் தலைவர்களைத் தூற்ற ஆரம்பித்தார். உடனே கூட்டத்தில் முணுமுணுப்பு ஏற்பட்டது. எனவே, கூட்டத்தலைவர் தான்கூறியதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். என்றாலும், தலைவர்இருந்த மேடைமீது எதிரின்றுசுயமரியாதையின் சார்பாய் பலர் சரமாரியாகக் கேள்விகள் கேட்டனர். பதில் அளிக்கப்படவில்லை. உடனே பெரும் குழப்பம் ஏற்பட்டுவிட்டதனால் காங்கிரசு கூட்டத்தை மறுநாளைக்கு வைத்துக்கொள்ளுவதாகக் கூட்டம் கலைக்கப்பட்டுவிட்டது.

### காங்கிரசுக்குப் போலீஸ் பந்தோபஸ்து

மறுநாள் போலீசு பந்தோபஸ்தின் பேரில், திரு. மு. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் தலைமையில் காங்கிரஸ் கூட்டம் கூடிற்று. அதுகாலை திரு. நித்தியானந்தசாமி என்பவர் மறைவாகச் சுயமரியாதை இயக்கத்தைத் தாக்கிப் பேசினார். தலைவருக்குப் பல கேள்விகள் குறித்துச் சீட்டுகள் அனுப்பப் பெற்றன. விடையில்லை. எனவே கேள்வி கேட்டவர்கள் விடையளிக்காமல் பேசப்படாதென்று ஆட்சேபித்தார்கள். பிறகு திரு. நித்தியானந்தசாமி திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியார்மீது குறை கூற ஆரம்பித்தார். கேள்விகட்கு விடையின்றிப் பேசுதல் கூடாதென மீண்டும் குழப்பம் ஏற்பட்டது. இக் குழப்பம் அடிதடியில் முடியும்போலிருந்ததும், தலைவரும் அவர் சகாக்களும் போனவழி தெரியவில்லை. அதே பிரசங்க மேடையில் பின்னர் சுயமரியாதைப் பிரசங்கம் நடைபெற்றது. அதுகாலை இவ்வூர் காங்கிரசார்களின் நடவடிக்கைகளைப் பற்றி விளக்கிப் பேசிய பின்னர் "திரு. ஈ. வெ. இராமசாமிப் பெரியாருக்கு ஜே!" என்ற கோஷத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

"திராவிடன்"


—

## திவான்பகதூர் ஒ. தணிகாலஞ் செட்டியார்

—

ஸ்மால்காஸ்கோர்ட் பிரதம நீதிபதி திவான்பகதூர் ஒ. தணிகாலஞ் செட்டியாரவர்கள் சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற 21-7-29 தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்கு திடீரென்று காலஞ்சென்று விட்டார். மறுநாள் திரு. செட்டியாரவர்களின் பிரிவாற்றாமையை முன்னிட்டு சென்னை கார்ப்பரேஷன் ஆபீஸ், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், பச்சையப்பன் கல்லூரி, ஜில்லா கல்விச்சபை ஆபீஸ் முதலியவைகள் மூடப்பட்டன. ஹைகோர்ட் முதலியவைகளில் அநுதாபந் தெரிவிக்கப்பட்டது.


ஒரே மாதம் வரையில் ரூ. 5-14.
ஒரு உண்மையான கிராமபோன்
என்ன விலைக்குக் கிடைக்கிறது பாருங்கள்.
பிக்மி போன் என்று சொல்லப்படும் சிறிய சைஸ் கிராமபோன்



இது 200, 300 விலையுள்ள பெரிய கிராமபோன்களுக்கு இணையாக வாசிக்கக் கூடியது. இதன் யந்திர அமைப்பு பெரிய கிராமபோனைப்போலவே உள்ளது. இந்த கிராமபோன் பெட்டியில் சவுண்டு பாக்ஸ், ஆரன், இரண்டு டஜன் கொண்ட ஊசிப்பெட்டி எல்லாம் உண்டு. இரண்டு பக்கமும் பாடக்கூடிய ஒரு ரிக்கார்டும் இனாமாகச் சேர்த்தனுப்பப்படும். இங்கிலீஷ் பாண்டுகள், சிரித்தல், விகடம் பேசுதல் முதலிய ரிக்கார்டுகள் தயாரிலுள்ளன.

தனி ரிக்கார்டு 1-க்கு ரூ. 1.
ஒரு ரிக்கார்டுடன் கிராமபோன் பெட்டி 1-க்கு ரூ. 5-14.
தபால் செலவு ரூ 1.
உடனே எழுதுங்கள்.
Sole distributors.—
CANADION WATCH PEOPLE,
G. P. O. MADRAS.


## சென்னை காங்கிரஸ் கமிட்டி தேர்தல்

22-7-29ந் தேதி மாலை சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி நிர்வாக அங்கத்தினர் தேர்தலின்பொருட்டு மௌண்ட்ரோடு மகாஜனசபை ஹாலில் ஒருகூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு திரு. சத்தியமூர்த்தி கோஷ்டியாரால் வழங்கப்பட்டிருந்த மஞ்சள் சீட்டுவைத்திருந்தவர்கள்மட்டுந்தான் அநுமதிக்கப்பட்டனர். இதற்கு முந்திய கூட்டத்திற்கு அநுமதிச்சீட்டு பெற்றிருந்தவர்களும் மற்றும் நான்கு அணா கொடுத்து காங்கிரஸில் மெம்பரானவர்களும் அநுமதிக்கப்படவேஇல்லை. தங்களுக்கு வேண்டிய இரண்டொருபத்திரிகைப் பிரதிநிதிகளைத்தவிரவேறுபத்திரிகைப்பிரதிநிதிகளை உள்ளே விடவில்லை. மகாஜனசபாவின்முன்வாயிலில் ஒரு வஸ்தாத் நிறுத்தப்பட்டிருந்ததோடு ஹிந்துஸ்தான் சேவாதளத் தொண்டர்கள் மேன்மாடிக்குப்போகும் எல்லாப்படிகளிலும் படிக்கு ஒன்றிரண்டு போராக நிறுத்தப்பட்டிருந்தனர். மஞ்சள் சீட்டில்லாத மற்ற மெம்பர்கள் உள்ளே நுழைய முயற்சிக்கும்போது பெருத்த கூச்சலும் குழப்பமும் உண்டாயிற்று. சேவாதளத் தொண்டர்கள் மற்ற மெம்பர்களை பலவந்தமாய்த் தள்ளித் துன்புறுத்தியதால் அடிதடியும் நிகழ்ந்தது. பலருக்கு நல்ல அடி என்று தெரிகிறது. சில ஆதிதிராவிடர்கள் தங்கள் டிக்கட்டுகளைக்காட்டி உள்ளே செல்ல முயன்றும் பயன்படாமற் போனதால் மிகுந்த ஆத்திரங் கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிகிறது. காங்கிரஸ் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை இப்போது எல்லாரும் வெகு நன்றாகத்தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.


நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில்
உங்கள் உயிரை இன்ஷியூர் செய்யுங்கள்

எல்லா இந்தியக் கம்பெனிகளிலும், அயல்நாட்டுக் கம்பெனிகள் பெரும்பான்மையானவற்றைப்பார்க்கிலும் இந்தக் கம்பெனிக்கு அதிக மூலதனம் இருக்கிறது.
நீங்கள் போடுகிற பணத்துக்கு அதிக பாதுகாப்பு உண்டு.

தயவு செய்து தங்கள் விலாசம் தெரிவித்தால் எமது பிரதிநிதி நேரில் வந்து தங்களைக் கண்டு பேசுவார்.

அந்தஸ்தும், செல்வாக்குமுள்ளவர்களிடமிருந்து ஏஜெண்டு வேலைக்கு மனுக்கள் தேவை.

கிளை ஆபீஸ், 4 பர்ஸ்ட் லைன் பீச், சென்னை.

| | | |
|---|---|---|
| அநுமதிக்கப்பட்ட மூலதனம் | ... | ரூ. 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... | ரூ. 3,56,05,275. |
| வசூலான ,, | ... | ரூ. 71,21,055. |



கர்ப்பாசய ரோக நிவாரணி

"சௌரியா"வின் அபூர்வ சக்தியைக்கண்டபெண்மணிகள் இதைஸ்திரீகளுக்கோர் வரப்பிரசாதினி என்றும், அதி சிரேஷ்டமான அவுஷதமென்றும், விலையில்லா ஆபரணமென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகால பஹிஷ்டி, ருதுசிராவம், பஹிஷ்டை தடைபட்டுப்போவது, வெண் ரத்தப்போக்கு, கர்ப்பஸ்ராவம், அகால பிரசவம், கருப்பை நழுகி விடுதல், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, கணைச்சூடு, சந்தானமில்லாமை, மலபந்தம், இருமல், உப்பஸம் முதலிய சகல ரோகங்களும் இந்த "சௌரியா"வின் உபயோகத்தினால் சூரியனைக் கண்ட பனிபோல் நிவர்த்தியாகிவிடும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.
கேட்லாக் இனாம், ஏஜண்டுகள் தேவை.

சங்கரராம் மெடிகல் ஹால்,
சேலம்.

(7-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"அருமை யுடைத்தென்ற சாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்"

திருநெல்வேலி ஜில்லா 2-வது சுயமரியாதை மகாநாட்டுத் தலைவர் திரு. எஸ்: ராமச்சந்திரன் பி. ஏ; பி. எல்., அவர்கள் நிகழ்த்திய தலைமைப் பேருரை வருமாறு:—

வரவேற்புக்கழகத்தலைவர் அவர்களே! சகோதரிகளே சகோதரர்களே!

சுயமரியாதைத் தொண்டர்களுக்குள் உயர்ந்தவர்களும் இல்லை, தாழ்ந்தவர்களும் இல்லை என்ற அடிப்படையான கொள்கையைச் செய்கையில் மக்களுக்குக்காட்டுவதற்கான சுயமரியாதைத் தொண்டர்களில் ஒருவன் என்று மதித்து என்னை இம்மகாநாட்டுக்குத்தலைமைவகிக்கும்படிதேர்ந்தெடுத்திருக்கிறீர்களென்று நம்புகிறேன். இம்மகாநாட்டை ஒழுங்காகவும், நேர்மையுடனும் நடத்திவைக்க இங்குக் கூடியிருக்கும் அன்பர்கள் ஒத்துழைப்பார்களென்று எண்ணி என் தலைமைப் பிரசங்கத்தை ஆரம்பிக்கிறேன்.

நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் ஜனங்கள் ஒன்றுகூடி ஒருமைப்பட்டு மனதைச்செலுத்த முடிந்தால் ஒரே கொள்கையை நினைக்கவல்லவர்களானால், எந்தக் காரியத்தையும், திறமையாக செய்துவிடலாமென்பதில் ஐயமில்லை. ஜனங்கள் ஒன்று சேர்ந்து கண்களும், கரங்களும் ஒன்றுகூடினால் உடனே இருதயம் ஒன்றுகூட தற்சமயம் அநேகமாக வாய்ந்துவருகிறது. தெரிந்தோ, தெரியாமலோ உணர்ச்சிகளும் எண்ணங்களும் கலந்து கூடுகின்றன. ஜனங்கள் ஒரே உணர்ச்சி உள்ளவர்களாகவும், ஒரே மாதிரிஎண்ணங்கள்உடையவர்களாகவும், ஒரேவித நோக்கமுடையவர்களாகவும் நினைத்தவை பெறுவதற்கு ஒரேவித சக்தி வாய்ந்தவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். அப்பொழுது சகோதர உணர்ச்சியும் ஒற்றுமையும் உற்பத்தியாகிவிடுகிறது. இவைகளே மகாநாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் பயன்களாகும்.

இம்மகாநாட்டில் நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருக்கிறார்கள். பெரும் பெருந்தலைவர்கள் வந்து இம் மகாநாட்டில் கலந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வளவு மக்களும், இவ்வளவு பெருந்தலைவர்களும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளுதற்கும் இம்மகாநாடு கூடியிருப்பதற்கும் காரணம் என்னவென்று நாம் ஆராய வேண்டும். பொது மக்களை ஏமாற்றிவிடுவதற்காக "வானத்தை வில்லாக வளைப்பேன்" "மணலைக் கயிறாகத் திரிப்பேன்" என்றுவாய்ப்பறை சாற்றுவதற்காக இம்மகாநாடு கூடப்படவில்லை. இம்மகாநாட்டின் நோக்கம் இந்நாட்டிலுள்ள அசுத்தமான சாக்கடைகளை எல்லாம் ஒழித்து பிற நாடுகளின் மக்கள் அடைந்திருக்கும் பாத்தியங்களை இந்நாட்டிலும் மக்கள் அடைய வேண்டுமென்பதும் இந்நாட்டை சுயமரியாதையுடன் நாடாக்க வேண்டுமென்பதுமேயாகும். இந்நாட்டிலுள்ள வெறுக்கத்தக்க சாக்கடைகள் எவை? நம்மக்கள் எப்படி இச் சாக்கடைகளால் துயருறுகிறார்கள்? இந்நாட்டிலுள்ள சாக்கடைகள் மதப் புரட்டுகள், புரோகிதப் புரட்டுகள், ஜாதிப் புரட்டுகள், வேதப் புரட்டுகள், புராணப் புரட்டுகள், பிறப்பால் உயர்வு தாழ்வுபுரட்டுகள், பழக்கவழக்கபுரட்டுகள் முதலிய இன்னும் அநேக சாக்கடைகளாலும், இப்பொழுதும் சாக்கடைகளின் நாற்றத்தாலும் நம்மக்கள் சுயமரியாதை அற்று மிருகங்களினும் கேவலமாய் வாழ வேண்டியவர்களாயிருக்கிறார்கள். 1914 வருஷத்தில் ஆரம்பித்த ஐரோப்பியமகா யுத்தத்திற்குப்பிறகு உலகத்திலுள்ள அநேகமாய் எல்லா தேசங்களிலும் சுயமரியாதை இயக்கம் தலையெடுத்துப் பரவ ஆரம்பித்திருக்கிறது. இப்புதிய இயக்கத்தின் தத்துவங்களைப்பற்றி சிலவார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சுயமரியாதை என்னும் பதம் சாதாரணமாக எளிதில் விளங்கக்கூடியதாயிருக்கிறது. ஒரு மனிதனோ அல்லது ஒரு சமூகமோ அல்லது ஒரு தேசமோ இயற்கையிலேயே எவ்வித கட்டுப்பாடும் தடையுமின்றி முன்னேறுவதற்கு ஏதுவான எல்லா சந்தர்ப்பங்களும், பாத்தியங்களும் அந்த மனிதனுக்கும், சமூகத்திற்கும் தேசத்திற்கும் உண்டு என்பதைசுயமரியாதை இயக்கம் ஒப்புக்கொள்கிறது. மனிதனுடைய மனவளர்ச்சி, அறிவுவளர்ச்சி, ஆண்மைவளர்ச்சி இவைகள்குன்றுவதற்கு ஏதுவாயிருக்கும் தூர்நாற்றமுள்ள சாக்கடைகள் அனைத்தையும் தூர்க்க இவ்வியக்கம் முன் வந்திருக்கிறது. சுயநலமே மூல மந்திரமாக கையாண்டுவரும் ஒரு தனிப்பட்ட வகுப்பார் தங்கள்கையில் எல்லா பாத்தியங்களையும்அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டால் அதற்கு விரோதமாக எதிர்த்து கிளர்ச்சி செய்து சண்டைபோட ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்பு உரிமை உண்டு என்றும், ஜனசமூக சம்மந்தமாக யாதொரு கட்டுப்பாட்டுக்கும் கீழ்ப்படியாது சுயேச்சையாக நினைக்கவும், அதன்படி பேசவும், அதன்படி நடக்கவும், ஒவ்வொருவருக்கும் பிறப்பு உரிமை உண்டு என்றும், சுயமரியாதை இயக்கம்பறையடிக்கிறது. இயற்கைச் சட்டத்தைப்போல் பிறப்பு உரிமைச் சட்டங்கள் அடங்கிய கொள்கைகளை முன்பின் யோசனையின்றி பின்பற்ற வேண்டுமென்றும், முன்னேற்றம் அடையத்தக்க ஒழுங்கான திட்டங்களைத் தயாரித்து தற்கால மனிதவாழ்க்கையைச் சீர்திருத்தவேண்டுமென்றும் மன உறுதியுடன் மக்களுடைய பலத்தை எல்லாம் ஒன்று திரட்டி, ஒருமுகப்படுத்தி, ஒரே கட்டுப்பாடாக நின்று சமூகக்கொடுமைகளைஎல்லாம் கூடிய விரைவில் உடைத்து எறிவதே மக்களின் அடுத்த வேலையென்றும் இவ்வியக்கம் வற்புறுத்துகின்றது. சுயமரியாதை என்ன அருமையான பொருள்! இவ்வுலகிலுள்ள மனிதன் என்று சொல்லப்படும் ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாத அழகிய பொருளாகும். சுயமரியாதை இன்னதென்று அறியாத ஒருவன்தன்னைச்சுதந்தரமுள்ள ஒரு மனிதனென்று எண்ண இடமில்லாமல் பேடி என்றே அழைக்கப்படுவான்.

நமது அனுபவத்தில் சுயமரியாதை இயக்கத்தைப் போன்று பொதுமக்களின் மனதைக் கவர்ந்து நின்று அவர்களுக்கு நன்நம்பிக்கையைப் புகட்டி அவர்கள் அபிமானத்தை முற்றிலும் கவர்ந்து விளங்கிய வேறு எந்த இயக்கமேனும் தென் இந்தியாவில் இருந்திருப்பதாக நமக்குத் தெரியவில்லை. சில ஆண்டுகளாக இவ்வியக்கத்தின் பயனாக பொதுஜனங்களுக்கு அரசியல் வாதத்தில் இருந்த நம்பிக்கை முற்றிலும் போய்விட்டது. இப்பொழுது தேசத்துக்கு உண்மையான விடுதலை சமூக முன்னேற்றத்திலிருந்தும் சமூதாய சீர்திருத்தத்திலிருந்துதான் கிடைக்குமேயொழிய அரசியல் பூச்சாண்டிகள் மூலம் கிடைக்கமாட்டாதென்று பொதுஜனங்கள் இவ்வியக்கத்தின் பலனாகக் கருதுகிறார்கள். இத்தகைய சமூக முன்னேற்ற உணர்ச்சி ஆதியிலிருந்து அரசியல் வாதிகளின் மனதில் பதிந்து தோன்றியது. ஆனதுபற்றியே ராஜாராம் மோகன் ராய், கேசப் சந்திரசென், ஜஸ்டின் ரனடே முதலிய இந்தியப்பெருந்தலைவர்கள் சுயராஜ்யம் என்ற சுயநலமாயக் கூச்குரலில் தங்கள் ஊக்கத்தையும் முயற்சியையும் செலவிடாமல் சமூக முன்னேற்றத்திலேயே தங்களுடைய ஊக்கத்தையும் முயற்சிகளையும் ஜீவகாலம் வரை செலவு செய்தார்கள்.

சமூக சீர்திருத்தமும், சமூக மேம்பாடும் இல்லாமல் நம் தேசம் எக்காலத்திலுமே விடுதலை பெறுதென்ற தீர்மானத்திற்கு வந்தபின்தான் காலஞ்சென்ற நம் தலைவர்களான டாக்டர் டி. எம். நாயர் அவர்களும், சர். பி. டி. தியாகராயரவர்களும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். நம் சமூகமானது குறுகிய நோக்கம்படைத்த பற்பல வகுப்புகளாகப் பிளவுபட்டு ஒருவருக்கொருவர் உயர்வென்றும் தாழ்வெனவும் பாராட்டி வரும்வரையில் இந்தியாவில் சுயராஜ்ஜியமென்பது ஓர் கனவாகவேயாகும் என்று நம் தலைவர்கள் போதித்தார்கள். நாமெல்லோரும் ஒரே தேசத்தவர்கள் என்ற சமரசம் வாய்ந்த பரந்ததேசிய உணர்ச்சியற்றவர்களின் ஆட்சிமுறையினால் எக்காலத்திலும் நம் தேசத்துக்கு நன்மை ஏற்படாதென்றும் போதித்தார்கள். நலம்பெறத் தக்க ஆட்சி முறையை அடையவேணுமானால் நம் சமூக வாழ்வில் எல்லாத் துறைகளிலுமே உயர்வுதாழ்வென்ற கற்பனை அடியோடு அழியவேண்டியது அவசியமென்று பிராமணரல்லாதாரியக்கம் ஆரம்பத்தில் சமூதாய முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

ஆனால் அரசியல் பேய் ஜாஸ்தியாகப் பிடித்து இருந்த பிராமணரல்லாதார்களும் அவ்வியக்கத்தில் இருந்தபடியால் சமூதாயச் சீர்திருத்தம் என்பது முக்கியமான வேலையென்று கருதாது அரசியல் சீர்திருத்தத்தையும்அதன்பலனாகஉத்தியோகங்களைக் கைப்பற்றுவதையும் முக்கியமாகக் கருதி பிராமணரல்லாதாரியக்கத்தின் நோக்கத்தை சற்று மாற்றிவிட்டார்கள். இந்நிலைமையில்தான் திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஆழ்த்தப்பட்டதும் ஒடுக்கப்பட்டதுமான எல்லா சமூகங்களும் விழித்து உணர்ந்து தங்கள் தங்கள் உரிமைகளை சமமாக பெறுவதற்காக முன்வரும்படி முரசறைந்தார்கள். இப்பேரொலியை ஆக்ஞையாகக் கருதி இருபதாவது நூற்றாண்டு பௌத்தராகிய திரு. ஈ வெ ராமசாமி அவர்கள் கூறியவீரமொழிகளைத் தாமதியாது மக்கள்பின்பற்றலாயினர்சீர்திருத்தம் என்றில்லாதொருபயனுமில்லைஎன்று முதல் முதல் கண்டுபிடித்தவர் நமது பௌத்தர். சீர்திருத்தம் என்பது பின்பலமில்லாதவர்களின் ஆயுதமென்றும், அவர்களின் மனதைப் போலவே அவர்கள் ஆயுதமும் பலனற்றதென்றும் தீய செய்கைகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் அறவே ஒழிப்பதுதான் நியாயமென்றும், திருத்த நினைப்பது பிரயோஜனமற்றதென்றும் முடிவுக்கு வந்தவர் நமது பௌத்தர். சமூகத் தீமைகளை அகற்றுவதற்குமுதன் முதலாக உயர்வு தாழ்வு தொலைய வேண்டுமென்றும், உயர்வு தாழ்வென்ற மனநிலைமை உள்ளவரையில் சுயமரியாதை உணர்ச்சியில்லாதவரையில் ஒரு வகுப்பு மற்றொரு வகுப்பை ஆழ்த்தியே வைத்திருக்குமென்றும் கண்டுகொண்ட தீர்க்கதரிசி நமது பௌத்தர். எந்தக்காலத்தில் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லையென காணப்பட்டதோ எந்தக்காலத்தில் எல்லா ஜனங்களுக்கும், தாங்கள் தாங்கள் முன்னேற்றமடைவதற்குச்சமசந்தர்ப்பமும் சம உரிமைகளும் தேவையென மதிக்கப்பட்டதோ, எந்தக் காலத்தில் இருவகை நோக்கங்கள் ஈடேறப்பட்டதோ அந்தக் காலத்திலேதான் எல்லா நன்மைகளும் தாமாகவே மக்களுக்கு விளையுமென பூர்ண நம்பிக்கையுள்ளவர் நமது பௌத்தர். சுயமரியாதையுடன் இரு; எந்தக்காரணம்பற்றியும் உன்னிலும் ஒருவர் உயர்வு உடையவரெனமதித்து அடிமைப்படாமலிரு; எந்தக் காரணம் பற்றியும் உன்னிலும் ஒருவர் தாழ்வுடையவரென நினைத்து அடிமைப்படுத்தாமல் இரு என்பதுவே திரு. ஈ. வெ ராமசாமி அவர்களின் அமுதவாக்கியமாகும்.

இச்சுயமரியாதை இயக்கம் மாகாணமெங்கும் காட்டுத்தீபோல் பரவி வருகின்றது. மாகாணத்தில் உள்ள தலைவர்கள் பலரும் பல மேடையில்

கூடி பேசப்புகுந்துவிட்டார்கள். ஒரே தந்தைக்கு உற்பத்தியான சகோதரர்கள் போன்ற மக்கள் எல்லோரும் பேதமற்று வாழ்வதற்கு சகலரும் முயற்சி செய்ய வேண்டியது எல்லாருடைய கடமையாகும் எனவும் கூறுகின்றேன் இந்நோக்கம்பற்றி அரசியல் வாதத்தில் செலவிடும் ஊக்கத்தில் ஒரு சிறிய பாகத்தைச் சமூகத் துறையில் செலவிட்டால் நமக்கும் சுயாட்சிக்கும் வெகுதூரமாய் இராதென்பது பலரின் துணிபு. சமரசமின்றி சமத்துவமின்றி சுயாட்சியை விரும்புவது வீண் கனவாகும் சுயமரியாதை இயக்கமானது உலக இயக்கத்தைச் சேர்ந்தது. ஒவ்வொரு தேசமும் எல்லாத் துறைகளிலும் சுயமரியாதை இயக்கத்தின் பலனை விரைவாக முன்னேறிக்கொண்டேயிருக்கும்பொழுது நாம் மாத்திரம் எவ்வளவு காலம் நொண்டிக்கழுதையைப்போல் சென்றுகொண்டிருப்பது! நாமும் உலக பந்தைய ஓட்டத்தில் விரைவாகச் செல்ல சுயமரியாதை இயக்கம் தோன்றியிருக்கிறது. கீழ் நாட்டில், ஜப்பான், சீனா, துருக்கி, ஆப்கானிஸ்தான், முதலிய தேசங்கள் சுயமரியாதை இயக்கத்தின் சுழலில் சிக்கிக்கொண்டு அதனால் கிடைக்கும் பயன்களை அனுபவிக்க ஆரம்பித்திருக்கின்றன. மேல் நாடான ஐரோப்பா கண்டத்தில் முக்கியமான இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி முதலிய தேசங்களும், ஆப்ரிக்காவில் எகிப்து தென் ஆப்ரிக்கா முதலிய தேசங்களும், அமெரிக்காவில் கனடா, யுனைடெட்ஸ்டேட் என்ற தேசங்களும் சுயமரியாதை என்னும் சுழலில் ரொம்ப நானாக அகப்பட்டு அதன் பலன்களை சமுதாய துறையிலும் அரசியல் துறையிலும், பொருளியல் துறையிலும் அனுபவித்துக்கொண்டு வருவதை கண் கூடாகப் பார்க்கிறோம். இந்த இயக்கம் உலகத்தில் உள்ள தேசங்களையும், அதிலுள்ள மக்களையும், பலதுறைகளிலும் முன்னேற்றமடையச் செய்துவிடுமென்பதில் எல்லாருக்கும் நம்பிக்கையிருக்கிறது, ஆனால் உலகத்திலுள்ள தேசங்களெல்லாம், தனித்தனியாகமுன்னேற்றமடைந்தபின் உலகம் எந்த நிலைமையில் இருக்கும் என்பதை ஆராய்வது சோம்பேறியின் வேலையாகமாட்டாது. சென்ற ஒரு நூற்றாண்டில் உலகத்துதேசங்கள் அடைந்திருக்கும் முன்னேற்றமானது அதற்கு முந்தின எல்லா நூற்றாண்டுகளிலும், உலகத்து தேசங்கள் அடைந்த முன்னேற்றத்தைப் பார்க்கிலும் ஜாஸ்தி என்றும் 1900-௵ முதல் 2000 வருஷமுடிய உலகத்து தேசங்கள் அடைந்திருக்கிறதும், அடையப்போவதுமான முன்னேற்றமானது நாகரீகம் தோன்றிய காலம் முதல் 1900-௵ வரையில் உலகத்திலுள்ள தேசங்களெல்லாம் அடைந்திருக்கிற முன்னேற்றத்தைப் பார்க்கிலும் 1000 மடங்கு ஜாஸ்தியாகயிருக்குமென்றும் உலக சரித்திர ஆராய்ச்சியுள்ள ஒவ்வொருவர்களும் சொல்லுகிறார்கள். இப்பொழுது உலகத்திலுள்ள முக்கியமான பத்து மதங்களான கிறிஸ்து மதம், பௌத்த மதம், மகமதிய மதம், ஹிந்து மதம், கன்பூஷியஸ் மதம், டாய் மதம், ஜூடே மதம், ஷிண்டு மதம், சிக்கு மதம், பார்சி மதம் இவைகளின் ஆரம்பக் கொள்கைகளில் சிலதும், ஆரம்பக்கொள்கைகளை மறைத்துவைத்திருந்த மூடப்பழக்க வழக்கங்களில் பெரிதும் சுயமரியாதைக் கொள்கைகளின் பலனாய்த் தவிடுபொடியாகிக் கொண்டுவருகின்றன. மனித வர்க்கம் ஒன்று சேர்வதை இந்த மதங்கள் தடைசெய்ய முடியாது. இப்பொழுது மனிதவர்க்கமானது 500 தேசத்தினர்களாக வாழ்ந்து வருகிறார்கள். மேல் காட்டிய மதங்களிலும், முக்கியமான கொள்கைகள் அநேகமாய் ஒரே விதமாகத்தானிருக்கின்றன, உலகத்திலுள்ளதேசங்கள் ஐக்கியமாய் ஒன்றுபடுவதற்கு மேற்காட்டிய பத்து மதங்களும் தடையாகமாட்டா. சென்ற 50 வருஷத்திற்குள் உலகத்தில் பதிப்பிக்கப்பட்ட எல்லா புத்தகங்களையும், பத்திரிகைகளையும்விட ஜாஸ்தியென்றால் உலக முற்போக்கின் வேகத்தை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். உலக சரித்திரத்தில் இதற்கு முந்தின எல்லா நூற்றாண்டுகளிலும், மனிதவர்க்கம் ஒவ்வொரு அறிவுதுறைகளிலும் கண்டுபிடித்திருக்கும் விஷயங்களைப் பார்க்கிலும் அதிகமாக சென்ற நூற்றாண்டில் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்றால் உலக முற்போக்கின் வேகம் இன்னும் தெளிவாகத் தெரியும். உலகத்தில்வழங்கும் சுயமரியாதை இயக்கத்தின் பலனாக கி. பி. 2000௵ வாக்கில் உலகத்திலுள்ள தேசங்களுக்கெல்லாம் சேர்ந்து ஒரே மதமும்; ஒரே பாஷையும், ஒரே அரசியலும், வழங்குமென்று உலக சரித்திர நிபுணர்களால் எதிர்பார்க்கப்படுகிறது மேலும் அடியில் விவரித்திருக்கிறபடி கி. பி. 2000 ௵ வாக்கில் உலகம் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1 உலகத்தில் ஒவ்வோரிடத்திலும் ஆகாய விமானங்கள் பறந்தவண்ணமாயிருக்கும் பொதுவாக எல்லோராலும் உபயோகப் படுத்தப்படும் இவைகளில் ஏறிச்சென்று உலகத்தை ஒருவாரத்தில் சுற்றிவிடலாம்.

2. வலைபோல் பரப்பப்பட்ட இருப்புப் பாதைகளும், தந்திகளும், கம்பியில்லாத் தந்திகளும், இனி மேல் கண்டுபிடிக்கப்படுகிற யந்திர வசதிகளும் உலகம் பூராவிலும் நிறைந்திருந்து மக்களைச் சமீபத்தில் கொண்டுவந்து ஒன்றுபடுத்தி சகோதரர்களாக ஆக்கிவிடும்.

3. அநாகரீகமான மனித வர்க்கங்களுக்கு ஆதாரவளித்து அவர்களை நாகரீக வழிகளில் முன்னேறும்படி செய்து சமத்துவம்பெற ஏற்பாடுகள் செய்யப்படும்.

4. உலகத்திலுள்ள ஆண் பெண்கள் எல்லாரும் படித்தவர்களாகயிருப்பார்கள்.

5. உலகத்தில் எல்லா பாஷைகளிலுள்ள வார்த்தைகளும் தத்துவங்களும் சேர்ந்த ஒரு பொது பாஷை உலகத்தில் பேசப்படும்.

6. எல்லாருக்கும் பொருத்தமான மதம் என்ற ஒரு தத்துவம் உலகத்தில் வழங்கும்.

7. உலகத்திலுள்ள ஆண் பெண் எல்லோருக்கும் தேர்தல் உரிமை ஏற்பட்டிருக்கும்.

8. பெண்களின் உரிமைகள் பூராவும் அங்கீகரிக்கப்பட்டு பெண்களுக்குச் சமத்துவம் ஏற்பட்டிருக்கும்.

9 உலகத்திலுள்ள நிலங்களெல்லாம் உலகத்திலுள்ள எல்லாருடைய சொத்தாகும்.

10. கடமைகளும்அவைகளின்அத்துக்களும் சொந்தச்சொத்து என்ற பாத்தியமும் உலக முழுவதிலும்அங்கீகரிக்கப்படும்.

11. கூட்டுறவு ஜாஸ்தியாக உலகத்தில் பரவியிருக்கும் இப்பொழுது இருப்பதைப் பார்க்கிலும் உலகத்தில் சொத்தானது சமமாக மக்களால் அனுபவிக்கப்பட்டுவரும்.

12. சாஸ்திரப்படியுள்ள வேளாண்மை உலகத்தில் ஜாஸ்தியாகி இப்போதைப்பார்க்கிலும் 4 மடங்கு தானியங்கள் ஜாஸ்தியாக உண்டாக்கப்படும்.

13. மதசம்மந்தமாக விடப்படும் விடுமுறை நாள்களெல்லாம் இல்லாமல் ஒழிந்து எல்லோருக்கும்பொருத்தமான சில நாள்களை விடுமுறை நாள்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

14. ஆண் பெண் இவர்களில் சோம்பேறிகள் ஒருவரும் உலகத்தில் இருக்கமாட்டார்கள். அப்படியிருந்தால் அவர்களை அவர்கள் சிநேகிதர்களும் ஐக்கிய அரசாங்கத்தாரும் வேலை செய்யும்படி செய்வார்கள். ஒவ்வொருவருக்கும் சரியான ஆகாரமும், உடுக்க உடையும் லேசாகக் கிடைக்கும்.

15. உண்பது. குடிப்பது, உறங்குவது, உடை தரிப்பது, விளையாடுவது, பொருள் சம்பாதிப்பது இவைகள்தான் ஜீவகாலத்து முழு நோக்கமென்று மனிதர்கள் நினைக்கமாட்டார்கள். இதற்கு மேலான உண்மையைத் தெரிந்துகொள்ள பாடுபடுதல் மக்களின் முக்கியமான வேலையென்றும் அதை ஆராய்ந்து விசாரணை செய்து அதைப்பற்றிப்படித்து நினைத்து வருவதுதான் மனிதனுடைய முதற் கடமை யென்றும் ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து அதை மற்றவர்களுக்கும் போதிப்பான்.

16. கிரிமினல் குற்றங்கள் ஒன்றுக்குப் பாதிக்குக்கீழாக குறைந்து போய்விடும். குடியானது உலகத்தை விட்டுப் பறந்துபோகும். மனிதவர்க்கத்தின்சீக்கும்அதனால்ஏற்படும்வருத்தங்களும்பாதிக்குமேல்குறைந்துபோய்விடும். மனித வர்க்கத்தின் ஜீவகாலம் ரெட்டித்துவிடும். சீக்காளிகளும் முடவர்களும். வயதாளிகளும், அன்புடன் போற்றப்படுவதோடு மக்கள்களுக்குள் ஜாஸ்தியான அன்பும், நட்பும், சந்தோஷமும் நிறைந்திருக்கும்.

17. அரசியலிலும், மதத்திலும், பாஷையிலும், உலகத்திலுள்ள தேசங்கள் எல்லாம் ஒரு ஐக்கிய நாடாக ஏற்பட்டுவிடும்.

18. இவ்வளவு காலம் ஏன் நாம் மூட்டாளாயிருக்கிறோம் என்று ஒவ்வொருவரும்! ஆச்சரியப்படுவார்கள்.

சகோதரர்களே! நான் சுருக்கச் சொல்லலாம் என்று ஆரம்பித்த விஷயமானது சிறிது பெருகிவிட்டதென்று நினைக்கிறேன். ஆனால் தீண்டாமையைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லாமலிருக்க முடியவில்லை. மதக்கோட்பாடுகளால் வியாதிகள் பீடிக்கப்பட்டு அதன்மூலம் தீண்டாமை என்பது நம் நாட்டுக்கு ஆரியர்களால் கொண்டுவரப்பட்டது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன் ஆனால் இப்பொழுது ஆரியர்களிடத்தில் எவ்வளவு பலமாய் தீண்டாமை என்பது வேரூன்றியிருக்கிறதோ அவ்வளவு பலமாய்ப் பிராமணர்களல்லாதவர்களிடத்திலும் வேரூன்றியிருக்கிறதென்று தெரிவிக்க நான் வருந்துகிறேன். மதக்கொள்கையின் பேரால் ஆரம்பிக்கப்பட்ட தீண்டாமையானது பிராமணரல்லாதாராகிய நம்மிடத்தில் மதக்கொள்கையைவிட்டு பொருளியல் கொள்கைகளை ஆதரவாகக் கொண்டு தீண்டாமை உலாவிவருகிறது. தீண்டாத ஜாதிக்காரர்களென்று சொல்லப்படுகிறவர்களை முன்னேற்றம் அடையும்படி செய்துவிட்டால் வேலைக்கு ஆள்கள் இல்லாமல் போய்விடுமென்று கருதியே பிராமணரல்லாதாரில் அனேகவகுப்பார் தீண்டாமையை கைக்கொண்டு இருக்கிறார்களென்று அனுபவத்தில் தெரியவருகிறது.

ஆகையால் தீண்டாமையை நம் தேசத்தைவிட்டு விரட்டுவதற்கு மதத்தை சீர்திருத்தினால் மட்டும் போதாது. கோயிலை சீர்திருத்தினால் மட்டும் போதாது. கோயில் பிரவேசம் செய்வித்தால் மட்டும் போதாது. பொருள், தொழில், எஜமான், வேலைக்காரன் என்ற பொருளியல் சம்மந்தமான கொள்கைகளையும் சீர்திருத்தவேண்டியதாயிருக்கிறது.

சகோதரர்களே! இதுகாறும் பொறுமையுடனிருந்து என்னோடு ஒத்துழைத்ததற்கு நன்றி பாராட்டுகிறேன்.

---


## தேவை

பூந்தமல்லி போர்டு ஹைஸ்கூலில் விவசாய உதவி ஆசிரியர் வேலைக்கு ரூ. 60-1-70 மாதச் சம்பள கிரேடில் ஒரு A.L. Ag, or B. Sc., Ag. பரீட்சை தேறிய ஒருவர் உடனே தேவை. சைதாப்பேட்டை ஜில்லா போர்டு தலைவருக்கு நற்சாட்சிப் பத்திரங்களுடன் உடனே மனுச் செய்துகொள்க.

எம். கிருஷ்ணசாமி ரெட்டியார்,
ஜில்லா போர்டு தலைவர்.

சைதாப்பேட்டை,
17—7—1929.

# தேவர்களும் அசுரர்களும்

(இராவணப்பிரியன் எழுதியது.)

நமது இதிகாச புராணங்களில் எங்குத் தொட்டாலும் தேவர்களும் அசுரர்களுமாகவே இருக்கிறார்கள். தேவாசுரர்கள் இல்லாவிட்டால் வேதம் இல்லை; இதிகாசங்கள் புராணங்களென்னும் மூட்டைகளுமில்லாமற் போய்விடும். எங்கு பார்த்தாலும் இவர்களுடைய சண்டைகள்தான் நிறைந்திருக்கின்றன. தேவர்கள் ஒரு பக்கமும் அசுரர்கள் ஒருபக்கமும் இருந்து சண்டை போடுவதே வழக்கம். ஞானம், தவம், கல்வி, பராக்கிரமம், நீதி முதலிய நற்குணங்களிற் சிறந்த அசுரர்கள் இந்திராதி தேவர்களை எதிர்த்து வெற்றி பெற்றவுடன் தேவர்கள் திரிமூர்த்திகளையடுத்து முறையிட்டுக் கொள்ளுவதும் கடைசியில் மகாவிஷ்ணு அசுரர்களைத் தாக்கி வதைத்து தேவர்களை ஆதரிப்பதும் சாதாரணம். இப்படி ஓயாமல் இந்த இரண்டு கூட்டத்தார்களுக்கும் எப்போதும் சண்டை. இந்தச் சண்டை வேதம் பிறந்த நாள்முதற் கொண்டிருந்ததாகையால் வடமொழியிலுள்ள சமய நூல்களிலெல்லாம் இவர்களுடைய சண்டைகள்தான் விசேஷமாக நிறைந்திருக்கின்றன. ஆனால் தேவர்கள் மேற்படி நூல்களை எழுதிய ஆரியர்களால் தெய்வங்களாகக் கொண்டாடப்பட்டவர்களானபடியால் கடைசியில் எல்லா அசுரர்களும் தேவர்களிடம் போர் செய்து தோற்றுப் போகிறார்கள். தனக்கு இயற்கையாயமைந்த சூழ்ச்சி, தந்திரம், மோசம் என்னும் இவைபோன்ற உபாயங்களால் மகாவிஷ்ணு அசுரர்களை அநேக விதங்களில் வஞ்சித்தும் வதைத்தும் கொல்லுகிறான். இந்தச் சண்டைகளைக் கவனித்துப் பார்க்கையில் இது வேதகாலத்துக்கு முந்தியதென்றே சொல்லவேண்டும். ரிக் வேதத்திலேயே இந்தச் சண்டைகளைப் பற்றிய கதைகள் எழுதப்பட்டிருக்கின்றனவாகையால் வேதங்கள் எழுதத் தொடங்கின காலத்துக்கு முந்தியே தேவாசுரயுத்தங்கள் சாதாரணமாக இருந்திருக்கவேண்டுமென்பது ஸ்பஷ்டமான சமாச்சாரம்.

அசுரர்களைத்தான் வடமொழியில் இராட்சசர்கள் என்றும் தமிழில் அரக்கர்களென்றும் இன்னும் பல பேர்களாலும் வழங்கி வந்தார்கள். அசுரர்கள் நமது புராணங்கள் கூறுகிறபடிக்கே மகத்தான தவங்களைச் செய்ய வல்லவர்கள், மிகுந்த ஞானத்தையுடையவர்கள், வேத சாஸ்திரங்களில் நிபுணர்கள், நாகரிகத்திற் சிறந்தவர்கள். ஆயினும் இவர்களைப் பொதுவில் வருணிக்கும்போது இவர்களைச் சைவர்களாகவும் கருத்த மேனி, விகாரமான சரீரம் முதலியவைகளோடு கொடூரமான செயல், அகங்காரம், மூர்க்கம், குரூர சிந்தை முதலியவைகளை உடையவர்களாயிருந்தவர்களாகவும் ஆரியர் நூல்களில் வரைந்திருக்கின்றார்கள். இது எம்மட்டு சரி அல்லது ஒப்புக்கொள்ளக் கூடியதென்பதைப் பின்னால் விசாரிப்போம்

மஹா விஷ்ணுவுக்குக்ஷீராப்தியில் அநந்த சயனத்தில் ஸ்ரீ லட்சுமி சமேதராக ஏகாந்தத்தில் இன்பம் அநுபவிக்கும் நேரம் போக மிகுதியாயுள்ள காலமெல்லாம் இவ்வசுரர்களை எவ்வித உபாயத்தாலேனும் கொல்லுவதே வேலை. இவருக்குரிய தசாவதாரங்களில் ஒன்பது எடுத்தாயிற்றும். அந்தவொன்பதிலும் சிலர்புத்தரை ஒரு அவதாரமாகக் சேர்த்தும் சிலர் அவ்வாறு சேர்க்காமலும் சொல்லுகிறார்கள். வைதீகர்கள் சத்தியசொரூபியாகிய புத்தர்விஷயத்தில் செய்த அபராதத்துக்கு பிராயச்சித்தமாக இவரையும் விஷ்ணுவின் அவதாரமென்று சொன்னார்போலும்! அது எப்படியாயினும் மகாவிஷ்ணு எடுத்த மற்ற அவதாரங்களெல்லாம் அசுரர்களைத் தொலைப்பதற்காகவே எடுத்தான், இந்த அவதாரப் புரட்டுக்கதைகளை ஆரியர்களே கட்டி வைத்தபோதிலும் அவைகளினின்றே சில அவதாரங்களிற் காணப்படும் அசுரர்களைப்பற்றி இப்போது சிறிது விசாரணை செய்வோம். முதலில் வாமனாவதாரத்தை எடுத்துக் கொள்ளுவோம். பலி என்பவன் மிகுந்த சத்ய சந்தன், கொடையில் நிகரற்றவன். பராக்கிரமத்திலும், வீரத்திலும் ஒருவருக்கும் குறைவுபட்டவனல்ல. அவனை வாமனாக வந்த விஷ்ணு வஞ்சித்து மூன்றடி மண் கேட்கிறான். அசுர குரு சுக்கிராச்சாரி கேட்பவன் இன்னானென உணர்ந்து "கொடாதே" என்று குறிப்பாற்றடுத்தும் தான் கொடுத்ததை மறுக்க மாட்டேனென்று சொல்லி மூன்றாவதடிக்காக தலை கவிழ்ந்து கபடப்பிராமணன் காலால் நசுக்குண்டு சாகிறான். ஒரு வார்த்தை கூட எதிர்த்தாவது மறுத்தாவது பேசவில்லை தன்னை அழிக்க வந்தவன் தன் குலத்தையே வேரோடு களைய வந்த நாராயணன் என்று தெரிந்தும் தன் வாக்கு எவ்விதத்திலும் தவறப்படாது என்று அமைதியோடு இறத்தலையே கடனாக ஏற்றுக் கொள்ளுகிறான். என்ன பெருந்தகைமை! என்ன மேம்பாடு! கள்ளப் பார்ப்பனனின் இழிதொழிலை இகழவும் வேண்டுமோ?

ஹிரண்ய கசிபையும் பிரஹலாதனையும் கொஞ்சம் சீர்தூக்கிப் பார்ப்போம் ஹிரண்ய கசிபு பிரஹலாதனைப்பார்த்து "குழந்தாய் நீ ஒன்றும் உணராதவன். நாராயணன் நமது குலத்தையே நாசம் செய்வதாகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான். அவனால் நமது குலம் முழுவதும் அழிந்து வருகிறது. நமது குலத்திற் பிறந்து நமது குலத்தைப் பகைவர்களுடைய அதர்ம சூழ்ச்சிகளிலிருந்து காப்பாற்றுவதை தர்மமாகக் கையாளாமல் நீயே அவனை ஸ்வாமி என்று நமஸ்கரிப்பது தகுமா?" என்று பல தடவைகளிலும் பலரைக் கொண்டும் புத்தி புகட்டுகிறான். பிரஹலாதன் தன் தந்தையை அவமதித்தும் அலட்சித்தும்பேசினதுமல்லாமல் ஒரே மூர்க்கத் தனமாகப் தகப்பன் எதிரிலேயே நாராயணனைப் புகழ்கிறான். இந்தமாதிரிப் பிள்ளையால் தன் குலத்துக்கே பழியும் பாவமும் உண்டாகுமே என்றுபலவாறு துக்கிக்கிறான் பிதா. கடைசியில்ஹிரண்யகசிபு தூணை உடைத்தபோது நர்சிம்ம விஷ்ணு தோன்றி அவனுடையஉடலைசின்னபின்னமாகக் கடித்துங் கிழித்தும் வதைக்கிறான். தகப்பனாற் பெரிதும் பாராட்டப்பெற்ற பிரகலாதனே கொடியபகைவனாகிய விஷ்ணுசெய்யும்குரூரச்செய்கைகளைக் கண்கூடாகப்பார்த்தும் கொஞ்சங் கூடபிதுர் பக்தி, இரக்கம், துக்கம், சோகம் ஒன்றும் இல்லாமல் விஷ்ணுவையே மோட்சத்தை ஆஸ்ரயித்துக் கைகூப்பி வணங்குகிறான். இவ்வளவு கொடிய பிள்ளை அரக்கர் குலத்தில் எப்படி பிறந்ததென்று ஆச்சரியப் படும்படி நடந்துகொள்ளுகிறான். இந்தத் துஷ்டனையும் ஆரியர் மதப்பித்தால் "ஆழ்வான்" என்று போற்றி ஆராதித்து வருகிறார்கள். என்ன மடமை!

பிரஹலாதனைப்பற்றி எழுதும் போது இன்னொரு "ஆழ்வான்" மகிமை ஞாபகத்துக்கு வருகிறது. அவன்தான் நமது இராவணன் தம்பி விபீஷணன். அண்ணனுடைய இரகசியங்களையெல்லாம் திருட்டுத்தனமாக இராமனுக்குச் சொல்லிக் கொடுத்து அவனைக் கொல்லுஞ் சூழ்ச்சியைக் குறிப்பித்ததுமல்லாமல் இராமனால் அண்ணன் இறப்பதற்கு முந்தியே இலங்கைக்கு அரசனாக முடி சூட்டப்பட்ட மாபாவி! இராவணன் தன் தம்பியாயிற்றே என்று இவனை நம்பி இவனிடத்தில் தனது உயிர் நிலை இரகசியத்தையும் கூட ஒன்றும் ஒளியாமற் சொல்லிவைத்திருந்தான். இந்த இரகசியங்களை எல்லாம் தன் எதிரிக்குச் சொல்லி தான் அரசனாக வாழலாம் என்று நினைத்த இந்த பொல்லாத துரோகியையுங்கூட "ஆழ்வான்" என்றும் "சிரஞ்சீவி"என்றும் சொல்லித் திரிகிறார்கள் மதப்பித்தால் மதிமயங்கிய வைதீகர்கள். இந்த சகோதரத்துரோகியைக் காட்டிலும் இராவணன் எவ்வளவோ நல்லவன். அவன் சீதையைக் கற்பழிக்கக் கொண்டுபோனான் என்பது பெரும்பழி. தன் தங்கையை அவமானஞ் செய்தவனைத் தண்டிப்பதற்காகச் சீதையைத் தூக்கிச் சென்றானேயொழிய வேறு கெட்ட இச்சையாலன்று. சீதையின் கற்பை அவன் கெடுக்க முயன்றால் அவன் எப்படியும் தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்திருக்கலாம். அவனைத் தடுக்க வல்லவர் ஒருவருமில்லை. அல்லது அவளுடைய கற்பை அவன் கெடுத்திருந்தபோதிலும் அது அந்த காலத்து யுத்த தருமப்படி தவறும் ஆகாது. பழைய காலத்து யுத்தங்களில் தோற்றுப்போனவர்கள் பகைவர்கள் இவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகளை எதிரிகள் தூக்கிக் கொண்டுபோய் வரித்து கொள்ளுவது வழக்கமாயிருந்தது சரித்திர ஆராய்ச்சியிற் சிறிது பழகியவர்களுக்கும் இது, ஆச்சரியமாகத் தோன்றாது. ஆதி காலத்து ஆரியர்களுடைய வழக்கங்கள் எல்லாம் அவ்வளவு உயர்ந்தனவாகதோன்றவில்லை. இவர்களால்கற்பிலட்சணத்தின் திருஷ்டாந்தமாகப் போற்றப்படும் பஞ்சகன்னிகைகளில் ஒருத்தியாகிய திரௌபதி ஐந்து நாயகர்கள் போதாதென்று கர்ணன் மேற்கூட ஆசைப்பட்டாளாம். இவளைப்பாண்டவர்கள் சூதாடித்தோற்றபோது இவள் துயிலை இராஜசபையில் கௌரவர்கள் உரிந்த உரிமையைப் போன்றது போலும் பகைவேந்தன் பெண்ணைக்கவர்ந்து செல்வதும். இது பண்டை ஆரியர்களின் சமூகதர்மமாயிருக்கலாம். மேற்சொன்ன பஞ்ச கன்னிகைகளில் இந்தச் சீதையும் ஒருத்தி. அடுத்த கன்னிகைகளில் இராவணன் பத்தினியாகிய மண்டோதரி தவிர மற்றவர்கள் கதை யெல்லாம் இப்படியேதான் இருக்கிறது. இராட்சதன் சம்சாரமாக இருந்தபோதிலும் மண்டோதரியை ஆரியர்கள் கூட கற்பு விஷயத்தில் மதித்து வருகிறார்களென்றால் ஆரியர்களுடைய நாகரிகத்தைக் காட்டிலும் இராட்சதர்களுடைய நாகரீகம்தோற்றதாகத் தோன்றவில்லை. ஆனபோதிலும்] தேவபக்தர்களாகிய ஆரியர்கள் அவர்களுக்குப் பகைவர்களாகிய அசுரர்கள் மேலுள்ள துவேஷத்தால் அவர்களை இழிந்தவர்களெனப் பழித்தும், கொடியவர்களெனத் தூஷித்தும் வந்தார்களென்பது வெள்ளிடைக் குன்றுபோல் தெரிகிறது.

சிலர் அசுரர்களைச் சைவர்களென்றும் சிவபக்தியுள்ளவர்களென்றும் கருதி அவர்களுக்கும் தேவர்களுக்குமுள்ள பகைமையை சிவமதம் விஷ்ணு மதம் என்னும் இரண்டு மதங்களுக்குமுள்ள சுபாவ விரோதத்தின் ஒரு பகுதியென்று நினைக்கிறார்கள். அதாவது இராட்சதர்கள் சிவபக்தி, சிவஞானம் இவைகளிற் சிறந்தவர்களென்றும் ஆரியர்கள் விசேஷமாக விஷ்ணு பக்தியிற் சிறந்தவர்களென்றும், இந்த இரண்டு கட்சிக்காரர்களின் இயற்கையான பகைமையே தேவாசுர சண்டைகளுக்கு அடிப்படை என்று நினைக்கிறார்கள். இந்த வாதத்தில் கொஞ்சம் உண்மை இருப்பதாக நாம் ஒப்புக்கொள்ளவேண்டியதாக இருந்தபோதிலும் பிராம்மண மதம் தவிர மற்ற மதங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்களுக்கும் அந்த மதத்தையே கொஞ்சம் ஆழ்ந்து படித்தவர்களுக்கும் இது அவ்வளவு பொருத்தமான கொள்கையாகத்

தோன்றவில்லை. ஏனெனில், மிகப் பழையமதமாகிய பார்சி மதம் என்று சாதாரணமாகச் சொல்லப் படும் "சொரோஸ்டிரியன்" மதத்தைப் பற்றி நாம் விசாரிக்கும்போது தேவர்கள் அசுரர்களாகவும், அசுரர்கள் தேவர்களாகவும் முழுவதும் புரண்டு போகும் கண்கட்டி வித்தையைப்பிரத்தியக்ஷமாகப் பார்ப்போம். அதாவது நாம் எப்படி தேவர்களை உயர்த்தியும் அசுரர்களை இழித்தும் பேசுகிறோமோ அப்படியே பார்சிக்காரர்களும் தேவர்களை மிகவும் தாழ்த்தியும் அசுரர்களைப் பூஜித்தும் வருகிறார்கள். இந்த ஆச்சரியமான விஷயத்தைப்பற்றிப் பின்னால் காரணத்தோடு விசாரிப்போம். அசுரர்கள் சிவபக்தியில் ஈடுபட்டவர்கள். ஆகையால் இவர்களுக்கும் சிவமதத்தைத் தழுவிய ஆரியர்கள் அல்லது வைதிகர்களுக்கும் ஒற்றுமை யுண்டென்று சொல்ல சிவமதமே கொஞ்சங் கூட இடங்கொடுக்கவில்லை. உதாரணமாக சிவமதத்தை ஸ்தாபிப்பதற்காகவே உலகத்தில் அவதரித்த பரம புருஷர்களாக நினைக்கப்படும் சமயாச்சாரியர்களுடைய தேவார திருவாசகங்களை எடுத்துக்கொண்டால் அசுரர்கள் மேல் அவர்களுக்கு எவ்வளவு அருவை இருந்ததென்று நன்றாய்த் தெரியவரும். மேற்கோளாக ஞானசம்பந்தனுடைய தேவாரங்களை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு பதிகத்திலும் பதினொருபாட்டுக்கள் உண்டு. பதினோராவது பாட்டு தன் சொந்த ஸ்துதி. அதாவது, சம்பந்தன் பாட்டைப் படிப்பவரெல்லோரும் மோட்சம் எய்துவார் என்று கூறும் தற்புகழ்ச்சி. பத்தாம் பாட்டில் தமிழைத் தாய்போற் போற்றி வளர்த்த சமணர்களையும் புத்தர்களையும் மிகவும் இழித்துக்கூறி வாய்க்கு வந்தபடி வைகிறான். ஒன்பதாம் பாட்டில் அரி பிரம்மர்களுக்கும் எட்டாத அநாதித் தெய்வம் என்று சிவனைப் புகழ்கிறான். எட்டாம் பாட்டில் இராவணன் செருக்கிக் கயிலையைத் தூக்கினதாயும் அப்போது பரமேஸ்வரன் வெகுண்டு காலால் அழுத்தி அவன் கர்வத்தையொழித்ததாயும் அவனைப் பரிகசிக்கிறான். இப்படி இராவணனை அவமதித்துள்ள பாட்டுக்களை உற்று நோக்கும்போது சைவர்களுக்கு அசுரர்கள் மேல் இருந்த வெறுப்பு வெள்ளிடைக்குன்றுபோல் வெளிப்படுகிறது. திருஷ்டாந்தமாக சம்பந்தனுடைய திருவாலவாய்த்தேவாரங்களிலிருந்து இராவணனை நிந்தித்துப் பாடிய சில அடிகளைமாத்திரம் கீழ் குறிப்போம்.

"தூர்த்தன் வீரந் தொலைத்தரு
ளாலவா யத்தனே"
"இராவணன் றிண்டோளிருபது
நெறிதர வூன்றி"
"அரக்கனார் வலி, நெருக்கன்"
"அரக்கன்றன் கிரியேற்றவன் றன்
முடிச் செருக்கினைத் தவிர்த்தாய்"
"ஆற்றலாளரக்கற்கு மருளினாய்"
"மேலெனத் தெரியவில்லை யென்ற
வரக்கனார்மிகை செற்ற"
"துறையிலங்கை மன்னனைத்
தொடர வூன்றினாய்"

இவைகளிலிருந்து போதருவதென்னவென்றால் சைவர்களானாலும் வைஷ்ணவர்களானாலும் அசுரர்களை யிழித்துக் கூறுவதே அவர்களுக்குத் தொழில். நமக்குத் தேவர்களானாலும் அசுரர்களானாலும் ஒன்றுதான். இவ்விருவர்களைப்பற்றியும் வாஸ்தவத்தில் நமக்குத் தெரிந்த சமாச்சாரம் பூஜ்யமே. புராணங்களிலும் வேதங்களிலுமுள்ள பொய் மூட்டைகளை ஆராய்ந்து அவைகளுக்குள் உயர்ந்தது எது? தாழ்ந்தது எதுவென்பதை ஆராய்ப்புகுமனம் சோற்றில் கல்லாராய்வது ஒக்கும் குதிரை முகத் தேவர்களும், குரங்கு முகத் தேவர்களும், சிங்க முகத் தேவர்களும், கரடிமுகத் தேவர்களும், யானை முகத் தேவர்களும் எப்படி அசம்பாவிதமோ அப்படியே பத்துத்தலை இராவணனும், மூன்று தலை தத்தாத்திரியனும், நான்கு தலைப் பிரம்மனும், ஐந்துதலை சிவனும், ஆறுதலைக்குமரனும் குதிரைக்கொம்பாம். ஆயினும் பிராம்மண சமயத்தால் போற்றிவரும் தேவர்களுடைய மூலத்தைக் கொஞ்சம் கிளறிப்பார்த்தால் அத்தனையும் ஆபாசமாக விருப்பதுடன் அசுரர்களைப் பார்க்கிலும் எவ்வளவோ கீழ்ப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

இப்போதும் பார்சிக்காரர்கள் தங்கள் தெய்வமாகிய அஹீரா (அசுரா) வை ஆராதிக்கும்போது பின்வருமாறு சொல்லுகிறார்கள்——

"நான் தேவர்களைத் தொழுவதை ஒழித்துவிட்டேன். தேவர்களுக்கு விரோதியான அஹூரா (அசுரா) வின் பக்தனாக இருக்க விரும்புகிறேன். எல்லா நன்மைகளும் அஹூரா (அசுரா) விடமிருந்துதான் வருகின்றன,

நான் தேவர்களை விட்டு விலகிவிட்டேன். அவர்கள் கொடியவர்கள், சண்டாளர்கள், துஷ்டர்கள். எல்லாக் கொடுமைகளுக்கும் துக்கங்களுக்கும் துன்பங்களுக்கும் இழவுகளுக்கும் காரண பூதர்கள் அவர்கள் தான் அவர்கள் எல்லோரிலும் கடைப்பட்டவர்கள். தேவர்களையும் அவர்களைப்போன்றவர்களையும் தொலைத்துவிட்டேன். அவர்கள் மந்திரக்காரர்கள், மாயக்காரர்கள். அவர்களை (தேவர்களை) மனமொழி மெய்களாலும் பஹிஷ்காரஞ் செய்கிறேன். அசத்திய மெல்லாம் இதோடு ஒழிந்துபோகட்டும்"

"ஓ! தேவர்களே! சோமரசத்தைச் சாப்பிட்ட மயக்கத்தால் உங்களை வசப்படுத்திக்கொண்ட துராத்மாவினின்றும் நீங்கள் பிறந்தவர்கள். மனிதர்களை வஞ்சித்து வதைக்க வல்ல அநேக உபாயங்களை நீங்கள் அந்தத் துஷ்டாத்மாவிடம் கற்றிருக்கிறீர்கள் என்பது உலகமறிந்த செய்தி. அந்தத் துஷ்டாத்மாவின் சூழ்ச்சியால், மிகுந்த துஷ்டர்களாலநுஷ்டிக்கப்பட்டு வருகிற மந்திரங்களை நீங்கள் உண்டாக்கினீர்கள். இந்த மந்திரங்கள் தேவர்களுக்குப் பிரியமானவையா யிருந்தாலும் சுத்தர்களால் ஒதுக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் ஞானமும்சத்தியமும் நிறைந்த அஹூர் (அசுர்) மஸ்டாவால் துஷ்டர்கள் அறிவடைகிறார்கள்"

பார்சி மதஸ்தர்களுடைய வேத நூல்களில் இவைபோன்றன அநேகம் காணப்படுகின்றன. "அஹூர்" என்னும் பதத்திலுள்ள "ஹூ" என்னும் சப்தம் அவர்களுடைய வேதப்பாஷையின் இலக்கணப்படி "சு" என்பதன் வேற்றுமை ஆகையால் அந்தப்பதம் "அசுர்" என்பதின் திரிபு.

ஆதலால், அவர்கள் தங்கள் மதச் சித்தாந்தப்படி அசுரர்களைக் கொண்டாடி தேவர்களை இழித்துக் கூறுகிறார்கள். என்ன காரணம் என்று மறு வாரம் விசாரிப்போம். நம்மால் கூடியவரைக்கும் நிஷ்பக்ஷபாதமாக விசாரணை செய்து, "பிராம்மணர்கள் கொள்கையா அல்லது பார்சிக்காரர்களென்னும் சொரோஸ்டிரியர்களுடைய கொள்கையா அங்கீகரிக்கத் தக்கது?" என்னும் பிரச்னைக்கு மறு வாரம் உத்தரம் சொல்லுவோம்.


மோட்டார் சோதக்காரர்களுக்கும் டிரைவர்களுக்கும் இன்றியமையாத

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும்"

அதன்

"அநுபோகப்பயிற்சி முறையும்"

[படங்களுடன்]

விலை ரூபாய் 1—8—0. (தபால் சார்ஜ் வேறு)

சிலோன், பினாங்கு, மலாக்கா முதலிய வெளி நாட்டு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்பவேண்டும். ஏஜண்டுகள் தேவை. மற்ற விவரங்களுக்கு நேரில்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.



பித்தன்

மக்கள் சமரசம், கிராமச் சீர்திருத்தம்,
சமூக முன்னேற்றம் முதலியவைகளுக்காகப்
பாடுபட்டுவரும்

ஒரு மாதப் பத்திரிகை

மூடப்பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் ஒழித்து உண்மை மதத்தையும், தேச பக்தியையும், ஆராய்ச்சி அறிவையும், சகோதரத்துவத்தையும் நிறுவ முனைந்து நிற்பது.

பித்தனில் வெளிவரும் வேறு பல விஷயங்கள்: விஞ்ஞானம், கைத்தொழில், விவசாயம், சமூகச் சீர்திருத்தத்திற்கான சிறு கதைகள் முதலியன.

இளந்தமிழர்களால் தமிழில் நடத்தப்படும் முதற்பத்திரிகை இதுவே.

வருடசந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடுகளுக்கு ரூ. 1¼.

மாதிரிப்பிரதிவேண்டுவோர் இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

விலாசம்:—

வனமலர்ச் சங்கத்தார்,

மானேஜர்,

49, பஜார் ரோட், மைலாப்பூர், சென்னை.

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மன், "இராவணனின் வரலாற்றைச் சொல்லும், சொல்லும்" என வற்புறுத்துகிறான். அது செத்து விழுகிறது. இதனால் இராமனைத் தன் காரியக்குட்டி என்பதிலும் இரக்காதகல்நெஞ்சன் என்பதிலும்என்ன தடையுளது ?

இராமன் புலம்பும்போது,"சடாயு பல தலைமுறைபாகக் கிடைத்த நாட்டை ஆண்டுவந்தது" என்று கூறுகிறான். இந்த இடத்தில் சீனிவாசய்யங்கார் பக்கம் 178-ல் "சடாயுவும் சம்பாதியும் அருணனுடைய பிள்ளைகள். அவனும் (அருணன்) கருடனும் காசிபரின் புத்திரர்கள். தண்டகாரணியத்தில் காசிபராவது கருடனாவது அருணனாவது ஆண்டதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க பலதலைமுறையாக வந்த அரசாட்சியைச் சடாயுபறவைக்கரசனாய்ஆண்டு வந்தான் என்று இராமன் கூறுவதற்குக் காரணம் தெரியவில்லை" என்று குறித்திருக்கிறார். இதனால் இராமன் அறிவுகெட்டு இவ்வாறு புலம்பியிருக்கவேண்டும். அறிவு கெட்டாற்றானே பொருந்தாத பொய்யுரைகள் வெளிவரும்!

இராமன் சடாயுவினிடம், "நான் என்ன குற்றம் செய்தேன்? இராவணன் என் மனைவியைத் தூக்கிப் போயினனே! இராவணன் எவ்விடத்தினன்? எத்தகையவன்? எவ் ஆற்றலன்?" எனவினவுகிறான். இக்கூற்றுக்களெல்லாம் நம்ப முடியாத நிலையிலிருக்கின்றன. இதைப்பற்றி இவ்விடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் ஒரு நீண்ட குறிப்பு இரண்டு பக்கங்களில் எழுதியிருக்கிறார். அவை 180, 181ம் பக்கங்கள். அக்குறிப்பு வருமாறு:—

("இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டும்.) சீதையை ராவணன் எடுத்துப்போகக் காரணமென்ன? அவனுக்கு என்ன கெடுதி செய்தேன்? அந்த இராட்சசனுடைய வரலாறும் இருப்பிடமுமென்னவென்று ராமன் சடாயுவைக் கேட்கிறான். அவனுடைய இருப்பிடத்தை அந்தப் பட்சி சொல்லாததால் மறுபடியும் தேடிக்கொண்டு போனார்களென்றும், பிறகு சுக்ரீவன் முதலிய வானரர்களின் உதவியால் அந்த இடத்தைக் கண்டு பிடித்தார்களென்றும் கதை சொல்லப்படுகிறது. இப்படியே சுக்ரீவனும் ராவணனிருக்குமிடத்தை அறியேனென்று சொல்லுகிறான்.

(1) விசுவாமித்திரர் தன் யாகத்தை ரட்சிக்க ராமனை யாசித்தபொழுது அதை அழிக்கும் மாரீச சுபாகுவைப் பற்றிச் சொன்னார். அவர்களுக்கு ராவணன் பக்க பலமாகவருகிறானென்றவுடன் தசரதர் அவனைப்பற்றின வரலாற்றைப் பூர்ணமாக அறிந்தவரானதால் 'அவனுடன் நான் யுத்தஞ் செய்யமாட்டேன்' னென்றார். ஆகையால் ராவணனைப் பற்றின விஷயங்கள் யாவும் ராமனுக்குத்தெரியாமலிருக்க நியாயமில்லை அப்பொழுது தசரதர் சொல்லாவிட்டாலும் சுபாகு மாரீசர்களை ஜெயித்ததைக் கேட்ட பிறகாவது அவர் ராமனுக்குச் சொல்லியிருக்க வேண்டும்.

(2) யாகத்தைக் கெடுக்க வந்த ராட்சசர்களையும் ராவணனையும் பற்றின விஷயங்களை ராமன் விசுவாமித்திரரைக் கேட்டிருப்பார். அவர்சொல்லியுமிருப்பார்.

(3) இட்சுவாகு வம்சத்தில் ஒருவரான அனரண்யன் ராவணனால் கொல்லப்பட்டதும், அவன் இறக்கும்பொழுது 'என் வம்சத்தில் பிறக்கும் ராமன் உன்னைக் கொல்வானென்று சபித்ததும் அந்த வம்சத்தரசர்களுக்கும்மந்திரிகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். ஆகையால் ராமனுக்கும் தெரியும்.

(4) வேதம் ஸ்மிருதி இதிகாச புராணங்கள் ராஜவம்ச சரித்திரங்கள் பூலோககோள வர்ணனை முதலியவைகளை ராஜ குமாரர்கள் அவசியம் கற்றிருக்கவேண்டும் அப்பொழுது சகல லோக கண்டகனை ராவணனைப் பற்றித் தெரியாமலிருக்க நியாயமில்லை.

(5) சூர்ப்பனகை ராம லட்சுமணர்களிடத்தில் ராவணனுடைய வரலாற்றைச் சொன்னாள்.

(6) அவளை அங்க ஹீனஞ்செய்து கரதூஷணர்களைக் கொன்றது முதல் ராட்சசர்கள் தனக்குக் கெடுதி செய்ய சமயம் தேடிக்கொண்டிருக்கிறார்களென்று ராமனே பல தடவை சொல்லியிருக்கிறார். சீதையை அவர்களைத் தவிர வேறொருவனும் எடுத்துப் போகத்துணிய மாட்டானென்று சுலபமாக அறியலாம். தங்கையைக் கெடுத்தவனைத் தண்டிப்பதற்குத் தமையன் வருவானென்று தெரியாதா? கரதூஷணனைப் போல் அவனும் யுத்தத்திற்கு வருவானென்று எதிர் பார்ப்பது நியாயமே.

(7) தன் சத்ருக்களின் பலாபலங்களையும் வரலாறுகளையும் பூரணமாக அறிய வேண்டியது அரசர்களுடைய தருமம்.

(8) மேலும் தண்டகாரண்யத்து ரிஷிகளிடத்திலிருந்து ராவணாதி ராட்சசர்களின் விருத்தாந்தம் யாவற்றையும் கேட்டு அறியாமலிருக்கமாட்டார்.

(9) மேலும் ராவணாதி ராட்சசர்களால் தங்களுக்கு நேரும் கெடுதிகளைப் பற்றித் தேவர்கள் மகாவிஷ்ணுவிடத்தில் முறையிடவில்லையா? அவருடைய அவதாரமே ராமனல்லவா? பூமியில் மனுஷ்ய தேகத்தை எடுத்ததால் அவருடைய அகண்டமான ஞானம் அழிந்ததா?

மேலே கண்ட ஒன்பதும் சீனிவாசய்யங்காருடைய குறிப்பாம். இராமன் தெய்வத்தின் தோற்றமாக இருந்தாலல்லவோ அவன் பலவும் அறிந்தவனாக இருப்பான்? அவன் அற்ப மனிதனே!

இராமன் சடாயுவிற்குப் பிரேதக் கிரியைகள் செய்து பல மான்களைக் கொன்று அவைகளின்மாமிசங்களைப் பிடித்துப் பிண்டம் வைத்தனனும். இவ்வளவு இழிதகைமையனை மனிதரிலும் கேடு கெட்ட மனிதனென்றே கூற இயலாதபோது தெய்வமென்று கூறுவதெப்படி? கருணையற்றவனாய் எத்தனை உயிர்ப்பிராணிகளை இவ்விராமன் கொன்றான்? எத்தனை உயிர்ப் பிராணிகளுக்கு இவ்விராமனுடைய வயிறு சுடுகாடாயிற்று? எள்ளளவாவது இரக்கமுள்ளவனாக இருந்திருப்பானேல் இவ்விராமன் இத்தனை உயிர்களைக் கொன்றிருப்பானா? நிற்க, இனி கம்பர் புரளியைக் காண்பாம்.

இராமன் சடாயுவைக் கொல்லப் போனதும், அது கண்டு சடாயு, "நான் கொல்லப்பட்டேன். இன்னும் நீயும் என்னைக் கொல்ல வேண்டாம்" என்று கூவியதையும் கம்பர் மறைத்துவிட்டு இராமனை மிகவும் நல்லவனைப் போலக்கதையைமாற்றி எழுதுகிறார். மூச்சற்றுக் கிடந்த சடாயுவைக் கண்ட இராமன் அதன் மேல் விழுந்து மூச்சற்றுப் புலம்பியிருந்ததாகவும், பின்னர் சடாயுகொஞ்சம் உணர்வு பெற்று இராமனையும் தம்பியையும் பார்த்ததாகவும் கம்பர் கூறுகிறார்.

சடாயு இராமனை நோக்கி, 'நீ மனைவியை இழந்த விதம் எப்படி?' என்று கேட்டதாகவும் இலக்குவன் மாய மான் வந்தது முதல் நடந்த செய்திகளைக் கூறியதாகவும் அது கேட்டுச் சடாயு அவர்களைத் தேற்றியதாகவும் கம்பர் புதுக் கதை கட்டுகிறார். அவர் கதை இத்துடன் நிற்கவில்லை சடாயு இராமனைப் பலவாறு தேற்றி இராவணன் தன்னைக் கொன்ற செய்தியைக் கூற இராமன் உடனே அளவிலடங்காத சினம் கொண்டு உலகங்களை யெல்லாம் அழிக்கத் துணிந்து ஆரவாரம் செய்கிறான் என்றும் சடாயு இராமனைக் கண்டித்துத் தேற்றுகிறானென்றும் கம்பர் கதை கட்டிக் கொண்டுபோகிறார். இது முன்னர் இலக்குவன் முன் இராமன் சினந்ததும் அவன் தேற்றியதுமாகிய செய்தியை அவ்விடத்திற்கூறாதுவிடுத்து இங்கே புதுக் கதை போல சடாயுமுன் நிகழ்ந்ததாகக் கூறுகிறார்.

சடாயு இறந்தவுடன் இராமன் யாது செய்வதென வருந்த, இலக்குவன் கவலையுறாது பகைவரைக் கொல்வதே செய்ய வேண்டிய செயல் என்று கூற இராமன் கவலை நீங்கி சடாயுவுக்குப் பிரேதக்கிரியை செய்யத் துணிந்தனன் எனக் கூறுகிறார் கம்பர். இராமன்பலமான்களைக் கொன்று பிண்டம் வைத்துப் பிரேதக் கடன் முடித்த செயல்களைக் கம்பர் மறைத்து விட்டு மறைமுகமாக "வேதப் பலிக்கடன் முற்றினன்" என்று மட்டும் கூறுகிறார். கம்பர் புரளிக்கும் ஓர் அளவுண்டோ? இனி மேற் செல்லுதும்:

---

வியாபாரத்திற்கழகு —
— விளம்பரம் செய்தல்

---


அற்புத

## எலெக்டிரிக் மோதிரம்

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பெற்றது !



இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர்வரை ஆண் பெண் இருதாரத்தார்களும் உபயோகப்படுத்தலாம் இம்மோதிரத்திற்குள்ளிருக்கும் எலக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள் நோய்வாராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும் நோயை குணப்படுத்திக் கொள்வதற்கும் இம்மோதிரத்தை உபயோகியுங்கள் !

இம்மோதிரமானது 8-வித லோகங்களைக் கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பெற்றிருக்கின்றது. இதை விரலில் போட்ட மாத்திரத்தில் அதினின்றும் எலெக்டிரிக் பவர் மின்சார சக்தி வெளியாகி விரல் மூலம் அது தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள். வைசூரி, இன்புளுயன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம் சூலை முதலிய கொடூரமான வியாதிகள் அணுகாது. நற்சாட்சிப் பத்திரங்கள் பிரதிதினமும் வந்து குவிந்துக் கொண்டிருக்கின்றன.

மோதிரம் 1-க்கு விலை ரூபா 1 8 0
மோதிரம் 3-க்கு விலை ரூபா 3 12 0

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

3

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சேஷன். இந்த பிரமக் கூட்டத்தின் கதையான இராமாயணத்தைப் படித்தால் அவை நமக்குக் கற்பிக்கும் தேசிய மென்னவென்பதே கேள்வி.

இராமாயணம் படித்தால்ராமனைத் தெய்வமாக நினைக்கலாம். இளைய தாரத்திற்குவசப்பட்ட தகப்பனுடைய மனோபாவனை தெரிந்தும் இளைய தாயாரின் வார்த்தையைக் கேட்டுக் காட்டுக்குப் போகலாம். பட்டை நாமம் போட்டு பஜனைபண்ணி டாக வதாளாகி வயிற்றை நிறைத்துக் கொள்ளலாம். பண்டிதனென்றுசொல்லிப் பணமும் சம்பாதிக்கலாம். பலரைத்திருப்பதி, ஸ்ரீரங்கத்திற்குப் போகச்சொல்லலாம் தத்தியோதனம் புளியோதரை அக்கார அடிசில் அய்யங்கார்களுக்கு அளிக்கலாம். அவர்கள் வடகலை தென்கலை சண்டைபோட்டு வெள்ளைக்காரனுடைய நியாயத்தீர்ப்பிற்குஎதிர்பார்க்கலாம். திருப்பதி மகந்துவுக்கு நீலகிரி மலை வாசத்திற்குப் பங்களா இருப்பது போலவே கொடைக்கானலிலும் பங்களா கட்டிக் கொடுக்கலாம். மகந்துவை வைத்தியத்திற்குச் சென்னைக்கனுப்பி எல்லா வியாதியையும் கோரிக்கையையும் தீர்ப்பார் என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கும் திருப்பதி வெங்கிடாசலபதியின் சக்தியை டாக்டர் மக்கம்சனிடம் ஒப்படைக்கலாம். அந்த மகந்துவுக்குக் காணிக்கை கொடுக்கலாம், ஸ்ரீரங்க ரங்கநாதர் பேரைச் சொல்லி பிரைசு சீட்டுப்போட்டு பூமி வாங்கி பார்ப்பான் வயிறு நிறையத்தின்று கோவில்களில் குடியையும் விபசாரத்தையும்பெருக்க உதவி செய்யலாம்; தாழ்ந்த ஜாதியார்கள் என்று அநேகரை கோவிலுக்குள் விடாமல் தடுக்கலாம். ஊருக்கு வெளியில் அவர்களை இருக்கச்செய்யலாம். அனந்த சயனப் பிரபுவை அலங்கரித்து அநேகரை அன்னிய மதத்திற்குப் போகச்செய்து அவர்களும் போய்ச் சேர்ந்து அவர்களே பின்வந்து நம்மையும் நம் தெய்வங்களையும் உதைக்கச் செய்ய நாம் குய்யோ முறையோ வென்று கூவி வெள்ளைக்காரர் காலில் விழச்செய்யலாம்; எல்லாச்சேவையை விட விஷ்ணுவின் பாத சேவையல்லவோ நமக்குப் பெரியது? விஷ்ணுவோ எல்லா இடத்திலும் நிறைந்தவர். அப்பொழுது எல்லாருடைய பாத சேவையும் விஷ்ணுவின் சேவைதானென்று திருப்திப்படலாம்; மூக்குக்கு முன்னால் 12 அங்குல தூரத்தில் எலுமிச்சம்பழத்தை ஆட்டுவதாக திரு. வடிவேல் செட்டியார் சொல்லுவதுபோல் ஆட்டினாலும் ஆட்டட்டும். திரு. கலியாணசுந்தர முதலியார் சொல்லுவதுபோல கவியும் [illegible] லோகத்திலும் இபத்தை வனப்பு ஒலித்தாலும் ஒலிக்கட்டும். [illegible] வெளியிலிருந்து இலக்கணம் உள்ளிருந்து கருத்து இரண்டிலும் மறைந்து பண்டிதர்கள் கண்ணுக்குப் பட்டாலும் படட்டும். இதுவரையிலும் கண்ட கருத்தைக் கரைக்குக் கொண்டுவராமல் இன்னும் அதே கவிக்குப் பொருள் காண கவிராயர்களெல்லாம் கட்டி அழுதாலும் அழட்டும் இன்னும் பண்டிதர்களெல்லாம் சேர்ந்து கவியின் வனப்பையும் இலக்கணத் தோப்பையும் இலக்கிய இரத்தையும் கண்டு சொல்லடுக்கின் தோற்றத்தில் சோர்ந்து விழுந்தாலும் விழட்டும். இத்தனைக்கும் மேல் வைகுந்தம் வந்தாலும் வரட்டும். இப்பொழுது நமக்குவேண்டிய தேசியம் அதில் என்ன இருக்கிறது?

காபிசாலையில்வேண்டும், பக்குவம் தவறினால் தலைவலிவந்துவிடும் அதற்கு அமிர்தாஞ்சன் வேண்டும். அதன் பிசினெட்டின முகத்தைக்கழுவசோட்பு வேண்டும். நாம் விட்டாலும் பெண்களுக்குக் காப்பி கட்டாயம் வேண்டும். பெண்களுக்கு கஷ்டம் தெரிந்தாலும் பிள்ளைகள் அழுகின்றன. அவர்களைப் பயப்படுத்தவசனும் வரும் பந்துகளுக்கென்ன செய்வது? அவர்களைத் தள்ளினாலும் பண்டிதர்கள் வீட்டிற்குப் பணக்காரர்கள் வந்துவிடுவார்கள். அவர்களிடம் ராமாயண புஸ்தகத்தைக் காட்டிக் கவிக்கு விசேட அர்த்தம் சொன்னாலும் காப்பி அவர்களுக்கு கொடுக்காவிட்டால் மரியாதை பூரணப்படுவதில்லை ஆறாயிரமைல் தூரத்திலிருந்து நடந்து இங்கு நம்மவர்களாலேயே காப்பிசெய்து நமக்கேவிற்று நடும் குடித்து அதனால் வந்தவியாதியை அவர்கள் மருந்தாலேயே தீர்த்து அளவற்றபொருள்களை அடைந்து வாழும்தேசியத்துடன் "சூத்திரன்" தவசு செய்தால் அவன் தலையை வெட்டப் புறப்பட்டுக் கடவுள் தேசியத்தைக் கூடத் தடைசெய்த ராமாயணத்தால் எந்த தேசியம் நமக்கு வரும்? இன்னும் அநேக விஷயம்எழுதவேண்டும். இடமில்லை. மறுகடிதத்தில்:

## சீர்திருத்தமடைந்த சுயமரியாதைத் திருமணம்.

சமதர்மம் ஓங்குக!

7-7-29-ல் பிரனுக்கு கள்ளர் மஹாஜன சங்கத்தில் திரு. தம்பியப்ப பல்லவராயர் திருமகன் வெங்கடாசல பல்லவராயருக்கும், திரு. ராமசாமி வன்னியர் செல்வி ஸ்ரீமதி சுப்பம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. திருமண மண்டபத்தில் ஆண்மக்களும் பெண்மக்களுமாக சுமார் 500 பேர்களுக்கு மேல் கூடியிருந்தார்கள். அக்கூட்டத்தில் எ. வீரப்பிள்ளை, ஜே. பி. இந்தியன் ரிக்ரியேஷன் கிளப் பிரனுக்கு, எம். ராஸ் லைஸ் பிரஸிடெண்ட் இந்தியன் ரிக்ரியேஷன் கிளப், சுப்ரமண்ய வாண்டையார், பொக்கிஷாதிபர், வே முகையதீன், ஜெனரல் காரியதரிசி, இந்திய [illegible] அஸோஸியேஷன், பி. காளியப்பபிள்ளை, பிரஸிடெண்ட், வாலிப சங்கம், எம். வடிவேலு கண்டியர், ரத்தபாஞ்சான் வி. கிருஷ்ணஸாமி வாண்டையார், கள்ளர் மஹாஜன சங்கம், சுவாமி அற்புதானந்தர், ஆர். ஐயாரு, "பேரா" இந்து மஹாஜன சங்கம், ஜெனரல் செக்ரடரி, கோபால கிருஷ்ணன், சமரஸ சன்மார்க்க சங்கம் ஸ்ரீமான்கள் கே. என் அய்யாவு வாண்டையார், பி. சீனிவாஸ வாண்டையார், எம். ஆர். ராஜகோபால் பல்லவராயர், அ. பக்கிரி பல்லவராயர், சி. கோ. வெங்கடாசல வாண்டையார், பஞ்சு முதலியார், எம். எஸ். நாதன், ஜே. பி. கிருஷ்ணசாமி பிள்ளை வ. மி. சோமசுந்தரம் பிள்ளை ம. நா. சுப்ரமண்ய பிள்ளை, கே. சுப்பையாபிள்ளை, இன்னும் அநேக பெரியோர்களும் காணப்பட்டனர்.

மணமக்களிருவரும் பூமாலைகள் அணிந்து கம்பளத்தால் அணிவிக்கப்பட்ட மேஜையின் மேல் அமர்ந்திருந்தனர். இக்கலியாணத்தை நடத்தி வைக்கும் பேரா இந்து மகாஜன சங்க காரியதரிசி திரு. ஐயாரு அவர்களின் திருவாக்கினால் தமிழ்மறை ஓதிய பின்னர் சுவாமி அற்புதானந்தர் சுமார் ஒரு மணி நேரம் வரையில் மணமக்களுக்கு, "மணம்" என்பதைப்பற்றியும் ஒருவரோடொருவர் தங்கள் சுற்றத்தாருடனும் சன சமூகத்திலும் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும், அவர்களின் கடமை இன்னதென்றும் எடுத்துரைத்தார். மணமக்களாலும் வந்திருந்த பெரியோர்களாலும் நிச்சப்தமாய் கவனிக்கப்பட்டது. பிறகு மணமகன் பெண்ணைத் தனது மனைவியாகக் கொள்வதாயும் வாழ்விலும் தாழ்விலும் நீங்கள் அன்புடன் எக்காலத்திலும் உடனிருந்து வாழ்வதாகவும் பலருமறிய உறுதிமொழி கூறி எடுத்துக்கொண்டார். அதே மாதிரியாக பெண்ணும் எடுத்துக்கொண்டார். பிறகு திரு. ஐயாரு அவர்கள் ஒரு பூமாலையைக் கொடுத்து மணமக்களிருவரும் ஒருவர்க்கொருவர் மாற்றிக்கொள்ளச் செய்தார் பிரனுக்கு கள்ளர் மகாஜன சங்கம் அக்கிராசனாதிபதி வி. கிருஷ்ணசாமி வாண்டையார் அவர்கள் தலைமையில் சுவாமி அற்புதானந்தர். ஜெ ர. ஐயாரு, சமரச சன்மார்க்க சங்கத்தார் சுயமரியாதை சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

பின்பு ஓர் சமபந்தி போஜனம் நடைபெற்றது. பரந்த நோக்கமுடைய அனைவரும் இதைப்பின்பற்றுவது நம் நாட்டின் அதிர்ஷ்டமேயாகும். பொதுவாக பிராமணர்களை நீக்கினாலும் அவர்கள் காட்டிய குருட்டு வழக்கங்களை ஒழிக்காமலிருப்பது பயனில்லை.

இம்மணம் அதிகப் பணச்செலவின்றியும் காரணமற்ற சடங்குகளற்றும் உண்மைக் கலியாணமாக யிருந்தது மணமக்களுக்கும் வந்திருந்த பெரும்பாலோருக்கும் தெரிந்திருக்க தமிழ்ப் பாஷையிலேயே இம்மணம் நடைபெற்றது என்று சுயமரியாதைத் தொண்டர் திரு. கே. என். மருதமுத்து வாண்டையார் தெரிவிக்கிறார்.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

(1916 ஹூ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுப்போம். மற்ற விவரத்திற்கு நேரில் எழுதவும்.


மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,

(16) மைலாப்பூர், மதராஸ்.

பாக்கெட் டிடக்டிவ்

அல்லது

லீபாக்ராஸ் கோப்



என்னும் நூதன அமெரிக்கக் கருவியை அசலுக்கும் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம். இக்கருவியினால் திரும்பிப் பாராமலே உங்கள் பின்னேயும் முன்னேயும் நடப்பதைத் தெரிந்து கொள்ளலாம். உமது காதலியின் செய்கைகளை அவளறியாமலே நீங்கள் தெரிந்து கொள்ளலாம். இக்கருவி வெகு தமாஷை உண்டு பண்ணும். ஒவ்வொருவருக்கும் அவசியம். நான்கு லீலாவினோத பிரெஞ்சு போட்டோக்கள் இனாமாக அனுப்பப்படும். ஒரு கருவியின் குறைந்த விலை ரூ. 1—8—0.

இன்டோ பாரின் கம்பெனி,

நெ. 27 பீட், ஜி. டி. மதராஸ்.


சுயமரியாதையே

சுகவாழ்வு

அதிநூதனம் ! மிக ஆச்சரியம் !!

மாதம் 100 ரூபா முதல் 300 ரூபா வரை சர்பாதிக்கக்கூடிய

## சிறிய சைஸ் தையல் இயந்திரம்



இது சாதாரண பெரிய தையல் மெஷின்களைப் போலவே சிறிய சைஸில் உள்ளது. இதை மேஜையின் பேரிலோ காத்சாலியின் பேரிலோ வைத்து முடுக்கி எந்தவிதமான தையல் வேலையும் செய்யலாம். தையற்காரர்களிடம் நீங்கள் போகவேண்டிய அவசியமேயில்லை. தையற்காரர்களும் 100, 200 போட்டு பெரிய மெஷின்கள் வாங்க வேண்டியதில்லை. சட்டைகள், கோட்டுகள் முதலியன எதுவும் இலகுவில் தைக்கலாம். இந்த மெஷினில் ஒரு குழந்தையும் வேலை செய்யலாம். இதைச் சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் போட்டு ஜாக்கிரதையாகப் பாக்கிங் செய்து அனுப்பப்படும். 5 வருஷம் காரண்டியுள்ளது.

விலை ரூபா 4-12-0. தபால் செலவு வேறு.

உடனே எழுதுங்கள்.

Agents:—
PARIS EMPORIUM George Town, Madras.



## குடி அரசு புத்தகாலயம்

வேதப்புரட்டை வெளியாக்கும்,

| | |
|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு ... | 0—2—0 |

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
14, மவுண்ரோட், மதராஸ்.


(எப்)



நூதனம் ! அதிசயம் ! !

குறைந்த விலைக்கு விற்பனை !!!

## நெ. பி. 1. எலெக்டிரிக் மேஜை விளக்கு



இந்த விளக்கு மேஜையின்மேல் வைக்கக்கூடியதாய் பல்புடனும் மேல் மூடுடனும் இருக்கிறது. சுவிட்சைப் போட்டவுடன் பளிச்சென்று நல்ல பிரகாசத்தை நாலாபக்கமும் பரப்புகிறது. விசேஷ சமயங்களிலும், சபைகளிலும், கூட்டங்கள் மத்தியிலும், இந்த விளக்கை வைத்துக்கொண்டால் ஒருவித கஷ்டமுமில்லாதிருப்பதோடு மிக அழகாகவுமிருக்கும். மாணக்கர்கள் மேஜையின்மீது வைத்துப் படிக்கச் சௌகரியம். உடனே எழுதுங்கள். இந்த தினுசில் கொஞ்சம்தான் கையிலிருக்கின்றன.

குறைந்த விலை ரூ. 4—8—0

தபால் செலவு தனி.

லக்ஷ்மி டிரேட்ஸ் கம்பெனி
173, தங்கசாலை வீதி, மதராஸ்.

(30)


## சுயமரியாதை மாகாணச் சங்கம்

காரியதரிசி,
சுயமரியாதை மாகாணச் சங்கம்,
"திராவிடன்" பதிப்பகம்,
14, மவுண்ட் ரோடு சென்னை.

ஐயா,

என்னைத் தங்கள் சங்கத்தின் அங்கத்தினராய்ச் சேர்த்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இத்துடன் ஓர் ஆண்டு கட்டணம் 0—2—0 அனுப்பியிருக்கிறேன்.

பெயர் ..................................................

விலாசம் ..................................................


..................................................

(இதில் கையொப்பமிட்டு வெட்டி அனுப்பவும்)

(F)


முந்துங்கள் ! முந்துங்கள்!!

## விலை ரூபா 2—12—0 தான்



130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி
சாமான்கள் விவரம்.


14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா; ரோல்டுகோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை ஷர்ட்டு பொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான கத்தி 1; காமிநேஷன் நூதனசாவி விளையும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; சென்ட் மணிபார்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0.

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி,
தபால்பெட்டி 119, மதராஸ்.

(3)



## A GOLD PLATED *LEVER* WRIST WATCH FOR. Rs. 6—14—0.




எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான டைம் காட்டும். ஸிலிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச காலைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல, 10 வருஷங்கள்கூட ரிப்பேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். வீணிலே ஸிலிண்டர் கடியாரங்களில் பணத்தை இழக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக்கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் வரை சரியாக ஓடவில்லையென்றால் வாபஸ் ஒப்புக் கொள்ளப்படும். 5 வருடம் காரண்டியுள்ளது. இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. ஸ்டாக் கொஞ்சம். உடனே எழுதுங்கள்.

Fancy Watch House,
19, G. P. O. MADRAS,

(8)

நீங்கள் ஷணிக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறீர்? 
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி !!

## சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief For Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீட்சித்துப் பார்ப்பதவசியம்.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பி 1க்கு ரூ. 1—4. தபால்கூலி பிரத்தியேகம். பினாங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் ரூ. 2—8. அனுப்பவேண்டும்.

பிரொப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
(12) அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.



## நான் யார் தெரியுமா?

ஒரு வருஷத்திற்குள் 8000 பிள்ளைகளைப் பெற்றவன் நான்!



என்னைப்பற்றி எந்த ஊரிலே வேண்டுமானாலும் கேளுங்கள். எங்கப்பன் மாதா மாதம் வந்து எங்களைக் குதூஹலப்படுத்தி விட்டுப் போகிறானென்ற பெருமையோடு சொல்லிக் கொள்வார்கள். தினசரி முப்பது அல்லது நாற்பது புதிய பிள்ளைகளைப் பெற்று வருகிறேன். இன்னும் சலிக்காமல் இருக்கிறேன். குறைந்த பட்சம் 30,000 பிள்ளைகளையாவது பெற வேண்டுமென்பது நோக்கம். ஆனால், அப்பனைப் பார்க்கவேண்டுமானால் காசு கொடுத்துத்தான் பார்க்கவேண்டும். வருஷா வருஷம் 1 ரூபாய் கொடுத்தால் என்னை வருஷத்திற்குப் பன்னிரண்டு முறை பார்க்கலாம். ஒரு தடவை மாதிரியாகப் பார்க்கவேண்டுமானால் அரையணா செலவு செய்து ஒரு கார்டு எழுதுகைள் மறுகாளே உங்கள் இருப்பிடம் தேடி வந்து குதித்திடுவேன். என் பெயர் படத்தில் பாருங்கள். என் இருப்பிடம்,

(3) 244, தங்கசாலை வீதி, சென்னை.



## மகா மன்மத சித்தாமணி லேகியம்:


அபாரமான தாது புஷ்டியும், நீடித்த போக சக்தியும், இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும், பரமானந்த சுறுசுறுப்பும், தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரீக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு நயம். 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0. டை நெ. 2. லேகியம் டின் 1 க்கு ரூ. 2—0—0. வி. பி. வேறு. சகல நோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனா பஜார், மதராஸ்.
(8)



## எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை

ரோல்டு கோல்டு "கோல்டன்" புதுமாடல் கைக்கெடியாரங்கள்.




இதிற்கண்டபடி எந்த வேஷப் வேண்டுமானாலும் அனுப்பப்படும் வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்தரவாதமானது.

ரூபா 4—15—0 வி. பி. வேறு.

ஜீனன் வாட்சு கம்பெனி,
(3) மிண்ட் பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



பழனி

## ஆர். எம். நாராயணசாமி பிள்ளை

### அவர்களின் அமிர்த சஞ்சீவி மாத்திரை

சகல வியாதிகளுக்கும் தேவ அவுஷதமென உலக மறிந்தது.

### தீரும் வியாதிகள்

குஷ்டம் 18க்கும், மேகம், 20க்கும் 7 வித காசம்க்ஷயம், ஈளை, இருமல்கட்கும், குன்மம், வயிற்று வலி 8க்கும் இவ்வித கொடியரோகங்கட்குத்தக்க அனுபானத்துடன் அமிர்த சஞ்சீவி மாத்திரை ஒரு மண்டலம் விலை ரூ. 5-0-0. ½ மண்டலம் ரூ. 3-0-0. ஆர்டர் செய்வோர் வியாதி விபரம் தெளிவாய் எழுதவேண்டும்.

### அமிர்த சஞ்சீவி மாத்திரை

சுரம் 64, வாதம் 80, பித்தம் 48, வாய்வு 300, ஜன்னி தோஷம், இரிவு, வலிப்பு, சயித்தியம் 108, ஸ்திரீகள் மாதாந்திர ஒழுக்கமில்லாத கெர்ப்பநோய் சம்பந்தமான வயிற்றுவலி சகலத்திற்கும், சகல பாம்புக்கடி, பொரி விஷம், கடிவிஷம் 800 முதலிய தீராதரோகமெல்லாம் நமது அமிர்த சஞ்சீவி மாத்திரை தீர்க்க வல்லமை உடைய தென்பதை யாவரும் எளிதில் வாங்கி உண்மை தெரியுமாறு சொற்ப விலைக்குக் கொடுக்கப்படுகிறது.

டை மாத்திரை சுகபேதிக்கும் சாப்பிடலாம்
புட்டி 1 க்கு ரூ. 2-0-0. சிறிய புட்டி ரூ. 1 0-0.
தபால் செலவு வேறு.

வைத்தியபதி R. M. நாராயணசாமி பிள்ளை,
(27) அமிர்த சஞ்சீவி டிப்போ, பழனி, S.I.Ry.



## கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னிஷ்கள், பிஸ்கத்துகள், பென்விலகள், பதவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள்கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் எரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது.

ரூபா 1—8—0
உடனே எழுதுங்கள்.

வாஸன் புஸ்தகசாலை,
(3) 244, தங்கசாலை வீதி, மதராஸ்.



## சிற்றின்ப வெற்றி

இந்த அருமையான நூலில், ஸ்திரீ, புருஷர் அனுபவிக்க வேண்டிய சம்சார சுகங்கள், குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் ஆகிய அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. 475 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 2—4—0.

| | |
|---|---|
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0—0 |
| முத்தத்தின் மர்மம் | 1—8—0 |
| மதனுகமம் | 1—0—0 |

தபால் கூலி வேறு—லிஸ்ட் ஜாப்தா இனாம்.

விலாசம்:—

லக்ஷ்மண ப்ரசாத் கம்பெனி,
(25) (டிபாட் 19) புதுச்சேரி


திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.